விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 23 வெள்ளிக்கிழமை (08.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 020

# அச்சுறுத்தல் ஏற்படாதவாறு காணிகள் விடுவிக்கப்படும்!

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

வடக்கில் இதுவரை விடுவிக்கப்படாதுள்ள காணிகளை தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் படிப்படியாக விடுவிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மக்களை மீள்குடியேற்றத் தகுதியான இடங்களை அடையாளம் கண்டு மீள்குடியமர்த்தவுள்ளதாகவும் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர் மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் அடுத்த வாரம் ஆரம்பம்!

### அமைச்சர் மங்கள தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறு திக்கட்டப் போரின் போது மேற் கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள்

24ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலையில் விரைவில் 10ஆவது பீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் பத்தாவது பீடமாக தொழில்நுட்ப வியல் பீடத்தை அமைப்பதற்கு பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கொகையளவில் சம்மதம் தெரி வித்துள்ளதாக தெரிய வருகின் றது. இத் தொழில்நுட்பவியல் பீடத்தை கிளிநொச்சியில் நிறுவுவ

24ஆம் பக்கம் பார்க்க

## பணம் பெற்ற அதிபர் இடைநிறுத்தம்

(கண்டி)

கண்டி கிங்ஸ்வுட் கல்லூரியின் அதிபரின் பணி இடைநிறுத்தப்பட் டுள்ளது. பாடசாலை மாணவர்

23ஆம் பக்கம் பார்க்க

## நோர்வே அமைச்சருடன் சம்பந்தன் கலந்துரையாடல்



(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச் சருக்கும் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலை வருமான இரா.சம்பந்தனுக்கும்

23ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் மறுசீரமைப்புக் குறித்து தமிழ்க் கூட்டமைப்புடன் பேசத்தயார்

### அமைச்சர் மனோ அழைப்பு

(கொழும்பு)

பிரிபடாத ஒரே நாடு என்ற அடிப்படையில் இலங்கைக்குள் அதிகாரங்களையும், வளங்களையும் நியாயமாக பகிர்ந்து கொண்டு வட கிழக்கு ஈழத்தமிழர்கள், தென்னிலங்கை இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய தமிழ் பேசும் மக்கள், சிங்கள சகோதர மக்களுடன் இணைந்து புதிய இலங்கையை தோற்றுவிக்கவே நாம் அனைவரும் இணைந்து இந்நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்தினோம்.

இன்று நாம் அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கின்றோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு வெளியில் இருகின்றது. ஆனால், இந்த யதார்த்தம் கூட்டமைப்பும், கூட் டணியும் இணைந்து செயற்படுவதையும், ஒருவருக்கு ஒருவர் துணை இருப்பதையும் ஒருபோதும தடுத்து விடாது. எனவே பொது நிலைப்பாடுகளை உருவாக்கும் நோக்கில் கலந்துரையாட தமிழ் தேசிய கூட்டமைப்பு அழைப்பு விடுக்குமானால், அந்த அழைப்பை

24ஆம் பக்கம் பார்க்க

## சட்டி, முட்டி, பானைகளை எண்ணிக் கொண்டிருக்கிறேன்

### மகிந்த ராஜபக்ஷ கிண்டல்



(கொழும்பு)

வீட்டில் உள்ள சமையல் அறையில் இருக்கும் சட்டி, முட்டி, பானைகள் என சமையல் பாத்திரங்களை எண்ணிக்கொண்டிருப்பதால், தற்போது தான் ஊடகங்களில் தோன்றுவதில்லை என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பின

24ஆம் பக்கம் பார்க்க

## விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்தார் முதலமைச்சர்

### மக்களின் தேவை குறித்தும் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண் மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு வடக்கு மாகாண முதலமை

23ஆம் பக்கம் பார்க்க

## கோத்தபாய நேற்று ஆணைக்குழுவில் ஆஜர்

(கொழும்பு)

அவன்காட் தொடர்பான விசாரணையை முன்னிட்டு முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று பிரசன்னமாகியுள்ளார்.

முன்னாள் கடற்படை தளபதி சோமதிலக திசாநாயக்க, பெற்றோலிய வள கட்டுப்பாட்டு திணைக்களத்தின் முன்னாள் தலைவர் சொய்சா உள்ளிட்டோரும் இதன்போது பிரசன்னமாகியுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய மக்கள்

23ஆம் பக்கம் பார்க்க

## ஓராண்டு ஆட்சியின் நிறைவு இன்று

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஏற்படுத்தப்பட்ட ஜனநாயக ஆட்சியின் ஓராண்டு பூர்த்தியையிட்டு இன்று நாடு முழுவதிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான தேசிய விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



நாககன்னி அம்பாள் துணை

## சித்தன்கேணி- அருள்மிகு ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம்

### தைப்பொங்கல் பெருவிழா

**கொடியேற்றம் 08.01.2016 வெள்ளி 12 மணி**
**தீமிதிப்பு 15.01.2016 வெள்ளி 12 மணி**

கிரியைகளை நிகழ்த்துபவர் :
**சித்தஞானகுரு இந்திரன் ஐயா**

சிறப்புரை :
**பேராசிரியர் மா.வேதநாதன்**

சித்தஞானகுரு இந்திரன் ஐயாவும்
(3409) ஆலய தொண்டர்களும்

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கரவெட்டி

### அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் இதுவரை காலம் எமது முன்பள்ளி ஆசிரியை திருமதி றோகினி கருணானந்தன் வீட்டில் இயங்கிவந்த நெல்லியடி முன்பள்ளி 11.01.2016 ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நெல்லியடி அரசடி வீதியில் உள்ள தச்சை ஐங்கரன் அற நெறிப் பாடசாலையில் (கரவெட்டிப் பிரதேச வைத்திய சாலைக்கு அருகில்) இயங்கவுள்ளதென்பதனை பெற் றோர்களுக்கு அறியத்தருகின்றேன். ஏற்கெனவே பதிவு செய்த மாணவர்கள் குறித்த இடத்தில் கல்வியைத் தொடரலாம் எனவும், இவ்வருடம் புதிதாக சேரவுள்ளவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பெற்றோர்களுக்கு மேலும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை**
**கரவெட்டி.**
**07.01.2016**
(3405)

# நெடுந்தீவு யுவதி திடீர் மரணம்

நெடுந்தீவு யுவதி ஒருவர் மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் நயினாதீ வில் இடம்பெற்றுள்ளது.

இரண்டாம் வட்டாரம் நெடுந்தீவைச் சேர்ந்த சிவநேசன் கிருஷா (வயது-22) என்ற யுவதியே மரணமடைந்தவராவார்.

குறித்த யுவதி நெடுந்தீவிலிருந்து தனது தந்தையை பார்ப்பதற்காக நயினாதீவுக்குச் சென்றுள்ளார். திடீரென அங்கு அவருக்கு ஏற் பட்ட வலிப்புக் காரணமாக சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் நயினாதீவு வைத்தியசாலைக்குச் கொண்டு செல்லப்பட்டு பின்னர்பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-12-30)

# பொதுக்கூட்டம்

வடமாகாண சிரேஷ்ட பள்ளிக்கல்வியா ளர்கள் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட் டம் நாளை 9-ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒன்றியத் தலைவர் ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினே ஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்விச் சமூக மேம்பாட்டில் ஆர்வமுள்ள ஓய்வுநிலைக் கல்விப்பணிப்பாளர்களும் அதிபர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கல்விப்புலத்தின் மேம்பாட்டிற்கான தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

தூயநகரம், மாணவர்களுக்கான வழிப்ப டுத்தலும் பள்ளிக்கல்வியின் பின்னரான செயற்பாடுகளும், சமூக இடையூறுகளைக் களைதல் சம்பந்தமான செயற்றிட்டங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக ஒன்றியச் செயலாளர் ஓய்வுநிலை அதிபர் ச.சிவநேஸ் வரன் தெரிவித்தார். (எ-11)

## மரண அறிவித்தல்

### அமரர் கிருஷ்ணர் குணரத்தினம்

(ஓய்வுநிலை தபால் ஊழியர், அல்வாய் வடக்கு)




அல்வாய் வடக்கு நதுவோலையை பிறப்பிடமாகவும் நாயன்மார்க்கட்டை வசிப்பிடமாகவும், தற்போது கொற் றாவத்தை மலையன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குணரத்தினம் அவர்கள் கடந்த 04.01.2016 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் பொன்னம்மா தம்பதி களின் பாசமிகு மகனும் அமரர்களான மார்க்கண்டு, புத்தி சிகாமணி (முருகேசு), புவனேந்திரன் ஆகியோரின் அன் புச் சகோதரனும், காலஞ்சென்ற குகவதியின் அன்புக் கண வரும், குணசீலன் (ஜேர்மன்), அனுரா (கனடா), குகநேசன் (கனடா), கௌசல்யா (ஆசிரியை-கொழும்பு), லக்ஸ்மணஸ்ரீ (பொறியியலாளர்-யூரோவில்), ரமணன் (சிலிங்கோ பொதுக் காப்புறுதி அலுவலர், அச்சுவேலி), ஜீவிதா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினி, சற்குணதாஸ் (கனடா), வனிதா (கனடா), உமாசங்கர் (உயிரியல்துறை, ஆசி ரியர்), அகல்யா (மேம்படுத்துகை உத்தியோகத்தர், மாவட் டச் செயலகம், யாழ்ப்பாணம்), சுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை), பிரசாத் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷா, நிரோசன், ஜெனிஷா, சாரங்கன், தாரகா, ராதிகா, மஹேறாற்கரன், பார்கவி, சாம்பவி, அபிலாசா, அகர்ஷன், அத் மிகா, அத்விகன், தனுஷ்ரிகா, லக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை இன்று (08.01.2016) காலை பத்து மணியளவில் மலையன் தோட்டம், கொற்றாவத்தை எனும் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலையன் தோட்டம் தகவல்:-குடும்பத்தினர்.
கொற்றாவத்தை. (இ) தொ.பே:-0779773002

## 31-ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 11.12.2015 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

### அமரர் ஞானசேகரம் வாசுதேவன் (தேவன்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.01.2016) வெள்ளிக்கிழமை காலை கீரி மலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் அன் புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவரின் இழப்பால் நாம் துயருற்றிருந்த போது நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தொலைநகல் மூலம் தொடர்பு கொண்ட வர்களுக்கும் அத்துடன் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டும் மலர் வளையங்களை யும் வைத்தும் அஞ்சலி செலுத்தியோருக்கும் இன்னும் பல வழிகளில் எமக்கு உதவி புரி ந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**44/10 மணல்தறை லேன்,** **- குடும்பத்தினர்**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
(3121)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

**தோற்றம்** 13 . 10 . 1959



**மறைவு** 11 . 12 . 2015

### அமரர் சாரதாம்பிகை மகேந்திரன்

கடந்த 11.12.2015 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அவர்க ளின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.01.2016) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் புனித வெள்ளக்கடற்கரை (சாட்டி) அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்றவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய பேர்சன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின் றோம்.

தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பு டன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.139, இராசாவின் தோட்டம்,** **- குடும்பத்தினர்**
**யாழ்ப்பாணம்.** **தொ.பே : 021 222 6754**
(3109)

# அமைச்சர் சஜித் மீது நிதிமோசடி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்க நிதியில் துஷ்பிரயோகம் செய்துள்ள வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சமுர்த்தி அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை சமுர்த்தி அதிகாரிகள் சங்கம் நேற்று முன்தினம் பத்தர முல்லையில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது.

இதில் கருத்து வெளியிட்டிருந்த சங்கத்தின் செயலாளரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான எஸ்.ஏ.டி. ஜகத்குமார மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அரசாங்க நிதியில் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதியுடனேயே அவர் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள செலவுகளை மேற்கொண்டிருந்தார்.

ஆனாலும் அவர் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அதேநேரம் அமைச்சர் சஜித் பிரேமதாச , சமுர்த்தி அமைச்சராக இருந்தபோது பெருந்தொகையான நிதி கையாடப்பட்டுள்ளது. சமுர்த்தி நிதியை அவர் இஷ்டம் போன்று தனது நெருங்கிய நண்பர்களுக்கு அள்ளிக் கொடுத்திருந்தார்.

இது குறித்து சமுர்த்தி அதிகாரிகள் சங்கம் முறைப்பாடு ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. எனினும் எங்களுடைய குற்றச்சாட்டு குறித்து இன்று வரையும் அமைச்சர் சஜித்திடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அதேநேரம் எங்களுடைய குற்றச்சாட்டுகளில் உண்மை இருந்த காரணத்தினாலேயே அமைச்சர் சஜித் திடமிருந்து சமுர்த்தி துறை சார் பொறுப்பு பறிக்கப்பட்டுள்ளது என்றும் ஜகத்குமார தெரிவித்துள்ளார். (இ-7)

# வறுமை ஒழிப்பு புரட்சியை ஏற்படுத்த ஒன்றிணைவோம்

## வடக்கு அமைச்சர் அழைப்பு

வடமாகாணத்தில்வறுமை ஒழிப்பு புரட்சியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட வேண்டுமென வட மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளளர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமங்கள் தோறும் ஒரு நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், கடந்த காலங்களில் பல கிராமங்களுக்கு சென்ற பொழுதுதான் எனது மனதை பல்வேறு விடயங்கள் பாதித்திருந்தது.

குறிப்பாக எமது இனத்திற்காக, எமது இனத்தின் விடிவிற்காக எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக தங்கள் உயிர்களை துச்சமென நினைத்து போராடிய எமது இளைஞர் யுவதிகள் இன்று வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

எழுந்து நடக்க முடியாத நிலையில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கின்றனர். பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கின்ற கணவனை இரவு பகலாக அருகில் இருந்து பார்க்க வேணடிய பொறுப்பு மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு இருக்கின்றது.

அதே நேரத்தில் மனைவி வேலைக்கு சென்றால்தான் அவர்களுடைய அன்றாட உணவு மற்றும் பிள்ளைகளின் கல்வித்தேவைகளை சமாளிக்கமுடியும். இவை இரண்டுக்கும் இடையில் ஒவ்வொரு மனைவியரும் படுகின்ற வேதனை, கஷ்ட துன்பங்கள் அளவிட முடியாதவை. இவ்வாறு எமது மாகாணத்தில் பல குடும்பங்கள் அன்றாடம் தமது வாழ்க்கையை வேதனையோடு நடத்தி வருகின்றன.

எமது இனத்தின் விடிவிற்காக போராடிய இவர்களது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பு எம்மெல்லோருக்கும் இருக்கின்றது.

வாழ்வாதாரத் திட்டங்களை பெற்ற பயனாளிகள் சராசரியாக நாளாந்தம் 300 ரூபாய் தொடக்கம் 500 ரூபாய் வருமானத்தை பெறுவதாகவும் தெரிவித்திருக்கின்றனர். நாளாந்தம் குறைந்தது 200 ரூபாய் வருமானத்தை நிலையாக பெறுவோமாயின் அதுவே நமது அபிவிருத்திக்கு அடித்தளமாக அமையமுடியும்.

ஒரு நிலையான அபிவிருததியை அடைய வேண்டுமெனில் ஒவ்வொரு நபர்களதும் முயற்சி அதிகமாக இருக்கவேண்டும். இல்லையெனில் மீண்டும் நாம் வறுமைக் கோட்டின் கீழ் தளளப் பட்டுவிடுவோம். அந்த வகையில் இந் நன்மையை பெற்றவர்கள் இன்று ஒரு வளர்ச்சிப் பாதையில் முன் னோக்கி நகர்கின்றார்கள் என்பதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் ஒரு வளமான ஆரோக்கியமான கல்விச் சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் முதலில் வறுமையை ஒழிக்க வேண்டுமெனும்உறுதிபுடன்வறுமை ஒழிப்புப் போராட்டத்தை (Revolution of Poverty Alleviation - RPA) ஆரம்பித்திருக்கின்றேன் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக எமது மாகாணத்தைகட்டிஎழுப்ப முனவர வேண்டும் என அவா் மேலும் தெரிவித்தாா். (இ-9)

# ஸ்மார்ட் மீற்றரால் மின் கட்டணம் அதிகரிக்குமா?



ஜனவரி 9ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஸ்மார்ட் மீற்றர் மூலம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்குமா? என்பது தொடர்பில் தற்போதே கருத்துத் தெரிவிக்க முடியாது என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஜனவரி 9ஆம் திகதி முதல் மின்சார சபையால் பல்வேறு புது திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அதற்கமைய வீடுகளின் மின்சார பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக "ஸ்மார்ட் மீற்றர்" எனும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் மின் கட்டணம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதா? என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர்,

"வீடுகளில் இரவு 7 மணி முதல் 10 மணிவரையிலேயே அதிகம் மின் பாவனை செய்யப்படுகின்றது. மின் அழுத்தி, ஸ்திரிபெட்டி, சலவை இயந்திரம் உள்ளிட்ட காலை மாலை வேளைகளில் பயன்படுத்த முடியுமான பொருட்களும் இரவு வேளைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இதனால் இக்காலநேரத்தில் பாரிய மின்வலு எமக்குத் தேவைப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இதனை எம்மால் சரியான முறையில் வழங்க முடியாதும் போகலாம்.

இதனைக் கட்டுப்படுத்த மக்களது மின்பொருள் பாவனைக்கான நேரங்களை ஒதுக்கி அதனை அளவீடுசெய வதற்கு மீற்றர் கருவி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

இதனை மீறி செயற்படும் சந்தர்ப்பத்தில் மின் கட்டணம் உயர்த்தப்படுவது தொடர்பில் எவ்வித தீர்மானங்களும் இன்னும் இல்லை.

இந்த திட்டம் தொடர்பில் மேலும் கலந்துரையாடி வருகின்றோம்" என்று தெரிவித்தார். (இ-7)

# புலனாய்வு அதிகாரிக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட நான்காவது நபரான இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மீறாலெப்பை கலீல் என்ற நபர் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கடந்த திங்கட்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவரிடம் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன.

மீறாலெப்பை கலீல் என்ற முஸ்லிம் இனத்தவரான இந்த இராணுவப் புலனாய்வு அதிகாரி கிரித்தலவில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு முகாமில் பணியாற்றி வருகிறார்.

இவர் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு முனனர், பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஆதரவாளராக இருந்தவர் என்றும் கூறப்படுகிறது.

இந்தப் படுகொலை தொடர்பாக பிள்ளையான் உள்ளிட்ட நால்வர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே, ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையில் குறிப்பிட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. (இ-7)

# சிங்கள இரத்தம் குறித்து அமைச்சரவையில் பேச்சு

சிங்க லே (சிங்கள இரத்தம்) அமைப்பு குறித்து அமைச்சரவையில் பேசப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அமைப்பின் நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்து அமைச்சரவையின் கவனத்திற் கொண்டுவந்துள்ளார்.

இந்த அமைப்பு இனவாதத்தை தூண்டக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடக் கூடுமென வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிங்க லே அமைப்பு முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக வலையமைப்பு உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பாரிய பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றது.

இதன்படி குறித்த அமைப்பு ஏதேனும் மோதலுடன் தொடர்புபட்டால் அது இனப் பிரச்சினையாக வெடிக்கக் கூடிய அபாயம் உண்டு.

எனவே, இந்த அமைப்பின் பின்னணியில் செயற்படுவோர் குறித்து ஆராய வேண்டும் என வெளிவிவகார அமைசசர் அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்த கருத்து குறித்து ஆராய்வது என அமைச்சரவையில் இணங்கப் பட்டுள்ளது.

இதேவேளை, சிங்க லே அமைப்பு ஓர் அடிப்படைவாத அமைப்பு கிடையாது என அந்த அமைப்பு நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அறிவித்துள்ளது. (இ-7)

# மனுசத் லே அமைப்பு உதயம்

"சிங்ஹ லே தேசிய சம்மேளனம்" எனும் பெயரில் தேசிய அமைப்பாக செயறபடப்போவதாக அறிவித்த "சிங்ஹ லே" அமைப்புக்கு எதிராக "மனுசத் லே" (மனித நேய இரத்தம்) எனும் பெயரில் புதிய அமைபபொன்று தற்பொழுது செயற்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை காலமும் சமூகத்தின் மத்தியில் வெளியாகாத பல விடயங்களை சமூகத்தின் மத்தியில் கொண்டு வருவது "மனுசத் லே" அமைப்பின் நோக்கம் "என தெரிவித்துள்ளது.

சிங்ஹ லே அமைப்பு இன குரோதத்தை ஏற்படுத்தும் வகையில் அண்மையில் முஸ்லிம்களின் வீடுகளில் வாசகங்களை எழுதியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலேசியாவில் 2015 ஆம் ஆண்டில் டெங்கு காய்ச்சலால் 336 பேர் பலி

மலேசியாவில் எப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் படி, 2015 ஆம் ஆண்டில் 336 பேர் டெங்கு காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர். சராசரியாக ஒரு மாதத்திற்கு 28 பேர் இறந்துள்ளனர். இது கடந்த 2014 ஆம் ஆண்டினை விட இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.

இதேபோல்டெங்குநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2014 இல் ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 698 ஆக இருந்தது. 2015இல் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 836 ஆக உயர்ந்துள்ளது. இது 11.2 சதவீதம் ஆகும்.

உலக அளவிலும் டெங்கு மற்றும் மலேரியா நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. மேலும், உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் டெங்கு நோய் பாதிப்பில் சிக்கியுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் குழந்தைகள் டெங்கு நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டுள்ளது.(இ-7)

# தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவீடு 2 வீதத்தால் அதிகரிப்பு

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவிடலானது 2016 ஜனவரி முதலாம் திகதி முதல் 2 வீதத்திலிருந்து 4 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைய வாகனப்புகைப் பரிசோதனைக்கான கட்டணமும் ஜனவரி 1 முதல் அதிகரித்துள்ளதாகவும் இக் கட்டணமே தற்போது நடைமுறையில் உள்ளதாக மோட்டார் போக்குவரத்து புகைப் பரிசோதனைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் ரூபா 410 இல் இருந்து 425 வரையும், ஆட்டோ, கனமில்லாத விவசாய உபயோகத்துக்கான வாகனம் என்பவற்றுக்கு ரூபா 505 இல் இருந்து 520 வரையும், கார் ரூபா ஆயிரத்து 100இல் இருந்து ஆயிரத்து 130 வரையும், இரட்டைப் பாவனை வாகனங்கள் ரூபா ஆயிரத்து 190 இல் இருந்து ஆயிரத்து 225 வரையும், பேருந்துக்கள் ரூபா ஆயிரத்து 10 இல் இருந்து ஆயிரத்து 40 வரையும், லொறி ரூபா ஆயிரத்து 550 இல் இருந்து ஆயிரத்து 650 வரையும் கன்ரக இழுவை வாகனங்கள் ரூபா ஆயிரத்து 650 இல் இருந்து ஆயிரத்து 700 வரையும் என அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டதில் முன்னர் ஒவ்வொரு வாகனங்களுக்கும் புகைப்பரிசோதனைக்காக அறவிடப்பட்ட கட்டணமும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள கட்டணமும் தொடர்பாகதெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அரசாங்க அலுவலக கடமைகளை வினைத்திறன் மிக்கதாக ஆக்குங்கள்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது இளைஞர் யுவதிகள் புதிய சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து தன்னம்பிக்கையுடன் தொழில் முயற்சியாளராக மாற முன்வர வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிப் பயிலுநர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், சாரதிகள் ஆகியோருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.கல்வியியற் கல்லூரி பொது மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது வடமாகாணம் வெளிப்படைத்தன்மை, தகைமை அடிப்படை, நேர்மையான நிர்வாகம் போன்றவற்றை உள்ளடக்கி எமது மாகாணம் முன்னோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளது.

வேலையில்லாது இருப்பது எப்பேர்ப்பட்ட சமூகச் சிக்கல்களைத் தருகின்றது என்பதை நான் கூறி எவரும் தெரிய வேண்டியதில்லை. வேலை செய்ய முடியுமான அனைவரும் பொறுப்பான வேலைகளில் அமர்த்தப்பட வேண்டும் என்பது தான் எமது அவா, ஆசை, எதிர்பார்ப்பு. அதனை அவ்வளவு இலேசாக நடைமுறைப்படுத்த முடியாது.

பலர் அரசாங்க வேலை மட்டுமே வேண்டும் என்ற பழைய பல்லவியையே பாடி வருகின்றனர். அது தவறு. இன்று அரசாங்கம் ஒன்று ஒரு நாட்டில் தனித்து இயங்குவது என்பது கடினமானது. தனியார்துறை, அரசசார்பற்ற நிறுவனங்கள் எனப் பலவும் அரசாங்கங்களுக்கு ஒத்திசைவாக நடந்து சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய நிலை வந்துள்ளது. எனவே இன்று பல்துறை வணிகர்களாக, தொழில் விற்பன்னர்களாக, சமூகத்தின் பலம் பொருந்திய பகுதியினராக இருப்பவர்கள் பழைய சிந்தனைகளை விடுத்துப் புதிதாகச் சிந்தித்து முன்னேறியவர்கள் என்பதை நாம் மறத்தலாகாது.

என்னுடைய அறிவுரை இதுவரை பொதுவானது. அனைத்து இளைஞர், யுவதிகளையும் நோக்கிக் கூறப்பட்டது.

உங்களில் பலர் பல நொண்டிச் சாட்டுக்களுடன் வீட்டிற்கு அருகே உள்ள ஒரு அலுவலகத்தில் கடமையாற்ற அனுமதிக்கும் படி மேன்முறையீடு செய்வீர்கள். உங்கள் மேன்முறையீட்டுக்கான பதிலை இப்பொழுதே தெரிவித்துவிடுகின்றேன். நியமனங்கள் வழங்கப்படுவது அரச அலுவலகங்களில் உள்ள கடமைகளை முறையாகவும் பொறுப்புடனும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கேயாகும். அதை விடுத்து உங்கள் பிரத்தியேகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அல்ல என்பதை முதலில் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

அரச அலுவலகங்களில் நியமனங்கள் பெற்றவுடன் தான் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதே நியமனங்கள் ஒரு பிரத்தியேக வங்கியிலோ அல்லது நிறுவனத்திலோ கிடைக்கப் பெற்றால் எந்த வித மறுப்பும் இன்றி உங்கள் கடமைகளை முழு நேரமும் ஓய்வு ஒழிச்சல் இன்றி புரிய வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த நிமிடம் நிரந்தரமாக வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள்.

தரமற்ற செயற்பாடுகளில் ஈடுபடாதீர்கள். சட்ட திட்டங்களை அறிந்து, அவற்றை மதித்து, மக்கள் நலம் பேணும் விதத்தில் கடமையாற்றப் பழகிக் கொள்ளுங்கள். அப்போது தான் நீங்கள் சிறந்த உத்தியோகத்தர்களாகப் பரிணமிக்க முடியும். நீங்கள் அரச சேவையில நீடித்திருப்பதற்கு இன்னும் பலவருடங்கள் இருக்கின்றன. ஆகவே உங்கள் எதிர்காலம் சுபீட்சமானதாகவும் ஒளியுள்ளதுமாக அமைய, மக்களின் நற்கீர்த்தியையும் நல்லெண்ணத்தையும் பெற நீங்கள் இப்போதிருந்தே கடுமையாக உழைக்க வேண்டும்.

வட மாகாண நிர்வாகச் சக்கரத்தின் சைக்கிள் கம்பிகள் போன்றவர்கள் நீங்கள். நீங்கள் முறையாகக் கடமையாற்றினால் தான் வடமாகாண நிர்வாகம் முழுமையாக முயன்று முன்னேறும். நீங்கள் ஒவ்வொருவரும் அதை மறந்து விடாதீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

## மின்சாரம் தாக்கி குழந்தை உயிரிழப்பு



(கொழும்பு)

மின்சார இணைப்பு துண்டிக்கப்படாமல் இருந்த கையடக்கத் தொலைபேசியின் மின்னேற்றி வயரை தனது வாயில்போட்டு மென்ற ஏழு மாதங்கள் நிரம்பிய குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் திவுலப்பிட்டிய பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

கையடக்கத் தொலைபேசியின் மின்னேற்றி வயரின் ஊடாக குழந்தையை மின்சாரம் தாக்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிட்டார்.

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான குழந்தை திவுலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (எ-11)


**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

SLEAS, SLAS, வடமாகாண அலுவலகப் பணியாளர், திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவு, மக்கள் வங்கி பயிலுநர் தெரிவு பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (C-3411)

தொடர்புகளுக்கு : 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.நகர்





**நல்லாட்சி அரசின் ஓராண்டு நிறைவில் வாழ்த்துகின்றோம்**

இன்று 08-01-2016 ஆம் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் நல்லாட்சியின் ஓராண்டு நிறைவினையிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெருமை கொள்கின்றது.



மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுடைய உறுப்பினர் ஆவார். இவர் தமிழ் மக்களிற்கான சம உரிமை கிடைக்க வேண்டும் என்பதில் முன் நின்று செயற்படுகின்ற ஓர் ஜனாதிபதியாக துணிந்து தலைமை ஏற்று ஓர் உன்னத நாட்டின் தலைவராக திகழும் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினுடைய நல்லாட்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியூடாக தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வினை எட்டி விடுவார்.

தமிழ் மக்களிற்கான நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக வடக்கு கிழக்கு மக்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து அளித்த வாக்குகளின் அடிப்படையில் துணிந்த தலைமை என்ற ஓர் உன்னதமான தலைவனாகத் திகழும் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தற்போதைய நல்லாட்சியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினூடாக நாம் நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வினை எட்டி விட முடியும் என்பது தெட்ட தெளிவாகவுள்ளதொன்றாகும்.

**ஒருவருட ஆட்சியில் நிறைவேற்றப்பட்டவற்றில் சில....**

01. யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் மக்கள் காணிகள் விடுவிக்கப்பட்டது.
02. அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் விடுவிக்கப்பட்டமை.
03. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரம் ஏற்படுத்தியமை.
04. ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி பாராளுமன்ற குழுக்களின் பிரதிதலைவர் பதவிகள் வழங்கப்பட்டமை.
05. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு இணைத் தலைவர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை.
06. தமிழ் மக்களின் உணர்வினை மதித்து மக்கள் தமது பண்பாட்டு விழுமிய விடயங்களை சுதந்திரமாக பயமற்ற சூழலில் நினைவு கூர அல்லது கொண்டாடுவதற்கான சூழலை ஏற்படுத்தியமை.
07. தமிழர்களின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளரை மாற்றம் செய்தமை.
08. யாழ்ப்பாணத்தில் குடி நீர் சிக்கல் ஏற்பட்டபோது மக்கள் சுகாதாரமான நீரை பருகுவதற்கு தேவையான பணத்தினை உடனடியாக ஒதுக்கியமை.
09. வரவுசெலவு திட்டம் ஊடாக பல்வேறு முன்மொழிவுகளை முழு நாட்டிற்கும் அறிவித்தமை.
10. அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கியமை.
11. பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொடுப்பனவை அதிகரித்தமை.

(3120)

**அங்கஜன் இராமநாதன் (பாராளுமன்ற உறுப்பினர்; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ் மாவட்ட தலைவர்)**
**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்கள்**

# அதிகாரத்தை அதிகரிப்பது குறித்து ஜனாதிபதி மைத்திரி அதிக கவனம்

**பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அதிகாரத்தை அதிகரிப்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அதிகாரத்தை மேலும் அதிகரிப்பது குறித்து நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட ரீதியான அதிகாரத்தை அதிகரிக்குமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவும் என்னிடம் கோரியுள்ளது.

ஆணைக்குழுவின் அதிகாரத்தை அதிகரிப்பதன் மூலம் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை விரைவில் தண்டிக்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற நேரடி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சரத் விஜேசூரிய நிகழ்ச்சியில் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி இதனை தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கவுடன் நீண்ட காலத்துக்கு ஒன்றாக இருக்கும் திட்டம் இல்லை

### எஸ்.பி.கூறுகிறார்



ஐக்கிய தேசியக் கட்சியுடன் நீண்ட காலத்திற்கு ஒன்றாக இணைந்திருக்கும் திட்டம் கிடையாது என சமூக வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாறறிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் மாறுபட்ட கொள்கைகளே காணப்படுகின்றன. இந்த மாறுபட்ட கொள்கைகளுடன் நீண்ட காலத்திற்கு ஒன்றாக இணைந்திருக்க முடியாது.

இவ்வாறு நாட்டின் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்திருப்பதனை அடிப்படைவாத, கடும்போக்குவாத சக்திகள் பிழையாக பயன்படுத்திக் கொள்ளக்கூடும்.

பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்திருப்பதனால், இனவாத, மதவாத சக்திகள் எதிர்க்கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றக்கூடிய சாத்தியங்கள் அதிகமாகும். இதனால் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டில் ஒன்று எதிர்க்கட்சியாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. நாட்டின் தற்போதைய நிலையையும் பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. பிரதான இரண்டு கட்சிகள் தற்காலிக அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## விற்பனைக்குண்டு

- லிஸ்ரார் டீசல் ஜெனரேற்றர் Lister Disel Generator 10 KVA
- YAMAHA Organ

தொடர்புகள்:-0772242394

(3082)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி

**ஜனனி ஐயாத்துரை**

கலைப்பிரிவில் 3 A சித்தி பெற்று யாழ். மாவட்டத்தில் 19 ஆவது இடத்தைப் பெற்றமையை எண்ணிப் பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல கலைகளில் சிறந்து விளங்க ஆஞ்சநேய சுவாமியை வேண்டி வணங்குகின்றோம்.

வாழ்த்துவோர்:

அம்மா, அப்பா, கணேசமூர்த்தி (குடும்பம்), மகாலிங்கம் (குடும்பம்), பத்மராஜா குடும்பம் (பிரான்ஸ்), கோகுலதாசன் குடும்பம் (கனடா), றூபதாசன் குடும்பம் (கனடா), கனகரத்தினம் குடும்பம் (கனடா), பேரின்பம் குடும்பம் (கனடா), விநாயகமூர்த்தி குடும்பம்(கனடா), சோமசுந்தரம் குடும்பம் (கனடா), மோகனதாஸ் குடும்பம் (கனடா), அம்மம்மா-(கனடா)

69, சாத்திரியன் வீதி, அரியாலை.

(3081)



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
07.10.1958

உதிர்வு
08.01.2006

**அமரர் சின்னராசா இராசையா**

(சித்தப்பா பேக்கரி உரிமையாளர்)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய்
வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த
எம் குல விளக்கே
எம் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய
எம் அன்புத் தெய்வமே
உம் நினைவுகள் எப்போதும் எம் நெஞ்சில்
தெய்வமாக

V.M.வீதி, சின்னப்பிள்ளையான் கோவிலடி, பருத்தித்துறை

(3085)

உம் நினைவுகளுடன்
மனைவி, மகன்.


## இராசி பலன்

08.01.2016
(மார்கழி 23, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25மணிக்கு,
திரயோதசி காலை 8.20மணிவரை
கேட்டை பிற்பகல் 10.06மணிவரை
சுபநேரம் 6.32-8.02மணிவரை
இராகுகாலம் 11.02-12.32மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை, ரோகினி<br>காலை 9.40ற்கு<br>தனு-சந் | | |
| சூரி<br>புத | சனி<br>சுக்<br>சந் | செவ் | குரு<br>ராகு |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும்.

**இடபம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த முயற்சிகளில் தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகளால் அனுகூலமுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தனவரவு திருப்தி தரும்.

**கடகம்:** உடல் நலம் சீராகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மகரம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், சயன சுகக்குறைவான நாள், செலவுகள் அதிகரிக்கலாம்.

**சிம்மம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்ளலாம்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி:** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வாகன சுகமுண்டு, வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.

# யாழில் தேசிய பொங்கல் யாருக்காக?

# நல்லாட்சி அரசே பிள்ளைகளை விடுதலை செய்

(யாழ்ப்பாணம்)

எங்கள் உறவுகளை காணாமல தைப்பொங்கல் கொண்டாடாத துயரில் நாமிருக்க எங்கள் இடத்திற்கு வந்து நல்லாட்சி அரசின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தேசிய பொங்கல் தினத்தைக் கொண்டாட இருக்கின்றனர்.

அவ்வாறு தேசிய பொங்கலை இங்கு கொண்டாடுவதாயின் எங்களுடைய உறவுகளை நல்லாட்சி அரசாங்கம் முதலில் விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கைதிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் பதினைந்தாம் திகதி நடைபெறவிருக்கின்ற தேசிய பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் வருகை தரவுள்ள நிலையில் தங்களது உறவுகளின் விடுதலை தொடர்பில் அவர்களுடன் பேசுவதற்குரிய சந்தர்ப்பமொன்றை முதலமைச்சர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

யாழிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியதன் பின்னர் முதலமைச்சரிடம் மகஜரொன்றையும் கையளித்துள்ளனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பொங்கல் விழா நிகழ்வுகள் இம் முறை யாழ்ப்பாணத்தில் ஆடம்பரமாக கொண்டாடப்படவுள்ளன. இந் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட நல்லாட்சி அரசாங்கத்தினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். இதன் போது அவர்களை நாங்கள் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

இதேவேளையில் எமது உறவுகள் கடந்த பல வருடங்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களின் விடுதலை தொடர்பில் சிறைக்குள் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற அதே நேரத்தில் நாங்களும் சிறைக்கு வெளியே தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கின்றோம்.

இந் நிலையில் கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமைககப்பட்ட நல்லாட்சி அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. இதற்கமைய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றவர்களையும் விடுதலை செய்வதாகவும் அறிவித்திருந்தது.

ஆனால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில் சிறைகளில் இருந்தவாறே உறவினர்கள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதன்போதும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அப் போராட்டங்களும் நிறுத்தப்பட்டன. ஆயினும் இதுவரையில் அவர்கள் விடுவிக்கப்படாமல் தொடர்ந்தும் சிறைகளிலேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற நிலையே இருக்கின்றது.

இவ்வாறு அவர்கள் சிறைகளில் வாடுகின்ற நிலையில் நாங்கள் பொங்கல் விழாக்கள் உள்ளிட்ட விழாக்கள் எதுவும் கொண்டாடாமல் இருந்து வருகின்றோம். ஆனால் அவர்களை விடுவிப்பதாகக் கூறுகின்ற நல்லாட்சி அரசாங்கம் அவர்களை விடுவிக்காது இங்கு வந்து பொங்கல் செய்து விழா எடுக்கவுள்ளனர்.

எனவே அரசியல் கைதிகள் விவகாரத்தில் நல்லாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய எங்களுடைய உறவுகளை விடுதலை செய்ய வேண்டும். அவ்வாறு அவர்களை விடுதலை செய்த பின்னர் இங்கு வந்து பொங்கல் விழாக்களை நடத்த வேண்டும். இதனைச் செய்யாது கடந்த கால அரசாங்கங்கள் போன்று வாக்குறுதிகளை வழங்கிவிட்டு இந்த நல்லாட்சி அரசாங்கமும் எம்மை ஏமாற்றுகின்றது. நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் கவலையை ஏற்படுத்துகின்றன. எனவே பொங்கல் விழா கொண்டாடுவதற்கு முன்னதாக எங்கள் உறவுகளை விடுதலை செய்ய வேண்டுமென்று கோருகின்றோம்.

எங்கள் உறவுகளை காணாத துயரில் நாமிருக்க இவர்கள் எங்கள் இடத்தில் வந்து தேசிய பொங்கல் கொண்டாடுகின்றார்கள். இந்த பொங்கல் ஏற்பாடுகள் யாருக்காக? எங்களுக்கா? அவர்களுக்கா? எங்களுக்கு என்றால் முதலில் எங்கள் உறவுகளை விடுவியுங்கள், கண்டறியுங்கள். அதனை விடுத்து பானை வைத்து பொங்குவதால் எமது துன்பம் போய்விடாது என அவர்கள் தெரிவித்தனர். (இ-4)

## மத்திய அரசின் அனுமதியுடன்

# வடக்கு மாகாண சபையால் முதன்முறையாக 326 பட்டதாரிகளுக்கு நேற்று நியமனங்கள்



(யாழ்ப்பாணம்)

மத்திய அரசின் அனுமதியுடன் வடக்கு மாகாண சபையால் முதன் முறையாக 326 பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் 5 நிர்வாக மாவட்டத்திலுமுள்ள 2012 ஆம் ஆண்டு 31 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட, ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்தவர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் 1912 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய அரசின் அனுமதியுடன் மாகாண சபையால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு நேற்று இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த நியமனங்கள் வழங்கும் நிகழ்வின் இரண்டாவது பிரிவாக வடக்கு மாகாணத்தில் 5 நிர்வாக மாவட்டங்களிலும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 173 நியமனங்களும் சாரதிகளுக்கான 92 நியமனங்களும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான 11 நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

நியமனங்கள் வழங்கும் முதற் பகுதி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# புனருத்தாரண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை குழந்தைவேல் சுவாமிகள் சமாதி, சிவன் கோவிலும் அதனைச் சூழவுள்ள சமாதிகளும் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளன.

இதற்கானபுனருத்தாரணசபையை உருவாக்குவதற்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு பின்புறமாகவுள்ள சைவ மகாசபை தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

புனருத்தாரணம் செய்யப்படவுள்ள குழந்தைவேல் சுவாமிகள் சமாதி சிவன் கோவிலும் அதனைச் சூழவுள்ள சமாதிகளும் நீண்ட கால இடைவெளிக்கு பின்னர் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளதால் கோவில் மற்றும் சமாதியுடன் தொடர்புடையவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)




# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைதொழிற்பயிற்சிஅதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. கணனி வன்பொருள் திருத்துநர், வீட்டு மின் இணைப்பாளர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), இருசக்கர மற்றும் ஆட்டோ திருத்துநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர், அனுமினிய பொருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர் ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், கைதடி, சுன்னாகம், காரைநகர் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இக்கற்கை நெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் அல்லது பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 11.01.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ

# மகிந்த தேர்தலில் தோற்றாலும் கட்சியை விட்டு போகவில்லை


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தோற்றாலும் கூட கட்சியை விட்டுச் செல்லவில்லை எனவும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வேட்பாளரை வெற்றியடையச் செய்ய அரச ஊடகங்கள் மற்றும் அரசாங்க சொத்துக்களை அதிகளவில் பயன்படுத்தியதாகவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் சட்ட விரோத வேலைகள் எதனையும் செய்யவில்லை எனவும், மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த போதும் கட்சியை விட்டுச் செல்லவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியான பின்னர் ஜனாதிபதிக்கான செலவு பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு பயணங்களுக்காக ஜனாதிபதியுடன் செல்லும் குழுவினர் குறைக்கப்பட்டுள்ளதாகவும் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எஸ்.பி திஸாநாயக்கவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் மகிந்த ராஜபக்ஷ தனக்கு நெருங்கியவர்களிடம் கருத்துரைத்துள்ளதாகவும் அதில் அமைச்சர் எஸ்.பியை அவர் கிண்டலடித்ததாகவும் தெரியவருகிறது. ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைந்தாலும் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரானேன். ஆனால் எஸ்.பி தேர்தலில் தோல்வியடைந்தாலும் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வந்துள்ளார் எனவும் மகிந்த கிண்டலடித்துள்ளார். (இ-7)




# வடக்கில் அரச நியமனங்களை பெறுவதில் பட்டதாரிகள் அக்கறை செலுத்தவில்லை

## பிரதம செயலாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் பட்டதாரி பயிலுநர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் அரச நியமனங்களை பெற்றுக் கொள்வதில் பல பட்டதாரிகள் அக்கறை செலுத்தவில்லை என வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபையால் பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல அமைச்சுக்கள், திணைக்களங்களிலும் 402 பட்டதாரி பயிலுநர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை பொது நிர்வாக அமைச்சில் இருந்து நாம் பெற்றிருந்தோம்.

அதற்கான பெயர்ப்பட்டியல் எமக்கு கிடைக்கப்பட்ட போதிலும் துரதிர்ஷ்டவசமாக 60 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவில்லை.

இருப்பினும் அவர்களுக்கு மேலும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது 2012 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்த 35 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் இருந்தால் அவர்களை மத்திய அரசின் அனுமதியை பெற்று சேவைக்குள் உள்வாங்க முடியும்.

அத்துடன் இன்று வழங்கப்படும் நியமனங்கள் துறைசார்ந்த வெற்றிடங்களுக்கு நிரப்பப்படவுள்ளன.

பொதுவாக வன்னிப் பிரதேசங்களிலேயே வெற்றிடங்கள் அதிகமாக காணப்படுகின் றன.

பலர் நேரடியாகவும் அவர்களுக்கு தெரிந்தவர்கள் ஊடாகவும் தமக்கு அண்மையில் உள்ள திணைக்களங்களில் நியமனத்தை வழங்குமாறு கோரி வருகின்றனர்.

ஆனால் சேவையில் இணையும் முதல் காலப்பகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியில் சேவையாற்றும் பொழுது சேவையின் இறுதிக்காலத்தில் கூடிய நன்மை பெறக் கூடியதாக இருக்கும்.

எங்கு தேவையுடையவர்கள் இருக்கிறார்களோ அங்கு தேடிச் சென்று சேவை புரிய வேண்டும்.

பலர் திருமணம் முடித்து குழந்தைகளுடன் இருக்கின்றார்கள். அவர்களுக்கு மனிதாபிமான முறையில் மாற்றங்களை செய்துள்ளோம்.

இருப்பினும் எமது வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு அர்ப்பணிப்புடன் முற்றுமுழுதாக சேவையை வழங்க அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மனிதன் அபிவிருத்தியடையும் போது சூழலை அழிக்கக்கூடாது-ஜனாதிபதி

(கொழும்பு)

இப்பூவுலகில் வாழும் அனைத்து உயிரினங்களதும் இருப்பின் மீது காலநிலை மாற்றங்களின் தாக்கம் பாரியளவு செல்வாக்கு செலுத்தியுள்ள இக்காலகட்டத்தில் பசுமை யுகத்தை நோக்கி இலங்கையை பயணிக்கச் செய்வது எமது அடுத்த இலக்காக அமைய வேண்டுமெனவும் எச்சந்தர்ப்பத்திலும் மனிதன் அபிவிருத்தி அடைந்து செல்கின்றபோது சூழலை அழித்து விடக் கூடாது எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "நீலப் பசுமை யுகத்திற்காக" எனும் உறுதிமொழியினை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றியபோது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

"நீலப் பசுமை யுகத்திற்காக" நிகழ்ச்சித்திட்டமானது புவி வெப்பமடைதல் அதிகரிப்பை இரண்டு பாகை வரை குறைப்பதற்கு உலகத் தலைவர்கள் இணக்கம் தெரிவித்த COP 21 மாநாட்டின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இலங்கையர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் பொருட்டு முன்னெடுக்கப்படும் ஒரு நீண்டகால நிகழ்ச்சித்திட்டமாகும்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி, நிலையான அபிவிருத்தி என்பது இன்று முழு உலகினதும் கவனம் ஈர்க்கப் பட்ட ஒரு விடயமாகும் எனக் குறிப் பிட்டார்.

பொருத்தமானவற்றை தேர்ந்தெடுத்து பொருத்தமற்றவற்றை நிராகரித்து நாடு என்ற ரீதியில் முன்னோக்கிப் பயணிப்பதற்கு அனைவரும் தன்னை அர்ப்பணிக்க வேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி, இறந்த காலத்தில் எமக்குத் தவறியவற்றை மீட்டிப் பார்க்காது நாளைய உலகிற்காக தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் உரியவாறு நிறைவேற்றுவதே நாம் இன்று மேற்கொள்ளவேண்டிய பணியாகவுள்ளது.

தாவரங்கள், உயிரினங்கள், ஏனைய அனைத்து இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்காக தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, பாரீஸ் நகரில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் சர்வதேச காலநிலை மாற்றங்கள் தொடர்பான மாநாட்டில் வழங்கிய உறுதிமொழியினை நிறைவேற்றுவதற்கு இலங்கை பிரஜைகள் என்ற வகையில் எம்மை அர்ப்பணித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். நீலப் பசுமை யுகத்தை நோக்கி இலங்கை "நெக்ஸ்ட்" தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து அதன் உத்தியோகபூர்வ இணையத் தளத்தை ஜனாதிபதி அங் குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அறிஞர்கள், சூழலியலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:12.75<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L /லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/5388 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 19 செவ் 1 ல்<br>தகைமை/தொழில்: மருத்துவபீட மாணவி<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3991 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 46 சூரி செவ் 6 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5389 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 54 செவ் 8 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/3992 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 32<br>தகைமை/தொழில்:BSC/es ஓமான்<br>தொ.இ: B/5392 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 8.25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/4001 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 48 செவ் 12 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5395 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 56<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/4002 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# ஆளணி பற்றாக்குறைகளுடன் மாந்தை கிழக்கு பிரதேச சபை

## வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் தாமதம்-பொதுமக்கள் விசனம்

(மல்லாவி)

**மாந்தை கிழக்கு பிரதேச சபையில் செயலாளர் நியமிக்கப்படாமையாலும் மற்றும் ஆளணி பற்றாக்குறையுடனும் இயங்குவதால் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் தாமதங்கள் ஏற்படுவதுடன் பொதுமக்களும் தமது நாளாந்த சேவைகளை பெற முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றிய மு.கிருஷ்ண நவரட்ணராஜா கடந்த வருடம் மரணம் எய்தியுள்ள நிலையில் இவரது இடத்திற்கு இதுவரையில் எவரும் நியமிக்கப்படவில்லை.

தற்போது தற்காலிகமாக முகாமைத்துவ உதவியாளர் பதவியிலுள்ள ஒருவர் தனது கடமைகளுடன் செயலாளரின் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்.

இவ் அலுவலகத்தில் அபிவிருத்தி உதவியாளர்கள் பதவியில் 6 உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் தற்போது ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார்.

முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 5 உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் இரண்டு பேர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக செயலாளருடன் சேர்த்து 12பேர் கடமையாற்ற வேண்டிய நிலையில் மூன்று உத்தியோகத்தர்கள் மட்டுமே 12 உத்தியோகத்தர்களின் கடமைகளையும் செய்ய வேண்டிய அவலநிலை காணப்படுவதால் பொதுமக்களுக்கான சிறந்த பணியை வழங்க முடியாத நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச சபையில் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சரின் கீழுள்ள உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து ஆளணி வளத்தை ஏற்படுத்தித் தருமாறு மேற்படி பிரதேச மக்கள் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர். (2-15)

# ஆர்ப்பாட்டம் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## வவுனியா பிரதேச செயலாளர் விளக்கம்

(குருமன்காடு)

மக்களுக்கு முழுமையாக அபிவிருத்தித் திட்டங்கள் சென்றடைய வேண்டுமாயின் அதனை சரியாக செய்யவேண்டுமெனவும், ஒரு சிலரை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா மதகு வைத்த குளத்தில் மக்களால் கடந்த 5 ஆம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக அவரிடம் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டமானது கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு ஒப்பந்தமொன்றினை வழங்காமல், மாதர் சங்கத்திற்கு வழங்கியமையினாலேயே இடம்பெற்றதென வவுனியா பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் விளக்கமளிக்கையில்,

'மதகுவைத்தகுளம் கிராமத்திற்கு சில திட்டங்கள் வழங்கப்பட்டன. இதனை கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் உட்பட கிராமத்தில் அதிகளவானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும் கிராம அபிவிருத்தி சங்கத்திலுள்ள சிலர், தமக்கு அங்கு வழங்கப்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குமாறு கோரினர்.

எனினும் அதனை அவர்களுக்கு வழங்குவதற்கு முடியாத நிலை உள்ளது. எனவே நாம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் வேறு அமைப்புகளின் ஊடாக அபிவிருத்தி திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்திச் செல்கின்றோம்.

இதனை பொறுக்க முடியாத சிலர் எமக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்' என தெரிவித்தார். (2-250)




# மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்


(பனிக்கன்குளம்)


யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களின் பழைய மாணவர் சங்கமொன்றினை அங்குரார்ப்பணம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என வளாகத்தின் முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதன் நிமிர்த்தம் நாளை சனிக்கிழமை வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா வளாக அலுவலகத்தில் அனைத்து பழைய மாணவரகளையும் காலை 9 மணிக்கு வருகை தந்து பழைய மாணவர்கள் சங்கத்தினை அங்குரார்ப்பணம் செய்ய உதவுமாறும் கோரப்பட்டுள்ளது. (2-250)

# பொதுமக்களுக்கான துரித அம்புலன்ஸ் சேவை ஆரம்பம்

## கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது





பொதுமக்களிற்கு துரித அம்புலன்ஸ சேவையை வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் 2மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் திருமதி வைத்திய கலாநிதி எஸ்.ஆர்.யூட் தலைமையில் இடம்பெற்றது.

அன்றையதினம் குறித்த சேவையைவழங்கும்தொடர்பாடல்அறையை திறந்துவைத்ததுடன், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார திணைக்களத்திற்கு வாகனமும் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குறிப்பிடுகையில்,

கடந்த 30 வருட யுத்தத்தின் பின்னர் பல்வேறு சுகாதார மேம்பாடுகள் தொடர்பில்நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய நிலை காணப்பட்டதாகவும், அதனடிப்படையில் இன்று துரித அம்புலன்ஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மேலதிக அரசாங்க அதிபர், சுகாதார பணிப்பாளர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

24 மணி நேர சேவையை வழங்கவுள்ளஇத் துரித அம்புலன்ஸ் சேவையை பெற்றுக்கொள்ள 021 222 4444, 021 222 5555ஆகிய இலக்கங்களை அழுத்தி விரும்பிய மொழியை தெரிவு செய்து சேவை யை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. இச் சேவைக்காக 100 அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 31 வண்டிகள் யாழ்ப்பாணத்திலும், 18வண்டிகள் கிளிநொச்சியிலும், தலா 17 வண்டிகள் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பகுதியிலும் சேவை யில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது,

குறித்த சேவையை பெற்றுக் கொள்வதற்கு எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது எனவும், விபத்துக்கள், அவசர மருத்துவ நிலைகள், அவசர பிரசவ நிலைகளிற்கு இச்சேவை ஈடுபடுத்தப்படவுள்ளதாக மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சிகிச்சை நிலையங்களிற்கு (கிளினிக்) செல்லுதல், தனியார் வைத்தியசாலைக்கு செல்லுதல், அவசரமற்ற மருத்துவ நிலைகளிற்கு இச்சேவை பயன்படுத்தப்படமாட்டாது எனவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-15)

# க.பொ.த (உ/த) பரீட்சை முடிவுகள்

**வவு/புதுக்குளம் மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

ம. சதீஸ்வரன்-3ஏ பொ.சசிதரன்- 2ஏபி, சி. சஜீவன்-2ஏ,பி, ஶ்ரீ.சிந்துஜன் -ஏ,2பி, சு. நிரோசன் -ஏபிசி, த.பிரிந்தனா- ஏபிசி, சி. சுலக்சன்-2பிசி.

**கலைப்பிரிவு**

அ. கம்சாயினி -3ஏ , ப. தனுசன- 2ஏபி, கு. இளங்கோ- 2ஏபி, வி. பிரியங்கா- ஏ2பி, ச. கோபிகா- 2ஏபி, வே.விதுசா- 2ஏசி, த. சிவநாதன் ஏபிசி,ஆ. காஞ்சனா- ஏ2பி, சி. நதியரசி- ஏ2பி,பா.பிரசாந்தி- ஏ2பி.

**விஞ்ஞான பிரிவு**

ர. விஜிதசேகரன-பி,2சி, த. இந்திரதீபன் -2சி,எஸ், ம. சாரங்கன் -பிசிஎஸ், த.வினிஸ்ரீபன் 2சிஎஸ். (2-250)

# வகுப்பறை கட்டடங்களின் திறப்பு விழா இன்று

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட இரண்டு பாடசாலைகளுக்கான வகுப்பறை கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர்களின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு கட்டடங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபையின் கல்வியமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மு/ஈஸ்வரன் வித்தியாலய வகுப்பறை கட்டடத்திறப்பு விழா முற்பகல் 11.30மணிக்கு வித்தியாலய அதிபர் ப.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும். மு/முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலய வகுப்பறைக் கட்டடத் திறப்பு பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் க.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும். (2-15)

# கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்தினுள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அவசியம்

## நுகர்வோர்,வியாபாரிகள் வலியுறுத்து

கிளிநொச்சி பொதுச்சந்தைக்குள் சென்றுவரும் வாகனங்களுக்குசந்தை வாசலில் வைத்து பணம் அறவிடப்படுவதாக நுகர்வோர், வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி நகர் பகுதியில் தமது வாகனங்களை பாதுகாப்பாக விட்டு செல்வதற்கு ஒரு இடம் இல்லை எனவும்,

ஆதலால் சந்தைக்கு அருகில் உள்ள வீடுகளில் விட்டு செல்லும் நிலை காணப்படுவதாகவும் மழை, வெயிலில் நின்று பழுதடைவதால் அதிக பணம் செலுத்தி திருத்த வேண்டியுள்ளது என பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பொது சந்தைக்கு உட்புறத்தில் காணப்படும் கொட்டகை சிறியதாகவும் இதில் சந்தை வியா பாரிகளின் துவிச்சக்கரவண்டிகள் உந்துருளிகள் நிறைந்து காணப்படுவதுடன் சில சமயம் விடப்படும் வாகனங்களை சந்தை பூட்டிய பின் எடுக்க முடியாததால் மறு நாளே எடுக்கக்கூடிய நிலை உள்ளதாகவும் தெரிவித்த மக்கள் இவ்வாறு தாம் பல இடர்களை எதிர்நோக்கும் நிலையில் சந்தைக்குள் பொருட்களை வாங்குவதற்கு சென்று வரும் எம்மிடம் ஒரு தடவைக்கு சைக்கிளுககு ஐந்து ரூபாவும், மோட்டார் சைககிளுக்கு பத்து ரூபா என அறவிடுகின்றனர்.

அத்துடன் அறவிடுவோர் சீட்டை வழங்காது பணம் அறவிடுவதாகவும் பற்று சீட்டில் "தரிப்பிட கட்டணம்" என்று குறிக்கப்பட்டுள்ளதாகவும் தாம்தரிப்பிடத்தில்நிறுத்துவது இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்த செயற்பாடு கிளிநொச்சியில் மட்டுமே நடைமுறையில் உள்ளதாகவும் வேறு இடங்களில் தரிப்பிடத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு மட்டுமே பணம் அறவிடப்படுகின்றது. உரிய அதிகாரிகள் மனித உரிமை ஆர்வலர்கள இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதோடு மக்களிடம் இருந்து தேவையற்ற விதத்தில் பணம் அறவிடுவதை நிறுத்தி, பாதுகாப்பாக தமது வாகனங்களை நிறுத்தி எடுப்பதற்கு ஒரு இடத்தினை அமைத்து அதற்கு சரியான முறையில் கட்டணம் அறவிடுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-300)

# வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தருவதாக கூறி விபரங்கள் சேகரிப்பவர்களிடம் ஏமாறாதீர்கள்

## அவ்வாறு செயற்படுபவர்கள் தொடர்பில் முறையிடவும்–வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

வடக்கு மாகாண அமைச்சின் முகவர்கள் எனக் கூறி வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தருவதாக விபரங்கள் சேகரிப்பவர்களை நம்பி ஏமாற வேண்டாம் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாண சபையில் வேலை வாய்ப்பை பெற்றுத்தரு வதாக கூறி முகவர்கள் சிலர் இளைஞர் யுவதிகளிடம் சுய விபரங்களை பெற்றுக் கொள்கிறார்கள் எனகிடைத்த முறைப்பாடு தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது அமைச்சில் இருந்து எந்தவொரு முகவர் ஊடாகவும் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை. வேலைவாய்ப்புக்கள் தொடர்பாக பத்திரிகை வாயிலாக விபரங்கள் கொடுக்கப்பட்டே ஆட்சேர்ப்பு நடவடிக்கை இடம்பெறுகின்றது.

அமைச்சர் ஊடாக வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தர முடியுமென கூறி வருபவர்களிடம் ஏமாற வேண்டாம்.

அவ்வாறு செயற்படுபவர்கள் தொடர்பில் விபரங்கள் தெரிந்தால் அந்தந்த பிரதேசங்களில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முறையிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)




# மாணவர்களுக்கு கல்வியைப் புகட்டி சமூகத்தில் நற்பிரஜைகளாக்குவேன்

## கலைப்பிரிவில் வவுனியா மாவட்டத்தில் முதலிடம்பெற்ற வவு. புதுக்குளம் மகாவித்தியாலய மாணவி தெரிவிப்பு



எதிர்காலத்தில் பல்கலைக்கழக படிப்பை முடித்து ஒரு ஆசிரியராகி. எமது கிராமம் போன்ற போரால் மிகவும் பாதிக்கப்பட்ட கிராம மாணவர்களுக்கு கல்விச் சேவையை வழங்கி அவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக கொண்டு வரவேண்டும் என்பதே எனது ஆசை என வெளியாகிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலி டம் பெற்ற வவு/ புதுக்குளம்மகா வித்தியாலய மாணவி அழகுசுந்தரம் ஹம்சாயினி தெரிவித்துள்ளார்.

நான் ஆரம்ப கல்வியை சுந்தரபுரம் வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை வவு. புதுக்குளம் மகாவித்தியாலயத்திலும் கற்றேன்.

வரலாறு, தமிழ், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்று 3ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்றுள்ளேன்.

என்னுடைய கிராமம் ஒரு பின்தங்கிய கிராமம். பிரத்தியேக வகுப்பு வசதிகள் இல்லை. நான் ரியூ சனோ அல்லது எந்தவிதமான பிரத்தியேக வகுப்புக்களுக்கோ செல்லாது பாடசாலைக் கல்வியை மட்டுமே நம்பிப் படித்து இந்த நிலையை அடைந்துள்ளேன்.

அதேபோல் வீட்டில் எனக்கு படிப்பு சம்பந்தமாக எந்தவித கட்டுப்பாடுகளும் இருக்கவில்லை. சுதந்திரமாக படித்தேன்.

அந்தவகையில் எனது இந்த நிலைக்கு காரணமான புதுக்குளம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர், உறவினர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

எனது வீட்டில் இருந்து 8 கிலோ மீற்றர் தூரத்தில் எனது பாடசாலை உள்ளது. தினமும் துவிச்சக்கர வண்டியில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் பயணித்தே படித்தேன். அதனை மறந்துவிடமுடியாது என தெரிவித்தார். (2-250)

# பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



சங்கானை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கணவரை இழந்து நான்கு பிள்ளைகளுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்பத்தினருக்கு ஒரு தொகைப் பணமும் நான்கு பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக மாதா மாதம் கல்வி ஊக்கிவிப்புப் பணமும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச லயன்ஸ் கழகம் சங்கானைக் கிளையின் தலைவர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகத்தின் உறுப்பினர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (2)

# உயர்தரப் பரீட்சை முடிபுகள்

மு/வித்தியானந்தா தேசிய கல்லூரி

உயிரியல்பிரிவு

எஸ்.விதுர்சனா–2ஏபி, ஆர்.ரினோத்யா–ஏ2பி, எஸ்.சந்தீப்–2பிசி, ஜே.துவாரகா–ஏ2சி

கணிதப்பிரிவு

வி.விஜிந்தன்–ஏ2பி, கே.பூர்விகன்–3பி, ஆர்.கர்யூன்–2பிசி, என்.திவ்யன்–3சி, எம்.நிசாந்தன்–பி2சி, எஸ்.தர்சிகா–ஏ2சி

வர்த்தகப்பிரிவு

கே.கஸ்தூரன்–2ஏபி, எம்.பிரியங்கன்–2ஏபி, பி.விதுர்ஜன்–2ஏபி

கலைப்பிரிவு

வி.விதுர்சிகா–3ஏ, எம்.தர்மிகா–2ஏசி, ரி.வயாஜினி–2ஏசி, எஸ்.பிரசாந்தி–ஏ2பி

உயிர்முறைமைகள் தொழில்நுட்பப்பிரிவு

எஸ்.சுரேஜிதா–பி2சி, கே.கஜித்–2பிசி, கே.சஜிந்தன்–3பி, கே.சங்கவி–பி2சி, எஸ்.சோபனா–பிசிஎஸ், ஜே.கனுசிகா–2சிஎஸ், எஸ்.கயல்விழி–2சிஎஸ், பி.சரண்யா–2சிஎஸ், எஸ்.சுமணன்–சி2எஸ்

பொறியியல் தொழில்நுட்பம்


வை.தேசிந்தன்–பிசிஎஸ், எஸ்.வேணுஜா–2சிஎஸ், ரி.யதுர்சன்–2சிஎஸ், எஸ்.கீதாஞ்சன்–சி2எஸ். (2-292)

கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்

கலைப்பிரிவு

கே.அனுஷா–ஏபிசி. (2-307)

# வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி பயனாளிகள் முப்பது பேருக்கு வாழ்வாதார உதவிகள்



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி பயனாளிகளுக்கான வாழ்வாதார ஊக்குவிப்பு முன்னெடுப்பொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முப்பது பயனாளிகளுக்கும் நீர் அழுத்த விசைப்பொறிகள் (நீர் இறைக்கும் இயந்திரம்) மற்றும் தையற்பொறிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. –இது தொடர்பில் மேலும் அறிய வருகையில்,

கடந்த முதலாம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி பயனாளிகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

பிரதேசத்தின் 19 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து 50 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் புதுக்குடியிருப்பு வலயத்தின் 30 பயனாளிகளுக்கு குறித்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ் வாழ்வாதார உதவிகளாகவிவசாயத் தேவைக்கான நீர் அழுத்த விசைப்பொறி, தையற்பொறிகள்என்பனவழங்கப்பட்டுள்ளன.

குறித்த உதவி வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பிரதேச செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச தலைமைப்பீட வாழ்வின் எழுச்சி முகாமையாளர் திருமதி றிவேதினி கிரிஜாகரன், கருத்திட்ட முகாமையாளர் திருமதி கலாவதி–விமலேஸ்வரன், புதுக்குடியிருப்பு உடையார் கட்டு வைப்பக வலய உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என கலந்து சிறப்பித்தனர். (2-281-250)

# போக்குவரத்து சீரின்மை காரணமாக வகுப்பறை கட்டடத் திறப்புவிழா ஒத்திவைப்பு

வன்னி பிரதேசத்தில் அண்மைய நாட்களாக பெய்துவரும் தொடர் மழை காரணமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிராட்டிகுளம் கிராமத்தில் 68 குடும்பங்கள் வெளி இடங்களுக்கான போக்குவரத்து தொடர்பின்றி நிர்க்கதியான நிலையில் இருப்பதாக பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிராட்டிகுளம் கிராமத்திற்கு செல்லும் 8 கிலோ மீற்றர் வீதியானது வெள்ளம் காரணமாக சேதமடைந்து மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இக்கிராமத்தைச் சேர்ந்த 68 குடும்பங்கள் தமக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிர்க்கதியான நிலையில்.உள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை மு/சிராட்டிகுளம் அ.த.க.பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் ஒன்று வடக்கு மாகாண சபையின் கல்வியமைச்சர் த.குருகுலராஜாவினால் திறந்து வைக்கப் படவிருந்த நிலையில் அத்திறப்பு விழா பாதை சீரின்மை காரணமாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (2-15)

## தமிழ் அரசியல் கைதிகளை

# விடுதலை செய்யக்கோரி நேற்று கிளிநொச்சியில் விசேட வழிபாடு

(மல்லாவி)

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி நேற்று கிளிநொச்சியில் விசேட வழிபாடு இடம்பெற்றது. கிளிநொச்சி உதிர வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அரசியல் கைதிகளின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினை மன்னார் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்திருந்தது.

தொடர்ந்து அரசியல் கைதிகளின் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (2-15)

# கரைச்சி பிரதேசசபையின் செயற்பாடுகள் தொடர்பில் சங்க உறுப்பினர்கள் செயலாளருடன் கலந்துரையாடல்




கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு உறுப்பினர்களும் கிளிநொச்சி வர்த்தக அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கரைச்சி பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் புதிய செயலாளராக பொறுப்பேற்றுள்ள செயலாளர் க.கம்சநாதனுடன் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் கலந்துரையாடல் ஒன்றை கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடத்தினர்.

இதன்போது கழிவுப் பொருட்கள் அகற்றல், நகரப் பகுதியை சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல், பொதுமக்கள், வர்த்தகர்கள் ஆகியோர் சேவை பெறுவதில் உள்ள கால தாமதங்கள் மற்றும் இடையூறுகளை நீக்குதல், பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி புனரமைப்பு பணிகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் முதற்கட்டமாக நகரப் பகுதியிலுள்ள கழிவுப் பொருட்களை வர்த்தகர்களின் உதவியுடன் பிரதேச சபை இணைந்து விரைவாக அகற்றுதல் என தீர்மானிக்கப்பட்டது. (2-277)

# கம்பவாரிதிக்கு புருஷோத்தமனின் பதில்



பாகம் 05

அன்புமிகு கம்பவாரிதி அவர்களுக்கு,

பாகம் நான்கில் தங்களுக்கு எழுதிய விளக்கங்கள் தமிழ்மக்கள் பேரவையைப் பற்றிய புரிதலுக்குப் போதுமானது என்று கருதுகிறேன். தங்களின் சில கருத்துக்களுடன் எனக்கு நிறையவே உடன்பாடு உண்டு.

எங்கள் அரசியல்வாதிகளின் சுயநலப்போக்கு எங்கள் இனத்திற்கு பெருங்கேடாய் அமைந்தது என்பது முற்றிலும் உண்மை.

இதைவிடப் பெருந்துயர் முந்தநாள் அரசியலுக்கு வந்து சேர்ந்த இளையவர்களும் ஊழல் புரிதலிலேயே கண்ணும் கருத்துமாய் உளர் என்பது உண்மைச் செய்தியாகும்.

வடக்கு மாகாண சபை முதலமைச்சரைச் சந்திக்காத பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சந்தித்தமை ஏற்புடையது என்று கூறியிருந்தீர்கள்.

அதற்காக இந்தியப் பிரதமர் மோடி பாகிஸ்தான் பிரதமரைச் சந்தித்த செய்தியை சான்றாதாரப் படுத்தியிருந்தீர்கள். எனினும் என்னைப் பொறுத்தவரை மேற்குறித்த இரண்டு சம்பவங்களும் வேறுபட்ட தளங்களையும் சூழமைவையும் கொண்டவை.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இருந்தும் பிரதமர் ரணில் அவரைத் திரும்பியும் பார்க்கவில்லை.

ஒரு நாட்டின் பிரதமர் அவ்வாறு நடப்பதற்குக் காரணம் என்ன? பிரதமர் ரணிலுக்கும் முதல்வர் விக்னேஸ்வரனுக்கும் இடையே முன்பின் முரண்பாடுகள் இருந்ததா எனில் எதுவுமே இல்லை.

இருந்தும் தந்தி என்ற இந்தியத் தொலைக்காட்சிக்கு பிரதமர் ரணில் அளித்த செவ்வி ஒன்றில் பிரதமர் ரணில் எங்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை பொய்யர் என்றுரைத்தார்.

அந்தோ! கொடுமை. பொய்யர் தம் பொய்யை மெய்யாக்க கூட்டமைப்பு நினைத்தமை மன்னிக்க முடியாத மகா கயமைத்தனமாகும்.

இத்தகைய கயமைத்தனங்களுடன் சேர்ந்து போவது, அவர்களைத் திருத்துவதென்பது நடக்கமுடியாத காரியம்.

காரணம் ஒன்று இரண்டு கயமைத்தனங்கள் அன்று. அவர்களின் சிந்தனையே கயமையாகிவிட்டன. இதற்குப் பல உதாரணங்களை முன் வைக்க முடியும். அதில் தாங்களும் அறிந்த சம்பவம் ஒன்று உண்டு.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களை தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்தது.

பொதுத் தேர்தல் காலத்தின்போது கூட்டமைப்பின் தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களின் தலைமையில் பிரசாரக்கூட்டம் நடைபெறும் என்று நோட்டீஸ் அச்சிட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட அந்தக்கூட்டம் பொன்னாலையில் நடந்தது.

கூட்டமைப்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா அவர்கள் அந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது,

நாங்கள் பாராளுமன்ற உறுப்பினராக வருவமோ இல்லையோ தெரியாது. ஆனால் இந்த மேடையில் உங்கள் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு ஒரு எம்.பி. ஏற்கனவே தெரிவாகியிருக்கிறார். அவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் என்று கணீர் என்ற குரலில் கூறிய போது, அவையில் இருந்து எழுந்த கரகோசத்திற்குப் பின்னர் நடந்தது என்ன?

தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளராக அறிவித்து அவர் தலைமையில் கூட்டம் நடத்திவிட்டு வெற்றி கிடைத்து இரண்டு நியமன எம்.பிக்களை கூட்டமைப்பு பெற்றுக்கொண்ட போது,

பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களுக்கு எம்.பி பதவியைக் கொடுக்காமல் செய்த கொடுமை இராமருக்குக் கைகேயி செய்த கொடுமையிலும் மோசமானது என்பதை அறம் உரைக்கும் பிதாமகராகிய தாங்கள் ஏற்பீர்கள் என்று நம்புகிறேன்.

ஊரெல்லாம் அறிவித்துவிட்டு கிடைத்த எம்.பி. பதவியைக் கொடுக்காமல் விட்ட கயமை படைத்தவர்கள் தமிழ்மக்களுக்காக ஏதும் செய்வார்கள் என்று தாங்கள் நம்பினால், நாம் செய்த பாவம் அவ்வளவுதான் என்று மட்டுமே சொல்ல முடியும்.

ஒரு கட்சிக்குள் பிணக்கு என்றால் அது தீர்க்கப்பட வேண்டும் என்று தாங்கள் கூறுவது முழுவதும் உண்மை. அப்படியானால் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களுக்கு எம்.பி.பதவியை கொடுக்காமல் விட்டபோது தமிழரசு க்கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா கொதித்தெழுந்திருக்க வேண்டாமோ?

பேராசிரியர் சிற்றம்பலம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர். எங்களுக்கு முன்னதாகவே கட்சிக்காகப் பாடுபட்ட ஒரு தலைவர். அவரை ஏமாற்றினால் அது பெரும் பாவம். அவருக்குப் பதவி கொடுக்கத் தவறின் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவேன் என்று மாவை.சேனாதிராசா இடித்துரைத்திருந்தால் அது நீதி என்பேன்.

ஆனால் அநியாயங்கள் நடக்கும்போதெல்லாம் மௌனமாக இருந்த மாவை. சேனாதிராசா, தமிழ்மக்கள் பேரவையில் பேராசிரியர் சிற்றம்பலம் இணைந்த போது பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாக்கூசாமல் சொல்லுகிறாரே! இவர்களை ஒன்றுபடுத்தி- ஒற்றுமைப்படுத்தி உரிமை பெற முடியுமா என்ன?

எவரையும் ஒற்றுமைப்படுத்த முடியும் என்றால், இராவணனை இராமன் வதம் செய்தது ஏன்? ஒன்றுவிட்ட சகோதரர்களை பாண்டவர்கள் பரலோகம் அனுப்பியது எதற்காக?

ஆக,ஒன்றை மட்டும் சொல்லுவேன். தமிழரசுக் கட்சியில் இருந்து பேராசிரியரை நீக்கினாலும் தமிழரசுக் கட்சி பேராசிரியர் சிற்றம்பலத்திற்குரியதாக இருக்குமேயன்றி அது ஒருபோதும் மாவை தரப்பிற்காக இருக்காது. இருக்கவும் முடியாது.

அன்பிற்குரிய கம்பவாரிதி அவர்களே! வடக்கு மாகாண சபையில் இருக்கக் கூடிய உறுப்பினர்களில் நான்கு ஐந்து பேர் மாகாண சபையில் நடந்து கொள்வதைப் பார்த்தால் தமிழ்மக்கள் பாவம் என்பது உங்களுக்குத் தெரியவரும்.

அந்தளவிற்கு அந்த உறுப்பினர்கள் நக்கலும் நையாண்டித்தனமும் செய்கின்றனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வது எந்தவகையிலாவது நியாயமாகுமா?

யாழ்ப்பாணத்திற்கு வந்த இந்தியப் பிரதமர் மோடி எங்கள் முதலமைச்சருக்குக் கொடுத்த மதிப்பு; யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஒரு சிறந்த தலைவர் என்று சூட்டிய புகழாரம் என்பவற்றால் தமிழ்மக்கள் தலை நிமிர்ந்து, நல்ல தலைவன் நமக்குக் கிடைத்தார் என்று புளகாங்கிதம் அடையும் போது,மூன்று,நான்கு இளம் மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சரை அவமதிக்குமாறு செயற்படுவது தம் தந்தைக்கு ஒப்பானவரை இழிவுபடுத்துவதற்குச் சமனன்றோ!

இத்தகையவர்கள் எங்கள் மாணவர்களுக்கு எங்ஙனம் முன்மாதிரியாக இருக்க முடியும். கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் ஒரு எம்.பிக்காக இவ்வளவு தூரம் அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்றால்; எங்கள் உறவுகளுக்கு புதுமாத்தளனில், முள்ளிவாய்க்காலில் நடந்த கொடுமை பற்றிய நினைவு இவர்களிடம் சிறிதளவேனும் உண்டா?

எதுவாயினும் அன்புக்குரிய கம்பவாரிதி அவர்களே! என்றோ ஒரு நாள் தங்களின் ஆசி தமிழ் மக்கள் பேரவைக்கு கிடைக்கும் என்பது என் ஆத்மபலத்தின் மீதான நம்பிக்கை.

அன்புமிகு கம்பவாரிதி அவர்களே! 1988 ஆம் ஆண்டு தங்களை நேரில் சந்தித்துக் கதைக்கும் பேறு பெற்றேன்.

புலவர் ஈழத்துச் சிவானந்தரின் ஆலயமணி என்ற சஞ்சிகையின் வெளியீட்டிற்காக தாங்களும் மற் றும் திருநந்தகுமார், சித் தாந்த சரபம் கணபதிப் பிள்ளை, புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோரும் என்னூருக்கு வந்திருந்தீர் கள்.அந்த நிகழ்வில் மாண வனாக இருந்த எனக்கும் உரையாற்ற சந்தர்ப்பம் தரப்பட்டது. என்னுரை தொடர்பில் உங்கள் வாழ்த் தையும் பெறும் பேற்றை அன்றைய நாளில் பெற்றேன்.

எனினும் என் எழுதாக் குறை காரணமாக தங்களைச் சந்திக்க வேண்டும் என்ற என் அவா இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்பு நிறைவேறியது.

ஆம், 2013 இல் தங்களைச் சந்திக்கும் பாக்கியம் பெற்றேன். தாங்கள் நடுவராக இருக்க, தமிழகத்தின் தகைசார் சான்றோர்களுடன் இச் சிறியேனும் பட்டி மண்டபத்தில் வாதம் புரிய சந்தர்ப்பம் தந்தீர்கள்.

2015 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த கம்பன் விழாவின் வழக்காடு மன்றத்தின் போது தமிழகத்தில் இருந்து வருகை தரவேண்டிய தமிழறிஞரின் வருகை தாமதமாக, மூவர் அடங்கிய நீதி ஆயத்தில் நம்மையும் பொருட்டாய்க் கருதி அதில் இருத்தி மகிழ்ந்தீர்கள். இந்த உயர் பெரும் உத்தமக் குணம் யார்க்குள.

சிறியவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்து அவர்களையும் ஆளாக்க வேண்டும் என்ற தங்களின் உயர்ந்த நினைப்பே உங்கள் புகழை உலகம் முழுவதும் பரவச் செய்கிறது.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் என்று நீங்கள் அடிக்கடி சொல்வதுண்டு.

ஆகையால் தமிழ்மக்கள் பேரவையின் கருமம் கண்டு தாங்கள் மெய்ப்பொருள் அறிவீர்கள். அப்போது உங்களின் ஆசியும் ஆத்மபலமும் தமிழ்மக்கள் பேரவைக்கு நிச்சயம் கிடைக்கும் என்பது என் அசையாத நம்பிக்கை.

அதுவரையில்; அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் நலன் கருதிய ஒரு பலமான மக்கள் அமைப்பு அவசியம் என்று தாங்கள் கருதினால், தமிழ் மக்கள் பேரவையின் பணி குறித்த உங்கள் அவதானத்தை கரிசனையோடு அருளுக.

அது தமிழ்மக்கள் பேரவை நம் அனைவரினதும் அமைப்பு என்ற பொதுமையை நிச்சயம் ஏற்படுத்தும்.இதுவே நீங்கள் குறிப்பிட்ட ஆச்சரியமாகவும் இருக்கும்.

(நன்றியுடன் முற்றும்)

**புருஷோத்தமன்**

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எல் நினோவின் சீற்றமும் சென்னையின் வெள்ளப் பேரனர்த்தமும்


## யாழ்.குடாநாடு மயிரிழையில் தப்பியதா?



பேராசிரியர்
எஸ்.ஏ.நோர்பேட்
புவியியல்துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

அதுமட்டுமன்றி சென்னை நகரில் மட்டும் சந்தையின் கூட்டு மூலதனம் 25.000 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்னையில் அமைந்துள்ள ரிவிஎஸ் நிறுவனத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரமாகப் பெய்த மழையின் காரணமாக 15,000 அலகுகள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன. வெள்ளப் பெருக்கின் காரணமாக 1000 கோடிக்கு மேல் காப்புறுதி இழப்பீடு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனப் பாரக் கைத்தொழில்கள், மென்பொருள் விருத்தி, கல்வி மற்றும் சுகாதார நிறுவனங்கள் பரந்தளவில் விருத்தி செய்யப்பட்ட ஸ்திரமான பொருளாதாரத் தளத்தினைக் கொண்டு அபரிமிதமாகக் குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்று வந்த சென்னையை இந்த வெள்ளப் பெருக்கு பெரிதும் உலுப்பி விட்டது.

சென்னை உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் படி சென்னையில் ஒன்றரை இலட்சம் கட்டுமானங்கள் சட்டரீதியற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை தலைநகர அபிவிருத்தி அதிகார சபை எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளது. குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், ஆறுகள் என்பன கடந்த 20 வருடங்களாக நிரப்பப்பட்டு பல மாடிக் கட்டடங்கள், கைத் தொழில் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னையில் காணப்பட்ட ஏறக்குறைய 300 குளங்களும் ஏரிகளும் மறைந்து விட்டன. தகவல் தொழில்நுட்ப வசதிகள்யாவும்பொதுவாகசதுப்பு நிலப் பகுதிகளிலும், நீர் நிலைகள் மற்றும் நீர் படுக்கைகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.



நகரின் பிரபல்யமான மோட்டார் வாகனத் தயாரிப்புக் கைத்தொழிலின் கேந்திர மையம் ஏரிகளின் நீரேந்துப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. 2001-2013 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 8000 மரங்களும், 52 ஏக்கர் பரப்பளவு கொண்ட காடுகளும் வெட்டியழிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 39 புனர்நிர்மாணச் செயற்றிட்டங்கள் மற்றும் புதிய கட்டுமானங்கள் அனுமதியின்றியும் சூழற்தாக்க மதிப்பீடுகள் இன்றியும் அமைக்கப்பட்டுள்ளன.


சென்னை நகரில் குவிந்து காணப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் திண்மக் கழிவுகள் குப்பைக் கூழங்களும் வெள்ளப்பெருக்கின் தாக்கத்தை அதிகரிப்பதற்கான காரணிகளாக இருந்துள்ளன.

சென்னையில் 1976 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் அடையாறு பாலம் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் சென்னை விமான நிலையம் அடையாறு நதியின் வெள்ளச் சமவெளியிலேயே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பேருந்து சுற்று வட்டம், கடுகதிப் பாதைகள், புறவழிப் பாதைகள், தகவல் தொழில்நுட்ப மையங்கள், பொறியியல் கல்லூரிகள் என்பன நீர் நிலப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. தொலைத் தொடர்பு மையங்கள், விசேட பொருளாதார மையங்கள், வாழ்விடங்கள் முக்கிய வடிகாற் படுக்கைகளிலும் நீரேந்து பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே சென்னையின் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்திற்கு மக்களின் ஊன்றிய நலன்கள், நகரத் திட்டமிடலில் காணப்பட்ட தவறுகள், அரசியல்வாதிகளின் ஊழல்கள் என்பனவே பிரதான காரணமாக இருந்துள்ளன.

பள்ளிக்கரணைச் சதுப்பு நிலம் 250 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்தது. இன்று அது 4 சதுர கிலோ மீற்றராகக் குறைந்துள்ளது. வியாசர்பாடியில் அமைந்துள்ள தொடர் நதி கால்வாயில் உள்ள 16 குளங்களில் இன்று எதுவும் காணப்படவில்லை. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியிலும் திட்டமிடப்படாத கட்டமைப்புக்களே அதிகம். மதுர வயல் ஏரி ஏறக்குறைய 120 ஏக்கர் பரப்பளவில் இருந்து இன்று 25 ஏக்கராக குறைந்து விட்டது. வெள்ள நீரினைத் தேக்கி வைக்க கூடிய கட்டமைப்புக்கள் குறிப்பாக விருகம்பாக்கம், பாடி, வில்லிவாக்கம் குளங்கள் உத்தியோகபூர்வமாகக் கைவிடப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு என்றுமில்லாதவாறு மிகவும் வெப்பமான வருடங்களாகக் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் "நோவா" தகவலின் படி இந்து சமுத்திரத்தினைச் சூழ்ந்து காணப்பட்ட நிலமும் சமுத்திரப் பகுதியும் வெப்பத்தின் காரணமாக பெருமளவு ஆவியாக்கத்தினைக் கொண்டிருந்தது எனக் கூறியிருந்தது. எனவேதான் மிகச் செறிவான மழைப் புயல்களை உருவாக்குவதற்கான உந்து சக்தியாக இது அமைந்திருந்தது.

சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்திற்கு எல் நினோ மட்டுமன்றி வேறு பல காரணிகளும் காரணமாக இருந்துள்ளன. மிகை வெப்பத்தின் காரணமாக ஏற்பட்ட ஆவியாக்கத்தின் காரணமாக தாழ்மட்டத்தில் ஈரப்பதன் பெருமளவு திரட்சியடைந்தது. அத்துடன் ஈரப்பதனின் நகர்வானது மேல் வளியில் மிகவும் வலிமையாக இருந்தது. இத்தகைய மேல் வளி ஈரப்பதன் முகிலின் விரிவடைதல் காரணமாக முகில்கள் மேலும் மேலும் செறிவடைந்தது. இத்தகைய ஒருங்கிணைந்த நிகழ்வு இடம்பெற்றதன் காரணமாகவே வானம் கிழிந்தது போன்ற மழை ஏற்பட்டுப் பெரு வெள்ளம் உருவாகியது.




கிழக்குப் பகுதியில் இருந்து மேல் வளியில் ஏற்பட்ட விரிவடைதலானது மேற்காக சென்னையினை நோக்கியவாறு அமைந்திருந்தது. இந்நிலைமையில் சிறிது மாற்றம் ஏற்பட்டு சற்றுத் தெற்காக நகர்ந்திருக்குமானால் யாழ்..குடாநாடு வரலாறு காணாத வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டிருக்கும். மிகத் தீவிரமான வெப்பச் செறிவு வங்காள விரிகுடாவில் சற்று வடக்காக அமைந்து இருந்தமையினாலேயே இந்தப் பேரனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

அரசியல்வாதிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளும் சட்டத்தினை மதிக்காமல் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களும் இறுதியில் முழு நகரத்தினையே வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டது. பூகோள வெப்பமடைதலின் காரணமாக எல் நினோவின் தாக்கத்தினால் எதிர்காலத்தில் அதி வேகப் புயல்கள்உருவாகப்போகின்றன. வங்காள விரிகுடாப் பகுதி தென்னாசியாவில் முக்கியமான மையமாகக் காணப்படும். எதிர்காலத்தில் இத்தகைய அனர்த்தங்களில் இருந்து சென்னையை யார் பாதுகாக்கப் போகின்றார்கள் என்பதே இன்று எழுந்துள்ள வினாவாகும். யாழ்.குடாநாட்டு மக்களும் எதிர்காலத்தில் காலநிலை மாற்றங்கள். மற்றும் எல்நினோவினால் ஏற்படும் வரட்சி. வெள்ளப் பெருக்குகள் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருத்தல் அவசியம்.



## வாரத்திற்கு ஒரு புதிர்! 151

மரபணு மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களில் (Genetically Modified Organisms / (GMO) அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (U.S.FDA) வர்த்தக ரீதியாக அனுமதியளிக்கப்பட்ட மீனினம் எது?

**புதிர் 151இற்கான விடைகளை 18.01.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**கு.குணாளன்**
**ஆசிரியர், பிரிவு A**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**மீன்பிடி விஞ்ஞானத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
**இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.**

**புதிர் 150 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

திரு.கே.ராஜகோபால்
அடைக்கலம் தோட்டம், கந்தசாமி
கோவிலடி, வட்டுக்கோட்டை

**புதிர் 150 க்கான கேள்வியும் விடையும்:**

அம்பீபோபியா (Apiphobia) எதற்காக பயப்படுதலை குறிக்கும்?
தேனீக்கள் கடிப்பதற்குரிய பயம்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 151

**சரியான விடை:-**............................................
**முழுப்பெயர்:-**............................................
**முகவரி:-**............................................
**தொ.பே. இல:**............................................
**கையொப்பம்:**............................................

# உலக நாடுகளின் கண்டனத்துக்குள்ளான வடகொரியாவின் ஐதரசன் குண்டுச்சோதனை

(சியோல்)

**உலக நாடுகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் வடகொரியா தனது அணு ஆயுத திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. பொருளாதார தடைகளையும் பொருட்படுத்தாமல் அந்நாடு, தான் நினைத்ததை நடத்திக்காட்டி வருவது உலக அரங்கை அதிர வைத்து வருகிறது. இதுவரை அணு குண்டுகளையும், அணு ஏவுகணைகளையும் சோதித்துப் பார்த்து வந்த வடகொரியா முதல் முறையாக அணு குண்டை விட அதிபயங்கரமான ஐதரசன் குண்டினை வெடித்து நேற்று முன்தினம்சோதித்துள்ளது. இதற்கு உலக நாடுகள் தங்களது கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளன.**



ஜப்பான்

ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே, "வடகொரியா ஐதரசன் குண்டுவெடித்து சோதித்திருப்பது நமது நாட்டுக்கு மிகுந்த அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதை முற்றிலும் சகித்துக்கொள்ள முடியாது" என கூறினார்.


மேலும் அவர் கூறும்போது, "இது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்துக்கு எதிரான செயல். அணு ஆயுதப்பரவலுக்கு எதிரான சர்வதேச முயற்சிக்கு விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய சவால்" என்றார்.

தென்கொரியா

தென் கொரியாவின் ஜனாதிபதி பார்க் குன்ஹே, "வடகொரியா ஐதரசன் குண்டு சோதனை நடத்தி இருப்பது மிகவும் ஆத்திரம் ஏற்படுத்தும் செயல் ஆகும். இது தென்கொரியாவின் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தல் ஆகும். சர்வதேச அமைதிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் விடுக்கப்பட்டுள்ள சவாலும் ஆகும்" என கருத்து தெரிவித்தார்.

தென்கொரியா முன்னதாக விடுத்துள்ள அதிகாரபூர்வ அறிக்கையில், "ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இன்னும் கூடுதலான பொருளாதார தடைகளை விதிக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். வடகொரியா தனது செயலுக்கு உரிய விலையை கொடுத்தே தீர வேண்டும்" என கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவை பொறுத்தமட்டில், வடகொரியாவின் ஐதரசன் குண்டு சோதனையை உறுதிசெய்யவில்லை. அதே நேரத்தில், "வடகொரியாவின் எந்தவொரு ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்கு உரிய பதிலடி கொடுப்போம்" என வோஷிங்டன் கூறுகிறது.




சீனா

வடகொரியாவின் இராஜதந்திர காப்பாளராக விளங்குகிற சீனா இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "வெளியாகியுள்ள ஐதரசன் குண்டு வெடிப்பு சோதனை குறித்த தகவல்களை ஆராய்ந்து வருகிறோம். அந்த நாடு, ஐதரசன் குண்டுவெடிப்பு குறித்து முன்கூட்டி எங்களுக்கு எந்தவொரு தகவலும் தெரிவிக்கவில்லை" என கூறியது.

அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஜூலி பிஷப், வடகொரியாவின்ஐதரசன் குண்டு சோதனைக்கு தனது நாடு கடும் கண்டனம் தெரிவிப்பதாக கூறினார்.

இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், "வடகொரியா அச்சுறுத்தும் நாடாக செயற்படுவதை, இந்த ஐதரசன் குண்டு சோதனை எடுத்துக்காட்டுகிறது. இந்த விடயத்தில் வடகொரியாவிடம் நேரில் எங்களது கவலையை பதிவு செய்வோம். ஐ.நா. கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க வேண்டும்" என தெரிவித்தார்.

பிரிட்டன்

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் பிலிப் ஹேமண்ட் கருத்து தெரிவிக்கையில், "வடகொரியாவின் ஐதரசன் குண்டு வெடிப்பை பிரிட்டனும், சீனாவும் எதிர்க்கின்றன. வடகொரியா மீதான பொருளாதார தடையின் பிடி இறுக வேண்டும்" என தெரிவித்தார்.

பிரான்ஸ்

பிரான்சும் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. அந்த நாட்டின் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே, "ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்துக்கு எதிரான இந்த செயல், ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று" என தெரிவித்தார். (இ-7)

## ஹிரோஷிமாவை அழித்த அணுகுண்டை விட 1000 மடங்கு சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டு

இரண்டாம் உலகப்போரின் இறுதிக் கட்டத்தில் ஜப்பானின் ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுகுண்டை விட வடகொரியா ஐதரசன் வெடிகுண்டு ஆயிரம் மடங்கு சக்திவாய்ந்தது என சுட்டிக்காட்டுகின்றனர் நிபுணர்கள்.

அணுகுண்டைவிட மிகவும் சக்தி வாய்ந்த "சுப்பர் வெடிகுண்டு" என்று கருதப்படும் ஐதரசன் வெடிகுண்டை வெற்றிகரமாக சோதித்ததாக வடகொரியா அறிவித்துள்ளதையடுத்து உலக நாடுகள் வடகொரியாவுக்கு கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

நேற்று முன்தினம் புதனன்று வடகொரியா சக்தி வாய்ந்த ஐதரசன் வெடிகுண்டை வெடித்துச் சோதனை மேற்கொண்டுள்ளது ஆரம்பகட்ட நிலநடுக்க அலைகள் தரவுகளால் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதைத்தவிர இதனை உறுதி செய்யும் தரவுகள் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அணுகுண்டுகள் அணுப்பிளவை நம்பியிருக்கும் ஒன்று. அதாவது அணுமின் நிலையங்களில் செயற்படுவது போன்றது. இந்நிலையில் தெர்மோ நியூக்கிளியர் வெடிகுண்டு என்றும் அழைக்கப்படும் ஐதரசன் குண்டு அணுப்பிளவு என்பதற்குப் பதிலாக 'ஃபியூஷன்' என்பதை அடிப்படையில் இயங்குவது. அதாவது அணுக்கருக்கள் ஒன்று சேர்ந்து கடும் ஆற்றலை வெளிப்படுத்துவதாகும்.

இது குறித்து டோக்கியோ பல்கலைக்கழக பேராசிரியர் டகாவ் டகஹரா கூறும்போது, "சூரியனுக்குள் என்ன நடக்கிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள். கோட்பாட்டு அளவில் இதன் நடவடிக்கைகள் எல்லைகளற்றன, வரம்பு நிர்ணயங்களுக்குட்படாதது. வெளிப்படும் ஆற்றல் மிகப்பெரியது, அதாவது எவ்வளவு பெரியது என்பதை விபரிக்கும் பொருத்தமான வார்த்தை இல்லை" என்றார்.

இதன் இன்னொரு பெரிய அச்சுறுத்தல் என்னவெனில், கண்டம் விட்டு தாக்கும் ஏவுகணையிலும் வைத்து தாக்கக்கூடிய அளவுக்கு மிகப்பெரிய ஆற்றலை உள்ளடக்கிய மிகச்சிறிய வடிவிலும் ஐதரசன் குண்டுகளை தயாரித்து விட முடியும் என்பதே என்கிறார் டகஹரா.

ஆனால் ஐதரசன் குண்டுகளை கட்டுப்பாட்டுடன் இயக்க, துல்லியமாக இயக்கக் கூடுதல் தொழில்நுட்பம் தேவை. ஏனெனில் மிகப் பெரிய அளவில் ஆற்றல் தேக்கி வைக்கப்பட்டு வெடிக்கச் செய்யப்படுவதால் கட்டுப்பாட்டுத்தொழில்நுட்பம் மிகப்பெரிய அளவில் தேவைப்படுவதாகும்.

அதாவது அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் சீனா ஆகிய நாடுகளே இத்தகைய பெரிய அணுத்திறப்பாடுகளைக் கொண்டது. பிற நாடுகள் இதனை உற்பத்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அதற்கான சான்றுகள் இல்லை. இந்நிலையில் வடகொரியா தற்போது ஐதரசன் குண்டை சோதித்ததாகக் கூறியுள்ளது கவலையான எதிர்வினைகளுக்குக் காரணமாகியுள்ளது.

இதுவரை ஐதரசன் குண்டுகள் எந்த இலக்கையும் நோக்கி வீசப்பட்டதில்லை. 1950களில் அமெரிக்கா முதன்முறையாக "மைக் அண்ட் பிராவோ"என்ற ஐதரசன் குண்டை பரிசோதித்தது. உடனடியாக ரஷ்யாவும் இதே ரக குண்டை சோதித்தது.

இதில் பிராவே ஐதரசன் குண்டு சோதனை செய்யப்பட்ட- போது அப்பகுதியின் அருகில் சென்ற ஜப்பான் மீன்பிடிப் படகு கதிர்வீச்சால் பீடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உலக அமைதிக்காக போராடி வருபவர்கள், நாடுகள், தலைவர்கள் ஆகியோர் வடகொரியாவின் இத்தகைய செய்கையினால் கடும் வருத்தமும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். (இ-7)


## இந்தியா கவலை

(சியோல்)

வடகொரியா, அணுகுண்டை விட அதிக ஆற்றல் வாய்ந்த ஐதரசன் குண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தி இருப்பதாக அறிவித்துள்ளது. இதற்கு இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி முற்பகல் 10 மணிக்கு (இந்திய நேரம் காலை 7 மணிக்கு) புங்க்யே ரி நகரில் உள்ள அணு ஆயுத சோதனைத்தளத்தில் ஐதரசன் குண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதாக வடகொரியா அதிகாரபூர்வமாக அறிவித்தது.

அதற்கு முன்னதாக புங்க்யே ரி நகரையொட்டிய பகுதியில் ரிக்டர் அளவுகோலில் 5.1 புள்ளி அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. அந்த நில நடுக்கத்தை தொடர்ந்துதான், வடகொரியா ஐதரசன் குண்டு சோதனை நடத்தியுள்ளதை அறிவித்தது. இதேவேளை ஐதரசன் குண்டு சோதனையைத் தொடர்ந்துதான் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிகிறது.



இந்நிலையில் வடகொரியா ஐதரசன் குண்டு வெடித்து சோதித்திருப்பதாக அறிவித்திருப்பது குறித்து, டில்லியில் மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் விகாஸ் சுவருப்பிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், "வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்தி இருப்பதாக செய்திகள் வந்துள்ளன. கிடைத்துள்ள தகவல்களை ஆராய்ந்து வருகிறோம். சர்வதேச அளவில் அளித்துள்ள வாக்குறுதிகளுக்கு மாறாக வடகொரியா மீண்டும் செயற்பட்டிருப்பது மிகுந்த கவலை அளிப்பதாக அமைந்துள்ளது" என பதில் அளித்தார்.

மேலும், "பிராந்திய அமைதிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இருந்து வடகொரியாவை தடுக்க வேண்டும்" எனவும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்களுக்கு தொடர்ந்து துரோகமிழைக்கிறது இந்தியா

## பேராசிரியர் சூசை ஆனந்தன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி கைதாகும் இந்திய மீனவர்களை விடுதலை செய்வதில் காட்டும் அக்கறையை, மீனவர்கள் எல்லை தாண்டுவதனை கட்டுப்படுத்துவதில் காட்டுவதில்லை. இது தமிழ் மக்களுக்கு இந்திய அரசு செய்யும் மற்றுமொரு துரோகமாகும் என யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**



மேலும் இந்த பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்திய, இலங்கை அரசுகளை நம்பியிராமல் நாடு முழுவதிலுமுள்ள மீனவர்களை ஒன்றுதிரட்டி போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலமே எஞ்சியுள்ள எமது கடல் வளத்தையாவது பாதுகாக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். நாட்டில் ஆட்சியை பிடித்துள்ள புதிய அரசு மீன்பிடியில் இருந்த சில கட்டுப்பாடுகளை தளர்த்திய போதிலும் மீன்பிடித்துறை வளர்ச்சி பெறாமலேயே தற்போதும் உள்ளது.

இதற்குக் காரணம் மீனவர்களின், குறிப்பாக வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமையே. பெரும்பாலான மீனவர்கள் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த நிலையில் மாற்று இடங்களில் தங்கி உள்ளனர். இவர்களது காணிகளை இலங்கை இராணுவம் பிடித்து வைத்துள்ளது. குறிப்பாக வலி.வடக்கில் இந்த நிலை தான் காணப்படுகின்றது.

அரசினால் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை எமது மீனவர்களும் மேற்கொள்கின்றனர். குறிப்பாக சுருக்கு வலைகள், தங்கூசி வலைகள் பாவனையால் வடக்கில் உள்ள ஏனைய சிறு மீனவ தொழிலாளர்கள் தொழில் இழப்பை எதிர்நோக்குகின்றனர். எம்மிடையே பல நாட்கலம் இல்லாத காரணத்தாலும் ஆழ்கடல் மீன்பிடி சாத்தியமற்று போயுள்ளது.

எங்களிடமுள்ள துறைமுகங்கள், குறிப்பாக மயிலிட்டி போன்ற மீன்பிடிக்கு வரலாற்று பிரசித்தி பெற்ற துறைமுகங்களும், காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களும் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளன. மீன்பிடித்துறை தொடர்பில் எமது மீனவர்களுக்கு போதிய பயிற்சிகள், ஆராய்ச்சிகள் வழங்கப்படாமையாலும் எமது மீனபிடித்துறை வீழ்ச்சியை நோக்கி செல்கின்றது.

முதலில் இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால்தான் எமது மீன்பிடித்துறை வளர்ச்சியடையும். இதன் மூலம்தான் தேசிய உற்பத்தியை அதிகரிப்பு செய்ய முடியும். எங்களுடைய பிரதேசத்திலிருந்தே வெளிநாடுகளுக்கு இறால், நண்டு போன்ற கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் யுத்தம் காரணமாக இந்த நிலை மாற்றமடைநது. இதனை தென்னிலங்கை பிடித்துக்கொண்டது.

மன்னாரில் வாரத்தில் மூன்று நாட்கள் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். வாரம் ஒன்றில் மூன்று நாட்கள் மன்னார் வளைகுடா தென்னிலங்கை மீனவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவர்கள் நீளமான தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது மீன் வளம் என்பது அடியோடு வாரி அள்ளப்பட்டு செல்கின்றது.

இவ்வாறு எமது மீன்பிடித்துறை எமது நாட்டு அரசினால் நலிவுக்குள்ளாக்கப்பட்ட நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல் என்பது எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு முடக்கும் செயலாக அமைந்துள்ளது. இதனை இந்திய - இலங்கை அரசுகள் கட்டுப்படுத்தாது தமது அரசியல் நோக்கங்களுக்காக வாய் மூடி மௌனம் சாதித்து வருகின்றன.

இந்த இரு அரசுகளும் மௌனமாக இருப்பதனை வடக்கின் பிரதான கட்சியாக உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பேசாமல் இருநது வேடிக்கை பார்த்து வருகினறது. இவ்வாறு தொடரும் எமது மீனவர்கள் மீதான அநீதிகளுக்கு நாடுகளின் அரசாங்கங்களை நம்பாமல் அனைத்து மீனவர்களையும் ஒன்றுதிரட்டி போராட்டங்களில் ஈடுபடுவதே ஒரே வழி என அவா் மேலும் தெரிவித்தார். (இ-4)

# 24 மணித்தியாலங்களில் 210.6 மி.மீ.மழை வீழ்ச்சி

## கல்வி நடவடிக்கைகளும் பாதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணிநேரத்தில் மாத்திரம் 250 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.

தொடராக பெய்துவரும் அடை மழை காரணமாக பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகவும் வீதிகளில் வெள்ளம பாய்வதால் போக்குவரத்தும பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும தெரிவித்தார்.

மேலும், காத்தான்குடி, ஏறாவூர், மட்டக்களப்பு, ஆரையம்பதி, வாகரை உட்பட பல பிரதேச செயலகப்பிரிவுகளில் கடும் மழை பெய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இரு தினங்கள் இடைநிறுத்தப்படுவதாக பதில் பதிவாளர் அ.பகிரதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைகழகத்தின் வந்தாறுமூலை வளாக விடுதியில் வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக நேற்று வியாழன் முதல் இன்று வெள்ளிக்கிழமை வரை கல்வி நடவடிக்கைகளை இடை நிறுத்துவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

சீரற்ற காலநிலை தொடரும் பட்சத்தில் தொடர்ந்து கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்படுவது தொடரபாக மாணவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பொங்கல் விழா நாளை

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கத்தின் மாபெரும் பொங்கல் விழா நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதற்கமைய நாளை மாபெரும் மரதனோட்டப் போட்டி இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு இளவாலை சித்திரமேழி சந்தியில் இருந்து ஆரம்பிக்க இருக்கும் ஆண்களுக்கான வயதெல்லை அற்ற மரதன் ஓட்டப் போட்டியின் பாதையானது சித்திரமேழி சந்தி, பெரியவிளான் சந்தி, தெல்லிப்பழை சந்தி, மாவிட்டபுரம் சந்தி, சேந்தாங்குளச்சந்தி, சித்திரமேழிச் சந்தி வரையாக 15 கிலோ மீற்றர் தூரத்தை கொண்டது.

போட்டிக்கான பதிவுகளை போட்டியாளர்கள் இன்றைய தினம் மேற்கொள்ள முடியும். இன்று பதிவுகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் நாளைய தினம் போட்டி ஆரம்பிக்க முன்னரும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் தாச்சிச் சுற்றுப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இதற்கான பதிவுகளையும் இன்று முதல் மேற்கொள்ள முடியும்.

மேலும் ஏனைய போட்டிகள் 15 ஆம் திகதி பொங்கலன்று இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணிக்கு இளவாலை கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திற்கு அண்மித்த பட்டமேற்றுத் திடலில் பட்டமேற்றல் போட்டி இடம்பெறவுள்ளது.

கடந்த வருடத்தில் நடத்தப்பட்ட போட்டி விதிமுறைகள் இவ் வருடமும் மேற்கொள்ளப்படவுள்ளன.

தொடர்ந்து சறுக்குமரம் ஏறுதல், கயிறிழுத்தல், தலையணைச் சணடை, தயிர்முட்டி அடித்தல், பெண்களுக்கான கிடுகுபின்னல், தேங்காய் துருவுதல், சங்கீதக்கதிரை மற்றும் சிறுவர்களுக்கான போட்டிகள் என்பன அனைத்தும் அன்றைய தினம் பி.ப. ஒரு மணிக்கு வாலிபத் திடலில் ஆரம்பமாகும் இப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்புபவர்களும் போட்டி ஆரம்பமாக முன்னதாகவே பதிவுகளை மேற்கொள்ள முடியும். அவற்றை தொடர்நது மாலை 6.30 மணி முதல் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெறும.

இவ் அனைத்து போட்டிகளிலும் எக்கிராமத்தை சேர்ந்தவர்களும் பங்குகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பரிபாலன சபையின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் காசிப்பிள்ளை கஜன் தலைமையில் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# முதல்வர் முப்தி முகமது நேற்று காலமானார்



ஜம்மு காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சயீத் (79) நேற்று காலமானதாக ஜம்மு காஷ்மீர் மாநில கல்வித் துறை அமைச்சர் நயீம் அக்தர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநகரில் கடந்த 24 ஆம் திகதியன்று முப்தி முகமது சயீத்துக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனி வமானம் மூலம் டெல்லிக்கு கொணடு வரப்பட்டு எய்ம்ஸ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாகவும், நுரையீரலில் ஏற்பட்டுள்ள தொற்று காரணமாக அவருக்கு தொடர்ந்து செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அண்மையில் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சட்டசபைக் கூட்டம் நடைபெற உள்ள நிலையில் முப்தி முகமது சயீத் காலமாகியிருப்பதால் அவரது மகள் முப்தி மெகபூபா ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முதல்வராக விரைவில் பதவியேற்கலாம் என்றும் கூறப்படுகிறது. (இ-7)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 07.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.84 | 146.07 |
| பவுண்ட் | பிரிட்டன் | 206.75 | 214.45 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 152.28 | 158.62 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 140.11 | 146.19 |
| டொலர் | கனடா | 99.93 | 104.26 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.83 | 103.70 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.10 | 102.06 |
| ரூபா | இந்தியா | 2.1533 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.1735 |
| குவைத் | டினார் | 473.0189 |
| ஓமான் | ரியால் | 374.0535 |
| கட்டார் | ரியால் | 39.5411 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3691 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.2068 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 100 | 130 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 250 | 300-400 | 350 | 300 |
| தக்காளி | 50 | 70 | 55 | 70 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 120 | 120 | 90 | 120 | 120 | 140 |
| கரட் | 200 | 120 | 200 | 200-400 | 200 | 260 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 80 | 100 | 60 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 110 | 120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 200 | 130 | 130-200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 180 | 100 | 80 | 120 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 100 | 120 | 120 | 150 |
| லீக்ஸ் | 140 | 120 | 90 | 120 | 120 | 150 |
| பீற்றூட் | 180 | — | — | — | — | — |
| கறிமிளகாய் | 300 | — | 200 | 300 | 400 | 300 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — | — |
| போஞ்சி | 200 | — | — | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | — | — | 100 | — |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 200 | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 50 | — | 70 | 80 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஐ.நா சபையில் பண்ருட்டி ராமச்சந்திரன் பேச்சு 74

### துணிகரத் திட்டம்

நிர்மலாவை எப்படியாவது சிறையில் இருந்து மீட்க வேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் முனைப்புடன் இருந்தனர். 1984 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் திகதி கொழும்பு ஐகோர்ட்டில் நடைபெறும் விசாரணையில் நிர்மலாவை ஆஜர்ப்படுத்த அரசு முடிவு செய்திருந்தது. அதற்கு முன்னதாக அவரை மீட்க துணிகரத் திட்டத்தைப் புலிகள் தீட்டினார்கள்.

ஜூன் 10 ஆம் திகதி இரவு 7.15 மணி அளவில் விடுதலைப்புலிகள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் மட்டக்களப்பு சிறைச் சாலைக்குச் சென்றனர். விடுதலைப்புலிகள் அனைவரும் சிறைக் காவலர்கள் போல உடையணிந்து இருந்தனர்.

சிறைக்காவலர்களை அழைத்து கொழும்பு நகரில் இருந்து சில கைதிகளை அடைப்பதற்காக கொண்டு வந்திருப்பதாகக் கூறி கதவைத் திறக்கச் செய்தனர். விடுதலைப்புலிகள் உள்ளே நுழைவதற்குள் ஏதோ அசம்பாவித சம்பவம் நடக்கப்போகிறது என்பதை உணர்ந்து சிறை அதிகாரிகள் உஷாரானார்கள். திறந்த கதவுகளை மூட முயற்சி மேற்கொண்டனர். சிறைச் சாலைக்குள் துப்பாக்கி பிரயோகம் செய்வது உசிதமானதல்ல என்ற முடிவுக்கு விடுதலைப்புலிகள் வந்தனர். இதனால் துப்பாக்கியைத் துணைக்கு அழைக்காமல் கைகளால் தாக்குதல் நடத்தி 2 சிறை அதிகாரிகளை மடக்கினார்கள்.

சிறைக்குள்ளேயும் பலத்த பாதுகாப்பு இருந்தது. 2 ஆவது இரும்புக் கதவின் சாவியைச் சிறை அதிகாரிகளிடம் இருந்து அவர்களால் பெற முடியவில்லை.

இதனால் அந்த இரும்புக் கதவைப் பலமாக உடைத்துத் திறந்தனர். விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலைக் கண்ட சிறைக் காவலர்களில் பலர், எதிர்த்துத் தாக்காது, உயிர் தப்பினால் போதும் என்று ஓடி ஒளிந்தனர்.

### மீட்பு

இதனால் விடுதலைப்புலிகளுக்கு வேலை எளிதானது



பண்ருட்டி ராமச்சந்திரன்

பெண்களுக்கான சிறைக் கதவை உடைத்தனர். நிர்மலா அடைக்கப்படடிருந்த அறையின் காவலாளி சாவியுடன் ஓடி ஒ ளிந்து கொண்டதால் அந்தக் கதவையும் விடுதலைப்புலிகள் உடைத்தனர். வெளியே ஏதோ நடக்கிறது என்பதை அறிந்த நிர்மலா, தப்பிச் செல்வதற்குத் தயார் நிலையில் இருந்தார். கதவை உடைத்ததும் நிர்மலாவும் விடுதலைப்புலிகளும் வெளியேறினார்கள்.

நிர்மலா சிறை மீட்கப் பட்டதும், அவரையும் அவருடைய கணவர் நித்யானந்ததையும் படகு மூலம் விடுதலைப்புலிகள் தமிழகத்திற்கு அழைத்து வந்தனர். விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், பேபி சுப்பிரமணியம் ஆகியோர் அவர்களைப் புலவர் புலமைப் பித்தன் இல்லத்தில் தங்க வைத்தனர்.

மட்டக்களப்பு சிறை மீட்பு விடுதலைப்புலிகளின் போரா ட்ட வரலாற்றில் தீரமிக்க ஒரு சிறப்பான அத்தியாயம் ஆகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறிதது ஐ.நா. சபையில் பண்ருட்டி ராமச்சந்திரன் பேசினார். அப்போது அவர், தமிழர்களைக் கொன்று குவிப்பது உள்நாட்டு விவகாரமா? என்று கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் தமிழர்கள் மீது சிங்களவர்களும் இராணுவமும் நடத்திய கொலை வெறித் தாக்குதலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். லட்சக்கணக்கான தமிழர்கள் வீடுகளை இழந்தனர்.

இலங்கைக்கு அமெரிக்கா ஆயுதம் கொடுப்பதைக் கண்டித்து அ.தி.மு.க சார்பில் சென்னையில் கண்டனப் பேரணி 1983 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆம் திகதி நடந்தது.

### ஊர்வலம்

சென்னை அண்ணாசாலை, அண்ணா சிலை அருகே இருந்து பிற்பகல் 4 மணிக்கு ஊர்வலம் தொடங்கியது.

ஊர்வலத்தை அ.தி.மு.க பொதுச்செயலாளர் ப.உ.சண்முகன் தொடங்கி வைத்தார். ஊர்வலத்தில் திரளான அ.தி.மு.க தொண்டர்கள் கறுப்புச் சட்டை அணிந்து சென்றனர்.


அழிக்காதே, அழிக்காதே, தமிழ் இனத்தை அழிக்காதே, பறிக்காதே பறிக்காதே தமிழர்களின் உரிமைகளைப் பறிக்காதே, இலங்கைக்கு ஆயுதங்களைக் கொடுக்காதே என்பன போன்ற முழக்கங்களை எழுப்பிச் சென்றனர்.



(தொடரும்)

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
# தேர்த்திருவிழா சிறப்புமலர்- 08.01.2016
# இணுவில், மருதனார்மடம்,சுன்னாகம்





### ஆசிச்செய்தி



அனுமன் அடியவர்களே!

இந்து சமுத்திரத்தின் மத்தியிலே குபேர தீவு, மணித்தூபிபம் என்று போற்றப்படும் இலங்கையின் வடபாகத்தில் யாழ்ப்பாணம் என்னும் நகரத்தில் வடபால் அமைந்த இணு வில் மருதனார்மடத்தில் விவசாய பெருநிலப் பரப்பை வர்த்தகம் சார்ந்த ஸ்தாபனங்களும் கல்விச் சாலை கள், இசைத்துறை நெறி பல்கலைக்கழகங்களும் கூடிய இடத்தில் காங்கேசன்துறை நெடுஞ்சாலையின் மேற்குப்பக்க மாக அமைந்த ஆலயம்தான் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில். மகான்களாலும் ஞானிகளாலும் வேத உத்தமர்களாலும் இசை வல்லுநர்களாலும் பாமர ஜனங்களாலும் போற்றப்படுகின்ற இவ்வாலயம் மார்கழி மாதத்தில் வருகின்ற இலட்சார்ச்சனை பெருவிழாவில் ஒரு அங்கமாக இந்தத் தேர் உற்சவம் நடைபெறுகிறது. தேர் உற்சவத்தில் பவனி வரும் பஞ்சமுக அனுமன் பக்தர்களின் குறைகளை நீக்கும் பொருட்டு பஞ்சகிருத்திய நடனத்துடன் திருவருளை பொழிகின்றான்.

கேசரி மைந்தன், வாயுவின் புத்திரன், அஞ்சனை சுதன் என்றெல்லாம் போற்றப்படுகின்ற சுந்தர ஆஞ்சநே யர் ராம என்ற மந்திரத்தை உச்சரித்து இக, பல சுகங்களை பெற்றிட லாம். தேர் ஏறி வரும் பெருமானின் கடைக்கண் பார்வையே திருவருளை வேண்டி இவ்வையகத்தில் உள் ளோர் வழிபாடு செய்து சகல பேறுகளையும் பெறவேண்டும். இந்த தேர் உபயத்தை ஏற்றுச் செய்கின்ற சிவ தர்மவள்ளல் சுப்பிரமணி யம் கதிர்காமநாதன் அவர்கள் குடும்பத்தி னருக்கும் இம்மண் ணில் வாழுகின்ற சகல உயிரினங்க ளுக்கும் சுந்தர ஆஞ்ச நேயப் பெருமானின் திருவருளும் எமது நல்லாசிகளும் கிடைக்க ஹனுமானை சரண் புகுந்து பிரார்த்திக்கின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**

**சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்**

**ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில், மருதனார்மடம், சுன்னாகம்.**

### உடுவில் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஈழத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ளதே யாழ்ப பாணக் குடாநாடாகும். இக்குடாநாட் டின் மத்தி யில் அமைந்த பிரதேசமே வலிகாமம் தெற்கு பிரதேசமாகும். இங்கு மருதனார்மடம் சுன்னாகத்தில் அமைந் துள்ள அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

*"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"* என்பது எம் முன்னோர் வாக்கு. இதற்கமைய வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பல வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில் இந்த ஆலயமும் பல சிறப்புக்கள் பொருந்தியது. மக்களின் வழிபாட்டிற்குரிய ஆலயங்கள் மனிதனை மனிதனாக மனிதத்துவத்துடன் பேணவும், சமய,கலை,கலாசார விழுமியங்களைப் பேணும் கேந்திர நிலையங்களாகவும் அமைகின்றன. இவ் ஆலயம் இரண்டு தளங்களை கொண்டதாகவும் மூலமூர்த் தியான ஆஞ்சநேயர் ஒரே கருங்கல்லில் வார்க்கப்பட்ட 18 அடி உயரச் சிலையாக அமைந்துள்ளமையும் இதன் வாயிற் பகுதியில் 72 அடி உயரமான ஆஞ்சநேயர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க சிறப்பம் சங்களாகும். இவ்வாறு பல சிறப்பம்சங்களுடன் பொன் போன்று மிளிரும் கண்கொள்ளாக் காட்சியைக் கொண்டு ள்ள இவ் ஆலயத்தைப் போற்றி வணங்கும் அடியார்க ளுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் அனைத்து அடியார்க ளுக்கும் ஆஞ்சநேயரின் அருளாசி கிடைக்க வேண்டுமென இறைஞ்சி வாழ்த்துகின்றேன். வாழ்க.

முத்துலிங்கம் நந்தகோபாலன் பிரதேச செயலாளர்,வலிகாமம் தெற்கு, உடுவில்.

### ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் கங்கேசன்துறை வீதியில் இணுவில் மருத னார் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய த்தில் 2001 தைத்திங்களில் குடமுழுக்கு நடைபெற்று ஆஞ்சநே யப் பெருமானின் அருளாலும் இறை அருள் பெற்ற வினாசித் தம்பி ஐயா அவர்களின் நல்லாசியும் ஆதீன கர்த்தாவின் அருள் நிறைந்த தவிப்பாலும் வளர்பிறையென ஆலயம் வளர்ச்சி யுற்று மாமலைக் கோயிலின் முன்னால் கோபுரம் மலை என எழு ந்து நிற்க சஞ்சீவி மடம் அருட் சிறப்பாய் அமைய பஞ்சமுக ஆஞ்சநேயர் தேடி வர வசந்த மண்டபும் சிறப்பாய் அமைய வீதி சுற்றி வழிபட காணிசேர பஞ்சமுகர் வீதியுலா வர சித்திர த்தேர் அமைய விஸ்வரூப ஆஞ்சநேயர் சிறப்பாய் அமைய சுற்று மதில்களோடு ஆல யம் சிறப்பாய் மிளிர 2013 இரண்டாவது குடமுழுக்கோடு நிறைவாக ஆலயம் அருட் சிறப்போடு விளங்கி 08.01.2016 இல் பஞ்சமுகர் தேரேறி வருகின்றார் என்றால் அனுமந்தன் பேரருளும் ஆசியுமே சான்றாகும்.

தேர் உற்சவ காலத்தில் மட்டுமே பஞ்சமுக ஆஞ்சநேயர் திருவீதி உலா வருகின்ற காட்சி இடம் பெறும். இதுவும் ஒரு சிறப்பம்சமாகும். இத்தினத்தில் எம்பெருமானை வழிபட்டு உய்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.



ஈழத்திருநாட்டின் வடதிசையில் அமைந்துள்ள குடாநாட்டில் சைவமும், தமிழும் சிறந்தோங்கும் மருதனார்மடம் எனும் ஊரில் பக்தர்களுக்கு எல்லாம் எழுந்தருளி இருக்கும் பற்சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இன்று வீர ஆஞ்சநேயர் பெருமான் தேரேறி வீதயுலா வருவதையிட்டு பேரானந்தம் அடைகின்றோம்.சுந்தர ஆஞ்சநேயர் பெருமான் திருவடிகளில் இன்று இந்துமத கலாசாரத்தை பேணிப் பாதுகாக்கும் நோக்கோடு நித்திய நைமித்திய பூஜைகளை நாம் பெருமான் சந்நிதானத்தில் கண் கூடே பார்க்க கூடியதாக இருக்கின்றது.

எம்பெருமானை தரிசிக்கின்ற அடியவர்களுக்கு மனரீதியான, உடல்ரீதியான துன்பங்கள் நீங்கி அவர்கள் என்றும் பேரானந்தம் அடைய எம் பெருமான் தேரேறி பவனி வருகின்ற காட்சியே இன்று நடைபெறுகிறது.ஆஞ்சநேயர் பெருமானின் நாமத்தினை தினமும் நாம் உச்சரித்து வந்தோமானால் இன்மை இன்றி போகும். இனிமை வந்து சேர்ந்து நீங்கள் எல்லா வளங்களையும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ எம்பெருமான் வழியமைத்துக் கொடுப்பார்.

அனைத்து ஆலயங்களிலும் ஒவ்வொரு உற்சவங்களிலும் ஒன்றைக் குறித்து நிற்கின்றன. அவை படைத்தல், காத்தல், மறை த்தல், அழித்தல், அருளல். இன்று தேர்த்திருவிழா உற்சவம் அழித்தல் தொழிலை குறித்து நிற்கின்றது. இன்று அடியவர்களின் மனங்களில் இருக்கின்ற ஆணவம் போன்ற கெட்ட சிந்தனையை அழித்து அவர்களுக்கு மனிதநேயத்தோடு மனிதம் வாழுவதற்கு எம்பெரு மான் அருளாசி கொள்ளுவார்.வாயுகுமாரா, வானரவீரா, மாருதி, ருத்ர வீரா போன்ற நாமங்களோடு இன்று தேர்த்திருவிழா காணும் எம் பெரு மானை வேண்டி எம் மக்களுக்கு எல்லாம் நல்லருள் பாலிக்க வேண்டி ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் ஸ்ரீ ராம ஜெயம் ஓம் ஸ்ரீ ஜெய ராமர்**

**K.Sriranjan,**
**Branch Manager,**
**Jaffna Metro Allianz Life Insurance Lanka LTD**

மலரமைப்பு:-
எஸ்.ஞானேஸ்வரன்
Agency Manager
Allianz Life
Insurance

Kajasankavi Center & Printers
கஜசங்கவி சென்ரர் & பிரிண்டேர்ஸ்
Deler in Indian Wedding Cards,Visiting Cards
& Offset Printing,Screen Printing.
N.237;K.K.S.Road, Jaffna
Tel: 021 222 7885
077 603 1071
இல. 237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 7885
077 603 1071

கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்குமான பொருட் கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள், பால்மா, இனிப்பு, சொக் லேட் வகைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றிட
STK MOTHER & BABY MART
K.K.S. Road,
Maruthanarmadam
Junction,
Maruthanarmadam,
T:P 077 252 6266

பெண்களுக்கான சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட், ரீசேட், ரெடிமேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல ஆடை வகைகளையும் பெற்றிட பட்டுச் சேலைகளின் சோலைவனம்
இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்
இல.105, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 6953

அனைத்துவிதமான வயறிங், பிளமிங், எலக்ரிக்கல் பொருட்களை பெற்றிட
New Lucky Hardware
Kandy Road,
Ariyalai,
Jaffna.
TP: 077 237 8062
021 222 2299

NARMATHA
Gold center & Money exchange Pvt Ltd
நர்மதா
Tel: 021 222 1933
Fax: 021 222 4779
Email: narmathagc151@gmail.com
187,Power House Road, Jaffna
187, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்

அனைத்துவிதமான ஆடைத்தெரிவுக்கும்
நாடவேண்டிய இடம்
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
Boys & Baby Selection
பலாலி றோட், உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.
077 228 8245

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக்காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 4353
கிளை
A9 வீதி,
வசந்தி திரையரங்கு
முன்பாக,
வவுனியா
T.P: 024 222 7777,
0777100444

புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்
உங்கள் அபிமான
V.M.K.ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
No.80/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 720 1117,077 784 9369
கிளை: நியூ வி.எம்.கே. ஜுவல்லறி
நவீன் சந்தை, கண்டிவீதி,
சாவகச்சேரி.
021 222 2515



# சிறுவர் அரங்கம்

1328

## ஐந்து முட்டாள்கள்!

நாட்டை ஆண்டு கொண்டிருந்த மன்னருக்குத் திடீரென ஒரு சந்தேகம் உதித்தது.

உடனடியாக அமைச்சரை வரவழைத்தார். "நான் இந்த நாட்டை இவ்வளவு நன்றாகவும், புத்திசாலித்தனத்துடனும் ஆண்டு வருகிறேன்.

ஆனால் இந்த நாட்டிலும் முட்டாள்கள் இருப்பார்கள் அல்லவா?"

"ஆம் மன்னா!"

"அப்படியானால் அவர்களில் முதல் ஐந்து முட்டாள்கள் யார்? அவர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கூட்டிக் கொண்டு வருவது உம் பொறுப்பு" என்றார்.

அமைச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை.

புத்திசாலியைக் கொண்டு வரச் சொன்னால் ஏதாவது போட்டி வைத்து வெற்றியாளரைக் கொண்டுவரலாம்.

முட்டாளைக் கொண்டு வரச் சொன்னால் என்ன செய்வது சொன்னது மன்னராயிற்றே. "சரிமன்னா" என்று ஒத்துக் கொண்டார்.

ஒரு மாதம் நாடு முழுவதும் பயணம் செய்து இரண்டு பேரை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் மன்னர், "அமைச்சரே உமக்குக் கணிதம் மறந்து விட்டதோ??"

"இல்லை மன்னா! முதலில் நடந்ததை விளக்க அனுமதிக்க வேண்டும்!" என்றார் அமைச்சர்.

"தொடரும்" என்றார் மன்னர்.

"மன்னா! நான் நாடு முழுவதும் சுற்றும்போது, இவன் மாட்டு வண்டியின் மேல் அமர்ந்து கொண்டு தன் துணி மூட்டையைத் தலை மேல் வைத்து, பயணம் செய்து கொண்டிருந்தான். ஏன் அவ்வாறு செய்கிறாய்? எனக் கேட்டதற்கு என்னைச் சுமந்து செல்லும் மாடுகளுக்கு வலிக்கக் கூடாதல்லவா? அதற்குத்தான் என்றான் இவன் தான் நம் நாட்டின் ஐந்தாவது மிகப் பெரிய முட்டாள்."" என்றார் அமைச்சர்.

"சரி அடுத்து"

"இதோ இவன் தன் வீட்டுக் கூரை மேல் வளர்ந்த புல்லை மேய்க்க, எருமையைக் கூரை மேல் இழுத்துக் கொண்டிருந்தான். இவன் தான் நம் நாட்டின் நான்காவது மிகப் பெரிய முட்டாள்"

"களிப்படைதோம் அமைச்சரே! களிப்படைதோம்! சரி, எங்கே அடுத்த முட்டாள்?"

"அரசவையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கும்போது, அதையெல்லாம் விட்டு விட்டு முட்டாள்களைத் தேடி, கடந்த ஒருமாதமாய் அலைந்து கொண்டிருந்த நான்தான் மூன்றாவது முட்டாள்."

மன்னருக்குச் சிரிப்பு தாங்கவில்லை, விழுந்து விழுந்து சிரித்தார். பின்னர் அடுத்தது என்றார்.

நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும் போது அதைக் கவனிக்காமல் முட்டாள்களைத் தேடிக் கொண்டிருக்கும் நீங்கள் தான் இரண்டாவது" என்றார் அமைச்சர்.


ஒரு நிமிடம் அரசவையே ஆடிவிட்டது. யாரும் எதுவும் பேசவில்லை.

"உமது கருத்திலும் நியாயம் உள்ளது. நான் செய்ததும் தவறுதான்" என ஒத்துக் கொண்டார் மன்னர்.

"சரி எங்கே முதலாவது முட்டாள்?"

அமைச்சர் சொன்னார்..

"மன்னா.! அலுவலகத்திலும், வீட்டிலும் எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் அதையெல்லாம் விட்டு விட்டு வலைப் பூவே கதி என வாழ்ந்து, இந்த மொக்கையான கதைக்கு வந்து, நாட்டின் மிகப் பெரிய முட்டாள் யாரென்று தேடி படித்து கொண்டிருக்கிறாரே, இவர்தான் அந்த முதல் முட்டாள்!"



01.2016
08

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1297 - மொனாக்கோ விடுதலை பெற்றது.
- 1782 - திருகோணமலை கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1806 - கேப் காலனி பிரித்தானியாவின் குடியேற்ற நாடாகியது.
- 1815 - அண்ட்ரூ ஜாக்சன் தலைமையில் ஐக்கிய அமெரிக்கப் படைகள் லூசியானாவின் நியூ ஓரலீன்சில் பிரித்தானியரைத் தோற்கடித்தனர்.
- 1838 - ராபர்ட் கால்டுவெல் மதப் பணியாற்ற அயர்லாந்திலிருந்து சென்னை வந்தார்.
- 1838 - அல்பிரட் வெயில் புள்ளிகளையும் கோடுகளையும் கொண்ட தொலைத் தந்தியை அறிமுகப்படுத்தினார்.
- 1867 - வோஷிங்டன், டிசியில் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் முதன்முறையாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.
- 1889 - ஹெர்மன் ஹொல்லெரிக் மின்னாற்றலில் இயங்கும் பட்டியலிடும் கருவிக்கான (tabulating machine) காப்புரிமம் பெற்றார்.
- 1900 - அலாஸ்கா இராணுவ ஆட்சியில் வந்தது.
- 1912 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- 1916 - முதலாம் உலகப் போர் (கலிப்பொலி நடவடிக்கை) கூட்டுப் படைகள் துருக்கியின் கலிப்பொலியிலிருந்து வெளியேறின.
- 1926 - அப்துல்- அசீஸ் இபன் சாவுட் ஹெஜாஸ் நாட்டின் மன்னராக முடிசூடி அதன் பெயரை சவுதி அரேபியா என மாற்றினார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா உணவுப் பங்கீட்டை அறிமுகப்படுத்தியது.
- 1956 - எக்குவடோரில் ஐந்து அமெரிக்க மதபோதகர்கள் பழங்குடியினரால் கொல்லப்பட்டனர்.
- 1959 - பிடெல் காஸ்ட்ரோவின் கியூபப் புரட்சி முடிவுக்கு வந்தது.
- 1973 - சோவியத் விண்கப்பல் லூனா 21 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1994 - ரஷ்யாவின் விண்வெளி வீரர் வலேரி பல்யாக்கொவ் மீர் விண்வெளி நிலையத்துக்கு சோயூஸ் விண்கப்பலில் பயணமானார். இவர் மொத்தம் 437 நாட்கள் விண்ணில் தங்கியிருந்தார்.
- 1995 - தமிழீழ விடுதலைப் புலிகள் - சந்திரிகா அரசு போர் நிறுத்தம் ஆரம்பமாகியது.
- 2008 - கொழும்பு புறநகர்ப் பகுதியான ஜா-எலையில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டி.எம்.தசநாயக்க உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1867 - எமிலி பால்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ. 1961)
- 1891 - வால்தர் போத், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் (இ. 1957)
- 1899 - எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இலங்கையின் 4வது பிரதமர் (இ. 1959)
- 1899 - ஏ. பெரியதம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1978)
- 1935 - எல்விஸ் பிரெஸ்லி, அமெரிக்க இசைக் கலைஞர் (இ. 1977)
- 1942 - ஸ்டீபன் ஹோக்கிங், கோட்பாட்டு இயற்பியலாளர்
- 1942 - ஜுனிசிரோ கொய்சுமி, ஜப்பான் பிரதமர்

**இறப்புகள்**

- 1324 - மார்கோ போலோ, இத்தாலிய வணிகர் (பி. 1254)
- 1642 - கலீலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர் (பி. 1564)
- 1941 - பேடன் பவல், சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்த ஆங்கிலேயர் (பி. 1857)
- 1997 - மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1911)
- 2002 - அலெக்சாண்டர் புரோகோரொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1916)
- 2008 - லசந்த விக்கிரமதுங்க, இலங்கை ஊடகவியலாளர்

# 2015 இல் கஞ்சாவுடன் 50 ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

**கடந்த 2015 ஆம் ஆண்டில் மட்டும் 6 ஆயிரத்து 569 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதோடு 50 பேர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கொலைகள், பெண்கள் துஷ்பிரயோகம், தற்கொலைகள் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பான விரிவான அறிக்கை, பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகரவால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்படி,

**கொலைகள்**

2014 ஆம் ஆண்டு - 548, 2015 நவம்பர் 30 ஆம் திகதி வரை - 447

இதன்படி 2014 ஆம் ஆண்டை விட 2015 ஆம் ஆண்டு கொலைகள் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தற்கொலைகள்**

2014 ஆம் ஆண்டு - 2484 ஆண்கள், 660 பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2015 செப்டெம்பர் 30ஆம் திகதி வரை - 1856 ஆண்களும், 519 பெண்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

**போதைப் பொருள்**

2014 ஆம் ஆண்டு 312 கிலோ கிராம் போதை மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, இது தொடர்பில் 23,331 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு 46 கிலோ கிராம் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, 26,492 பேர் இது தொடர்பில் கைதாகியுள்ளனர்.

**கஞ்சா**

2014 ஆம் ஆண்டு 19,644 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதோடு 43,683 பேர் இது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு 6,569 கிலோ கிராம் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, 50,000 பேர் இது குறித்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

**நீரில் மூழ்கிய மரணங்கள்**

2014 ஆம் ஆண்டு - 859, 2015 ஆம் ஆண்டு (முதல் ஒன்பது மாதங்களில்) - 688

**விபத்து**

2014 ஆம் ஆண்டு - 2,260
உயிரிழந்தவர்கள் - 2,440
2015 ஆம் ஆண்டு - 2,566
உயிரிழந்தவர்கள் - 2,771

**துஷ்பிரயோகங்கள்**

16 வயதுக்குக் குறைவான சிறுமிகள் மீது 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வன்புணர்வுச் சம்பவங்களில் 1,209 சம்பவங்கள் அவர்களின் விருப்பத்துடன் இடம் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளா குணசேகர தெரிவித்தார்.

பெண்கள் மீதான வன்புணர்வு தொடர்பில் 2014ஆம் ஆண்டு 2,008 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன. அதில், 1,911 சம்பவங்கள் தொடர்பிலான சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன. ஏனைய சம்பவங்கள் தொடர்பில், விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், 2015ஆம் ஆண்டு நவம்பர் வரை 1,854 வன்புணர்வுச் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அதில் 1,714 சம்பவங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 80 சதவீதமானவை 16 வயதுக்கு குறைந்தவர்களுக்கு எதிரான சம்பவங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இதில் 1,501 சம்பவங்கள் 16 வயதுக்கும் குறைந்த சிறுமிகள் மீதான வன்புணர்வு சம்பவங்கள் எனவும் அவற்றில் 1,209 சம்பவங்கள் அவர்களின் விருப்பத்துடனேயே இடம்பெற்றுள்ளன எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

16 வயதுக்கு குறைந்தவர்கள் சிறுவர் என்ற பிரிவில் அடங்குவதால் அவர்கள் விரும்பி பாலியல் உறவில் ஈடுபட்டாலும் அவை சட்டத்தின்படி வன்புணர்வு என்றே கருதப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த சம்பவங்களில் பெரும்பாலானவை அவர்களின் காதலனால் மேற்கொள்ளப்பட்டவை என்றும் குறித்த வயது பிரிவினர் பாடசாலை மாணவர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இதற்கு குறித்த மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகம் என அனைவரும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதிவரையான 11 மாத காலத்தில் நாடுமுழுவதும் 441 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் 390 கொலைச்சம்பவங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏனையவை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். புங்குடுதீவு மாணவி கொலை, கொட்டதெனியாவ சிறுமி கொலை போன்ற சம்பவங்களின் பின்னர் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையின் காரணமாக இவ்வாறான கொலைச் சம்பவங்கள் குறைவடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 597

சுஜி சுஜிதா




டினோ ராஜ்

விக்கல் வரும்போதெல்லாம்
யாரோ நினைக்கிறார்கள்
என்று சொல்வதெல்லாம்
பொய்...!
அது உண்மையாக இருந்திருந்தால்
என் காதலி விக்கியே
செத்திருப்பாள்.

கன்சிகா



ரகுபரன்




சோபிகா சிமைலினி




சங்கவி கவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அறிவியலும் அழிவியலும்

ஆதியில் மனித அறிவு குன்றியிருந்த காலத்தில் மனிதன் பல பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பல பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த அவன் தன் முயற்சியாலும் சிந்திக்கும் ஆற்றலாலும் அக்கஷ்டங்களைத் தாங்கி மேலான நிலையை அடைந்து சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தான்.

அக்காலகட்டத்தில் சராசரி மனிதன் தினமும் அதிகாலை நித்திரை விட்டெழுந்து தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேப்பங்குச்சியாலோ அல்லது ஆலங்குச்சியாலோ பல் துலக்குவான். இவையிரண்டும் பல்லிலுள்ள அழுக்குகளை நீக்குவது மாத்திரமல்ல பல்லில் ஏற்படும் கிருமிகளையும் அழித்து விடவல்லன. அதன்பின்பு குளிர்ந்த நீர் கொண்ட கிணற்று நீரை துலாமூலமோ கப்பி மூலமோ அள்ளிக் குளிப்பான். உடலுக்கு மஞ்சள், தேசிக்காய்ச் சாறு பூசி மீண்டும் குளிப்பான். இவைகள் உடல் மேலுள்ள கிருமிகள் யாவற்றையும் கொல்லவல்லன. பின்பு தன் தாயோ அல்லது மனைவியோ அல்லது சகோதரமோ கொடுக்கும் முதல் நாள் சமைத்து நீரூற்றப்பட்ட பழஞ்சோற்றுடன் பனாட்டும் சேர்த்து உண்டுவிட்டு ஏர், மண்வெட்டி போன்றவைகளை தோளில் சுமந்த வண்ணம் எருதுகளையும் விரட்டிக்கொண்டு சென்று வயலை அடைந்து மண்வெட்டியால் பாத்திகளு க்கு வரம்புகள் அமைத்து ஏர் பூட்டி உழுவான். இயற்கைப் பசளைகளான எருவின் சாணத்தையும் ஆட்டுப்பிழுக்கைகளையும் உக்கிய இலை குழைகளையும் பசளையாகப் போட்டு நெற் பயிர்களையோ சாமி, தினை, குரக்கன் போன்ற பயிர்களையோ வளர்த்தெடுப்பான். அத்தோடு தோட்டத்தில் மரக்கறி வகைகளையும் விளைவித்துக்கொள்வான்.

மாடுகளைப் பட்டியில் கட்டி விட்டு இறைவணக்கம் செய்து இரவில் கூழ், கஞ்சி போன்ற நன்கு செமிக்கக்கூடிய உணவு வகைகளை உண்டு, நேரகாலத்தோடு உறக்கத்திற்குச் செல்வான். தினமும் செய்யும் வேலைகள் யாவும் அவனுக்கு உடற்பயிற்சியாக அமையும்.

அக்காலத்தில் சுதேச வைத்தியர்கள் கைநாடிகள் மூலம் நோய்களை இனங்கண்டு மூலிகைகள், வேர்கள், பட்டைகள் மூலமாக வைத்தியம் செய்து குணப்படுத்தினார்கள். அக்காலத்தில் நோய்களும் குறைவு. உயிர் கொல்லி நோய்களும் மிக மிக அரிதாகக் காணப்பட்டன. மனிதன் சுகதேகியாக நீண்ட ஆயுளுடன் சந்தோஷமாக வாழ்ந்தான்.

அக்காலக் குடிசைகள் பெரும்பாலும் பதிவாகவே இருந்தன. தடிகளினால் கட்டப்பட்டு களி மண்ணினாலும் சுண்ணக்கல், முருகைக்கல் போன்றவைகளை உபயோகித்து சுவர்கள் எழுப்புவார்கள். தரை மாட்டுச் சாணத்தினால் மெழுகப்பட்டிருக்கும். கூரைகள், பனை ஓலைகளாலோ, தென்னோலைகளாலோ அல்லது வைக்கோலினாலோ வேயப்பட்டிருக்கும். வெப்பகாலத்தில் வீட்டுக்குள்ளே குளிச்சியையும் மாரி காலத்தில் வெப்பத்தையும் கொடுத்து சமனிலைப்படுத்தும். வீட்டுக்குள்ளே செல்பவர்கள் குனிந்தே சென்று பின் குனிந்தே வெளியே வருவார்கள். இந்நிகழ்வானது வீட்டுக்கு சிரம் தாழ்த்தி வணங்கி உள்ளே செல்வது போலமையும். அதுமாத்திரமல்ல உடலுக்கு நல்ல பயிற்சியாகவும் அமையும்.

ஆண்கள் புதன், சனி போன்ற நாட்களிலும் பெண்கள் செவ்வாய், வெள்ளி நாட்களிலும் நல்லெண்ணெயை உடல் முழுவதும் பூசி ஒரு சில மணித்தியாலங்களின் பின்பே தலைக்கு சிகைக்காய், வெந்தயம் அரைத்துப் பூசி உடலுக்கு தேசிக்காய், மஞ்சள் பூசி குளிர்ந்த நீரில் குளிப்பார்கள். இதனால் உடல் வெப்பம் குறைந்து வெப்ப நோய்களான சின்ன முத்து, கூகைக்கட்டு, கொப்புளிப்பான் அம்மை போன்ற நோய்கள் எட்டியும் பார்க்கமாட்டா. தலைமயிர் கருமையாகவும் உதிராமலுமிருக்கும்.

பாடசாலைகள், ஊர்மனைகளுக்குள்ளேயே இருந்தன. பிள்ளைகள் கால் நடையாகவோ, மாட்டு வண்டி அல்லது குதிரைவண்டிமூலமோ பாடசாலைக்குச் செல்வார்கள். கிளித்தட்டு, கிட்டியடி, எல்லே போன்ற விளையாட்டுக்கள் விளையாடுவார்கள். பனை ஓலையாலோ, புல்லினாலோ இழைக்கப்பட்ட பாயிலே துயில் கொள்வார்கள்.

உணவு வகைகளை வாழையிலையிலோ, தாமரையிலையிலோ படைத்து உண்பார்கள். கூடுதலாக பனம் பண்டங்களான புளுக்கொடியல், ஒடியல், கருப்பட்டி போன்றவைகளையும் எள்ளு, கொள்ளு, சாமி, தினை, குரக்கன் போன்ற தானியங்களையும் உண்பார்கள். அக்காலத்தில் இயற்கைப் பசளையில் வளர்ந்த மரங்களிலிருந்து கிடைக்கும் பழங்கள் சுவையுள்ளவைகளாகவும் ஊட்டச்சத்து மிகுந்தவைகளாகவும் இருந்தன.

பொழுது போக்குக்காகவும் அறிவு வளர்ச்சிக்காவும் சமய, சமூக, இலக்கிய நாடகங்கள் கிராமங்கள் தோறும் நடைபெறும். கலாசாரம் சீர்கெடாமலிருந்தது. நாடகங்களைப் பார்த்து மக்கள் களிப்படைவார்களேயொழிய மனதில் பதட்டமும் அச்சமும் கொள்ள மாட்டார்கள்.

தூர இடங்களுக்கு கல்யாண நிகழ்வு நிமித்தமாகவோ அல்லது இறப்பு நிகழ்வு நிமித்தமாகவோ பயணம் செய்வதற்கு மாட்டு வண்டியையோ, குதிரை வண்டியையோ பயன்படுத்துவார்கள்.

அறிவியல் வளர வளர இக்காலத்தில் பெரும்மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. விஞ்ஞானிகளின் இடைவிடா முயற்சியால் பல விதமான கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து பல பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்ட வண்ணமே இருக்கின்றன. இவைகளில் பல செயற்பாடுகள் மனிதனுக்கு 100% நன்மையளிப்பது போலத் தோன்றினாலும் அவைகளின் நன்மை தீமைகளை ஆராயும் பொழுது ஐம்பது வீதமே (50%) நன்மையளிக்கின்றன. ஐம்பது வீதம் (50%) தீமையளிக்கின்றன.

உதாரணமாக சொல்லப்போனால் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து டீசல் இயந்திரங்கள் என்பவைகளின் கண்டுபிடிப்புக்களால் பயணங்கள் இலகுவாகவும் துரிதமாகவும் இருந்தாலும் அவைகளால் வெளிவிடப்படும் காபன்மொனோ ஒக்சைட் வாயுவும் காபன் டை ஒக்சைட் வாயுவும் மனிதனுக்கு எவ்வளவோ தீங்கை விளைவிக்கக் கூடியன. உயிர்க் கொல்லி நோய்களும் சுவாச நோய்களும் ஏற்பட்டு மனித ஆயுளைக் குறைக்கின்றன. விவசாயத்திற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு கூடிய விரைவில் அறுவடை செய்யப்பட்டாலும் ஒரு சிலருக்கே கூடிய நன்மை தருகிறது. பல மனிதர்களின் வேலை வாய்ப்புக்கள் குறைவடைந்து அன்றாட சீவியத்திற்கே கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

அடுத்ததாக மின்சாரத்தை நோக்குவோமானால் ஒரு ஆழியை அமத்தியவுடன் 15 நிமிடங்களில் 5 கிலோ அரிசி இயந்திரத்தின் மூலம் மாவாக்கப்படுகின்றது. இதன்மூலம் நேர விரயம் குறைக்கப்படுவது உண்மைதான். என்றாலும் இச்செயல் இயந்திரத்திற்கு உடற்பயிற்சியே தவிர மனிதனுக்கல்ல. மனிதனைச் சோம்பேறி ஆக்கி நோயாளியாக்குகின்றது.

தொலைபேசி வசதியால் ஒரு சில வினாடிகளுக்குள் பல மைல்கள் தொலைவிலுள்ள இடங்களுக்கு செய்திகள் அனுப்பப்படுகின்றன. இது மனிதனுக்கு நன்மையளிக்கக்கூடிய விடயமாக இருந்தபோதிலும் இவற்றின் மூலமே பெரும் கொலைகள் களவுகள் வங்கிக் கொள்ளைகள், வாகனக் கொள்ளைகள் நடைபெறுவது கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது. தற்பொழுது அதிகமான பாவனையிலுள்ள கையடக்கத் தொலைபேசி மூலம் வெளியிடப்படும் அலைகளால் தலைசம்பந்தமான நோய்கள் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

வானொலியை ஓரளவு நன்மை பயக்கக்கூடிய பொருளாக கருதும் அதே வேளை தொலைக்காட்சி, கணனி போன்றவைகள் பல நன்மைகளை அளித்தாலும் அவ்வளவுக்கவ்வளவு தீமைகளையும் அளிக்கின்றன. தொலைக்காட்சியில் தினம்தோறும் காட்டப்படும் சினிமாப் படங்கள், தொடர் நாடகங்களால் குடும்பத்தில் உள்ள அனேகமானோரின் வேலைகள், கல்வி நிலைகள் பாதிக்கப்படுகின்றன. கணனி, கணனி விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களில் பலர் தங்கள் உணவைப் பற்றி அக்கறை காட்டமாட்டார்கள். நேரவிரயத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். மாணவர்களது கல்வி நிலையும் பாதிப்படைகிறது. சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள் மனித சமுதாயத்தின் கலாசாரத்தையும் கற்பையும் அடியோடு அழித்து விடுவது மாத்திரமல்ல மனிதன் கெட்டுப் போவதற்கும் ஆதாரமாக இருக்கின்றன. உதாரணமாக அக்காட்சிகளில் வஞ்சகம், சூது, பழிவாங்கல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற காட்சிகள் யாவும் ஏதோவொரு வகையில் இடம் பெறும். இதைத் தினம் தோறும் பார்க்கும் மனிதர்களில் இவ்வெண்ணங்களே அடிக்கடி தோன்றும். ஏனெனில், கண்ணால் பார்ப்பதும் காதால் கேட்பதும் எமது மூளையில் நன்கு பதியப்படுகின்றன. அதுவும் தினம்தோறும் பார்த்தால், கேட்டால் என்ன நடக்கும் அதிகமாகப் பதியப்படுமல்லவா? இவ்வெண்ணங்களால்த்தான் நாடுகளில் தினம்தோறும் குற்றச்செயல்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன.

வெடிமருந்தைக் கண்டுபிடித்த மனிதன் படிப்படியாக ஆராய்ச்சிகள் செய்து பீரங்கிக் குண்டுகள், அணுகுண்டுகள் என்பவற்றைக் கண்டு பிடித்தான். இதனால் உலகின் பல்வேறு நாடுகளுக்கிடையில் ஏற்படும் யுத்தங்களில் பல கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள எதிரிகளின் வாகனங்களையோ, கப்பல்களையோ, விமானங்களையோ கட்டடங்களையோ சில விநாடிகளில் அழித்துவிடக் கூடியதாக இருக்கிறது. இதை நன்மையான கண்டுபிடிப்பு என்று கூறலாமா? ஒரு காரியத்தை சாதிக்க முன்னைவிட பல நூறு ஆயிரம் மடங்கு அழிவை விலை கொடுக்க வேண்டியிருக்கின்றது.

இக்கால மனிதன் பண் ஆசையால் மற்ற மனிதர்களுக்கு என்ன தீங்கு நடந்தாலும் பரவாயில்லை. தனக்குப் பணம் வந்தால் போது என்ற மனப்பாங்கில் இரசாயன உரங்கள் பாவித்து அதிக விளைச்சல்களைத் தரும் உணவுப் பயிர்களை வளர்த்து அதிக பயன்களைப் பெற்று அதிக பணத்தைச் சம்பாதிக்கின்றான். இவைகள் மனித உடலுக்கு தீங்கை விளைவித்து அவனது ஆயுளைக் குறைக்கின்றன. வாழைக் குலையில் வாழைப் பொத்தியை அகற்றிவிட்டு அத் தண்டில் யூரியா போன்ற இரசாயனக் கலவைகளை பொலித்தீன் பைகளில் போட்டுக் கட்டி விடுவார்கள். 3,4 மாதங்களின் பின் அக்குலை வழமைக்கு மாறாக பெரிய குலையாக பெரிய பழங்களுடன் காட்சியளிக்கும். நல்ல விலை போகும். ஆனால் அதைச் சாப்பிடுபவர்கள் பணத்தைக் கொடுத்து நோயை விலைக்கு வாங்கியவர்களாகக் கருதப்படுவார்கள். இதே பாணியில் பழங்கள் அநேக நாட்கள் பழுதடையாமலிருக்க ஊசி மூலம் இரசாயன மருந்துகளைக் செலுத்துகிறார்கள். அல்லது கல்சியம் காபைட் என்னும் இரசாயன மருந்தை பழங்கள் மேல் விசிறுகிறார்கள். அப்பிள் போன்ற பழங்களுக்கு மெழுகு பூசுகிறார்கள். மீன் இறைச்சி வகைகள் பழுதடையாமல் இருக்க போமலின் என்னும் மருந்தை ஊசி மூலம் உட்செலுத்தி விடுவார்கள். இம் மருந்து இறந்த உடலை பல நாட்களுக்குப் பழுதாகாமல் வைக்க அடிக்கப்படும் நஞ்சு மருந்தாகும். முற்றாக காய்களுக்கு கல்சியம் காபைட் அடித்து கனிய வைக்கிறார்கள். இவை இலகுவில் கிடைப்பது மாத்திரமல்ல செலவும் குறைவானதே.

இக்காலத்தில் நீரிழிவு நோய் எட்டு மனிதருள் ஒருவருக்கு என்ற வீதத்தில ஏற்படுவதை ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சிறுநீரகக் கோளாறு பலரைப் பாதிக்கின்றது. வயிற்றுப் புண் பலரிடம் காணப்படுகிறது. இளவயதில் இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, புற்றுநோய், சுவாசக்கோளாறுகள், பார்வைக் கோளாறுகள் இப்படிப் பல நோய்களால் மனிதர்கள் தினம் தினம் வருந்துகிறார்கள். வைத்தியசாலைகள் பெருகிக் கொண்டே போகின்றன. அதேவேளை மயான பூமிகளும் பெருகிக்கொண்டே போகின்றன. இவைகள் யாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது அறிவியலால் அழிவியலும் ஏற்படுகின்றது. அதாவது 50% நன்மையும் 50% தீமையும் ஏற்படுகின்றது.

**அக்கால மனிதன் அறிவியல் குன்றி- நீடிய காலம் வாழ்ந்தான்**

**இக்கால மனிதன் அறிவியல் கூடி குறுகிய காலத்திற்குள் அழிந்தொழிகின்றான்!**

**அம்பலவாணர் இராஜரட்ணம்**
**சைவப் புலவர், சைவ சித்தாந்தப் பண்டிதர்**

# செய்தித்துளிகள்

## துறைமுக அதிகாரசபையின் தகவல் பிரிவு மூடப்படவில்லை

### இலங்கை துறைமுக அதிகாரசபை மறுப்பு

தமது அதிகாரசபையின் தகவல் மற்றும் பொதுமக்கள் தொடர்புப் பிரிவு மூடப்பட்டதாக வெளியான செய்தியை இலங்கை துறைமுக அதிகார சபை மறுத்துள்ளது.

இது தொடர்பில் அதிகாரசபை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணிப்பின் போது, நீர் நிரப்பும் நடவடிக்கையில் நிதிமோசடி இடம்பெற்றமை தொடர்பில், பாரிய ஊழல்கள் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதற்கிடையில் அதிகாரசபையின் தகவல் பிரிவு மூடப்பட்டதாக வெளியான தகவலை அதிகாரசபை மறுத்துள்ளது.

முன்னதாக தகவல் பிரிவு மூடப்பட்டமைக்காக அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வுள்ளதாக துறைமுக தொழிற்சங்கம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அமைச்சரவையில் மாற்றம் இல்லை

நல்லாட்சி அரசாங்கத்தின் கன்னி வரவு செலவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த வருடத்தில், அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவிருக்கின்ற கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து, மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

நாடாளுமன்ற தேர்தலின் பின்னர், நியமிக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் இவ்வருடத்துக்குள் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## பொலிஸாருக்கெதிராக 604 முறைப்பாடுகள்

### பிராந்திய பணிப்பாளர் கொழும்புக்கு அழைப்பு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக இதுவரை 604 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றின் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் அவர்களுக்குக் கீழ் பணிபுரிந்தவர்கள் பற்றியவை எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் முறைப்பாடுகளின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்காமை அல்லது ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவையே பிரதான குற்றச்சாட்டுகளாக உள்ளன எனவும்,

இக்குற்றச்சாட்டுகளின் உண்மை நிலையை அறிந்துகொள்ள ஆணைக் குழுவின் பிராந்தியப் பணிப்பாளர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பிலுள்ள பிர்தான காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நீண்டகால இடைவெளிக்கு பின் மக்கள் பாவனைக்கு வந்த வீதி

மக்கள் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்த சில்லாலை தும்பளப்பாய் வீதி நீண்டகால இடைவெளிக்குப்பின் மக்கள் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக சில்லாலை விவசாய சம்மேளனத் தலைவர் ஆ.த.குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்த நடவடிக்கை காரணமாக குறித்த வீதி ஊடான மக்கள் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

சம்பில்துறையில் இருந்து தும்பளப்பாய் வைரவர் ஆலயம் வரையான நெல்வயல்களுக்கு செல்லும் இவ்வீதியூடான போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

யுத்தம் நிறைவடைந்து பல ஆண்டுகள் கடந்தும் இவ்வீதியானது மக்கள் பாவனைக்கு விடப்படாததையடுத்து அங்குள்ள மக்களால் இது தொடர்பில் சில்லாலை வடக்கு - தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

விவசாயிகள் சம்மேளனத்தினால் யாழ்.அரச அதிபரிடம் முறையிடப்பட்டது.

இதனையடுத்து இது தொடர்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள்,கடற்படை அதிகாரிகள் ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட பின்னரே இவ்வீதியானது மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## உயர்தர பரீட்சை பெறுபேறுகள்-2015

**யா/டிறிபேர்க் கல்லூரி**

**கலைப்பிரிவு**

கு.மதுரா -3ஏ, க.தனூசியா-ஏ2பி, க.வனஜா-ஏ2பி.

**வர்த்தகப்பிரிவு**

சு.சிவோதயன் - ஏபிசி, உ.விதுஜா-ஏ2பி.

**கணிதப்பிரிவு**

க.தர்மிகன்-3ஏ,ந.கானரூபன்-2ஏபி, த.நர்தனன்-2ஏபி,த.பிரகாஸ்-2ஏபி, ஜெ.ஜெயகீதன்-2ஏபி, க.நிரஞ்சன்-ஏ2பி.

**உயிரியல்பிரிவு**

பி.டக்சியா-3ஏ, பொ.கஸ்ரோ-3பி, ம.சேனுஜா-3பி.

**பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு**

ஜெ.பிரண்வதாஸ்-3ஏ,ச.ஜனார்தனன்-2ஏசி, பா.தபோதரன்-2பிசி.

**உயிரியல் முறைமை தொழில் நுட்பப்பிரிவு**

ரி.பிறேமா-ஏபிசி,சி.டிலானி-ஏபிசி, சூ.டிலக்ஷி-ஏபிசி,அ.டக்சியனா-ஏபிசி, ஜெ.சுவர்ணா-2பிசி, ஞா.பிரசாந்தி-பி2சி

**யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

க.டினூஜன்-3ஏ, இ.வசந்தராம்-3ஏ, ம.சுமித்திரா-2ஏபி, யோ.மேனகா-2ஏபி, க.சன்சிகா-2ஏபி, பொ.கௌசிகா-2ஏபி, க.சத்திகா-2ஏபி, மோ.கிருசாந்-ஏ2பி, சு.லக்ஸ்மன்-ஏ2பி, இ.சங்கமி-ஏ2பி, க.கண்ணன்-ஏபிசி, ந.சஜித்தா- ஏபிசி, யோ.நிரூசன்-ஏபிசி , மு.சிவகேமா-ஏபிசி, சி.லின்சன்-ஏ2சி, வ.ஜனனி-ஏ2சி.

**கலைப்பிரிவு**

த.தர்மிகன்-3ஏ, இ.லக்சனா-2ஏபி, க.தேனுகா-2ஏபி, சி.கார்த்திகா-2ஏபி, இ.பபிலா-2ஏசி, சி.கர்மினி-ஏ2பி, த.சாந்தனா-ஏ2பி, பா.அபிராஜினி-ஏ2பி,அ.சிந்துஜா-ஏ2பி, ம.தயாளினி-ஏ2பி, த.நளினி- ஏ2பி, சி.டிலக்ஸ்சனா-ஏ2பி, த.டிசாந்தினி-ஏ2பி, ஆ.சஜீபன்-ஏ2பி, ந.கல்யாணி-ஏ2பி, ஆ.அஜித்தா-ஏபிசி, நி.பாஸ்கரி-ஏபிசி.

**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

ச.ஜெனந்தி- ஏபிசி.

**கலைப்பிரிவு**

த.நிஸாந்தி-3ஏ, வ.நிலாணி-ஏ2பி, ச.தேனுர்சா-ஏ2பி.

**யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி**

**கலைப்பிரிவு**

பா.ஜெனிதா-3ஏ, த.நிலோஜனி-2ஏபி, ழா.சபேஸ்கரன்-ஏபிசி, த.கோபிகஜனி - ஏபிசி.

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

**உயிரியல்**

ந.தனுசிகா-2ஏபி.

**வர்த்தகப்பிரிவு**

சி.அனுசா- 2ஏபி

**கலைப்பிரிவு**

ப.அனுஷா-3ஏ,தி.பிரசாயினி-3ஏ, சி.சுமித்தா-3ஏ, கு.சயந்தன்-2ஏபி, இ.கார்த்திகா-2ஏபி, சி.ஜிந்துஜா-2ஏபி, இ.தட்சாயினி- 2ஏபி, வே.சசிரேகா- 2ஏபி, இ.அபிசேகா-2ஏபி, தே.வித்தியா-ஏ2பி, ம.அனுஜா-ஏ2பி, கு.நித்தியானந்தன்-ஏபிசி, இ.நிவேதிகா-ஏபிசி, இ.சத்தியா-ஏபிசி, நி.மகிளினி-ஏபிசி, லோ.சங்கீர்த்தனா-ஏபிசி, வீ.விஜிதா-ஏபிசி, இ.சிவரோகினி-ஏபிசி, த.தர்சிகா-ஏபிசி, வ.சதீஸ்-ஏ2சி, க.நிரோஜினி-ஏ2சி, க.ரயாளினி-ஏ2சி.

**யா/நாவற்குழி ம.வி**

**வர்த்தகப்பிரிவு**

க.அரவிந்தன்-2ஏசி.

# இன்று ஒரு தகவல்

## படிப்பு வேறு அறிவு வேறு

குடியிருக்கும் வீட்டுக்குப் படி, நடை, கூடம், முற்றம், வெளி என்று ஐந்து உறுப்புகள் இருக்கின்றன. வீடு என்றால் மோட்சம் என்ற பொருளும் உண்டு. அதற்கும் இதே ஐந்து பிரிவுகள்தாம். முதலில் படி, அதாவது நல்ல நூல்களைப் படி. அது முதல் நிலை. படித்தால் போதாது படித்த வழியில் நட. அதுதான் நடை. இது இரண்டாவது நிலை. நடப்பது கஷ்டம் என்றால் அப்படி நடப்பவர்கள் உடன் கூடி இரு. சத் சங்கம் செய்... அதுதான் கூடம். இப்படி வாழ்வு முற்றும் என்றால் (நான்காவது முற்றம்) வெளி – வெளியாகிய இறைவன் உடன் கலக்கலாம். இந்த வீடு, அந்த வீடு பெற விளக்கம் சரிதானே? சில பேர் நிறையப் படிப்பார்கள். எந்த நூல்படியும் நடக்க மாட்டார்கள். திருக்குறளைத் தலைகீழாக ஒப்புவிப்பார்கள். ஒரு குறளையும் பின்பற்ற மாட்டார்கள்.

டாக்டரிடம் போகிறோம். வயிற்று வலி என்று புலம்பியதும் ஒரு காகிதத்தை எடுத்து மருந்து எழுதி "இதை மூன்று வேளை சாப்பிடு..." என்கிறார் டாக்டர். எழுதிக் கொடுத்த காகிதத்தையே மூன்று வேளை சாப்பிட்டால் வலி குறையுமா? கூடுமா?

இன்றைய படிப்பில் புத்தகங்கள் விழுங்கப்படுகின்றன. மனப்பாடங்கள் பட்டம் பெறுகின்றன. மனித டேப் ரிகார்டர்கள் டிப்ளமாக்களுடன் படிக்கட்டுப் படிக்கட்டாக ஏறி இறங்குகின்றன! சொற்பொழிவாளர்கள் ஒலிக் குப்பைகளால் காதுகளையும் மனங்களையும் நிரப்புகிறார்கள்.

படிப்பு நடைமுறைக்கு வரவில்லை. கேள்வி ஞானம் வாழ்க்கை ஞானம் ஆகவில்லை. எங்கு பார்த்தாலும் ஏட்டுச் சுரைக்காய்கள் என்பதால் உலகம் பசியோடு உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது.

**அது ஒரு பொற்காலம்**

ஸ்ரீரங்கத்தின் துளசி மணம் கமழும் தெருக்களினூடே, இரவுவேளையில் அந்தப் பெரியவர் வேக வேகமாக நடக்கிறார். அவரது சீடர்கள் பதுங்கிப் பதுங்கி அவரைப் பின் தொடர்ந்தார்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு குடிசை. அதற்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்.

இரவு நேரத்தில், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வந்து, ஊருக்கு ஒதுக்குப்புறமான குடிசைக்கு வந்து கதவைச் சாற்றிக் கொண்டார் குருநாதர் என்றால், சீடர்களுக்கு மனம் எப்படி இருக்கும்? பரபரப்பான கற்பனைகள்... ஓலைகளின் இடுக்குவழியாக உள்ளே பார்க்க...

மங்கலான வெளிச்சத்தில், கட்டிலில் கிடக்கும் மெலிந்த உருவத்தை மெல்லத் தாங்கி எடுத்து உடலைத் துடைத்துச் சுத்தப்படுத்தி, பணிவிடைகள் செய்கிறார் குருநாதர். மாறனேரி நம்பிகள் என்ற நோயுற்ற ஹரிஜன வைணவர் ஒருவருக்கு பெரிய நம்பிகள் என்ற அந்தண வைணவர்தான் இந்த அரும்பணி செய்த அன்பர். செய்தி காட்டுத் தீ போல ஸ்ரீரங்கம் முழுவதும் பரவியது.

ஹரிஜனரைத் தொட்டுப் பணி செய்யும் அந்தண நம்பிகளை என்ன செய்வது? ஜாதிப்ரஷ்டம் செய்வதா? விசாரணை நடத்துவதா? ஸ்ரீரங்கத்தில் தேர்த் திருவிழா வேறு....

"ரங்கனின் தேர் பெரியநம்பிகள் வீட்டு வாசலில் நிற்கலாகாது, இடைக்கால அவமானமாக இது போதும்" என்று தீர்மானம் ஆயிற்று.

கருணைக் கடல் தேர் ஊர்ந்து வந்த சமயம், பெரிய நம்பிகளின் திருமகள் அத்துழாய், கண்களில் நீர்மல்க, கதவைப் பிடித்தபடி வெளியிலே பார்த்தவள், வாய் திறந்து புலம்பினாள்! "எல்லோரும் எம்மை விலக்கினர்.... ரங்கா! நீயும் எமக்கு விலக்கோ!" என்றாள்.

அச்சு முறிந்து தேர் வீட்டு வாசலிலேயே நின்று விட்டது! பத்து நிமிடம் அல்ல... பல மணி நேரம் பகவான் நின்றார்..

இதற்கும் மேலே ஒரு படி.... மாறனேரி நம்பிகள் திரு நாடு அலங்கரித்தார். மரணம் என்ற அவலநிலை கடந்து அமர நிலையாகப் பரமபதம் பெற்றார். அந்த ஹரிஜனப் பெரியவருக்குப் பிரேத ஸம்ஸ்காரம் என்னும் இறுதிக் கடன் வழிபாட்டை அந்தணராகிய பெரிய நம்பிகள் தாமே செய்தார். புனிதமான ஒரு புரட்சி அமைதியாக நடந்தேறியது.

பரம்பரையான நெறிமுறைகளுக்கு இது விரோதம் என்று பழைமைவாதிகள் வருத்தம் காட்டினர். சபையைக் கூட்டி பெரிய நம்பிகளை விலக்கி வைப்பது என்று முடிவு கட்டினர். அவரோ அவர்களுக்கு உண்மையை விளக்கி வைப்பது என்று முடிவு கட்டினார்.

நம்பிகள் உருக்கமாக சொன்னார்:

"ஆளவந்தார் நம் ஆசிரியர். அவர் ஆழ்வார் பாசுரங்களை அனுபவித்து விளக்குவதை, ஹரிஜன மரபில் பிறந்ததால் கோவிலுக்கு வெளியே நின்று மாறனேரி நம்பிகள் கேட்பார்."

"உடல்நலம் குறைந்து பிளவை நோய்வாட்ட, ஆளவந்தார் பலம் குறைந்து உரைத்தார். கோவிலுக்கு வெளியே நின்ற மாறனேரி நம்பிக்குக் கேட்கவில்லை.

ஒருநாள் உபந்யாஸம் செய்ய வரும் சமயம் கால்களில் விழுந்தார். கண்ணீர் மல்க "சுவாமி காலட்சேபம் செய்யும் இந்தக் குறைந்த நேரம் தேவரீர் நோயை எனக்குத் தந்து விட்டுப் போய் ஆனந்தமாகக் காலட்சேபம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆளவந்தார் "அப்படியே ஆகட்டும்" என்று தம் நோயை மாறனேரி நம்பிகட்கு வழங்கி விட்டுக் காலட் சேபம் செய்யப் போனார். உடல் உபாதை இன்றி ஆனந்தமாகப் பேசினார். திரும்பி வந்ததும் நோயைத் திருப்பிக் கேட்க, "குரு பிரசாதமாக என்னிடமே இருக்கட்டும்" என்று தர மறுத்தார். குருபக்தியைக் கண்ட ஆளவந்தார், தம் நோயைப் பெற்றுக் கொண்ட மாறனேரி நம்பிகளைத் தம்மைப் போலவே பாவிக்க வேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டார். ஆகவே மாறனேரி நம்பிகளை மதித்துப் பிரேத ஸம்ஸ்காரம் செய்ததில் குற்றமில்லை."

இந்த வாதத்தைச் சபை ஏற்கவில்லை! "ஹரிஜன மரபில் வந்த ஒருவருக்கு அந்தண மரபினர் ஈமக்கிரியை செய்ய என்ன அனுமதி உள்ளது?" என்றனர். பெரியநம்பிகள் கேட்டார்: "நம்மைவிடப் பட்சி பறவைகள் தாழ்ந்தவையா. உயர்ந்தவையா?"

"தாழ்ந்தவை" என்றனர் சபையோர்.

"ஸ்ரீமந் நாராயணன் இராமனாக அவதாரம் செய்தாரே, நம்மை விட உயர்ந்தவரா? தாழ்ந்தவரா?"

"அபசாரம்... அபசாரம்... இது என்ன கேள்வி! இராமர் நம்மைவிட பன்மடங்கு உயர்ந்தவர்"

நம்மைவிட உயர்ந்த இராமர், நம்மை விடத் தாழ்ந்த பட்சிக்கு, அதாவது ஜடாயுவுக்கு ஈமக்கிரியை செய்ததாகச் சொல்கிறோம். மனிதன் மனிதனுக்குச் செய்ததில் என்ன குற்றம்?"

சபை ஸ்தம்பித்தது. இராமாயணம் படிக்க மட்டுமல்ல, பின்பற்ற.

# புதுவருட பலன்கள் 2016



**சுக்ர பலத்துடன் ஆண்டு பிறக்கிறது! துணிந்தால் வெற்றி இருக்கிறது! தான் மட்டுமல்லாமல் மற்றவர்களும் இன்பமாக வாழ வேண்டுமென்று விரும்பும் துலாம் இராசி நேயர்களே!**

இப்பொழுது மலர்ந்திருக்கின்ற புத்தாண்டு உங்களுக்கு அற்புதப் பலன்களை வழங்கப் போகின்றது. ஒப்பற்ற சனி உங்கள் ராசியை விட்டு விலகிவிட்டது. பாதச் சனியாக நடப்பதால் இனி பயமில்லை.

வருடம் பிறந்ததே உங்கள் சுகரனுக்குரிய நாளான வெள்ளிக் கிழமையில்தான். அள்ளிக் கொடுக்கும் சுக்ரன் உங்கள் ராசிநாதனாக விளங்குவதாலும், அந்த நாளில் ஆண்டு பிறந்ததாலும் சென்ற ஆண்டில் செய்யாத பல சிறப்புகளை இந்த ஆண்டு செய்யப் போகின்றது.

வருடத் தொடக்கத்தில் இருக்கும் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது 6 இல் கேது, 12 இல் ராகு அனைத்துக் கிரகங்களும் சர்ப்பக் கிரகத்திற்குள் அடக்கமாகின்றது. உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு பகைக்கிரகமாக விளங்கும் குருபகவான் அதிசாரத்தில் கன்னி ராசியில சஞ்சரிப்பதால் விபரீத ராஜயோக அடிப்படையில் செயறபடப் போகின்றது. அந்த ராஜயோகம் நல்ல விதமாகச் செயறபட வியாழன் தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**1.1.2016 முதல் 6.2.2016 வரை**

இக்காலத்தில் குரு, கன்னி ராசியில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கின்றார். அதிசார குருவாகச் சஞ்சரிப்பது யோகம் தான். பொதுவாகவே 6, 8, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதி அதே ஸ்தலங்களில் தனித்தோ ஒன்றுகூடும் பொழுதும் அதன் பார்வையை அதற்குரிய ஸ்தானத்தில் செலுத்தும் பொழுது திடீர் மாற்றங்கள் உருவாகும் என்பது நியதி. அந்த மாற்றங்கள் அற்புதமான மாற்றங்களாகவும் அமையும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். அலுவலகத்தில் பணி புரிபவர்களுக்கு அதிகாரமிக்க பதவி கிடைக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு பனிரெண்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் ஜனவரி 8 ஆம் திகதி முதல் இலாப ஸ்தானம் எனப்படும் பதினோராமிடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதுவரை 6 இல் சஞ்சரித்து வந்த கேது பகவான் அன்று முதல் 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த ராகு-கேது பெயர்ச்சியும் நல்ல மாற்றங்களை வழங்கப் போகின்றது.

இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு குருவோடு கூடுவதால் பணப் புழக்கம் அதிகரிக்கும் விதத்திலேயே இருக்கின்றது. வருமானத்தை இருமடங்காக்கும் விதத்தில் ராகு சஞ்சரிப்பதால் சாதாரண வேலையில் இருப்பவர்கள இனி நல்ல சம்பளம் தரும் வேலைககுச் செல்ல வாய்ப்புக் கிட்டும். ஏராளமான நேர்முகத் தேர்விற்குச் சென்றும் எதிலும் பல்ன் கிடைக்கவில்லையே என்று ஏங்கிய உங்களுக்கு இனி வியக்கும் விதத்தில் வெளிநாட்டுக் கம்பெனிகளிலிருந்து கூட அழைப்புகள் வரலாம்.

அடிக்கடி அதிகாரிகளின் ஆதரவு கிடைக்காமல் பதவி உயர்வு வருவதில் பிரச்சினையாக இருந்தவர்களுக்கு இனி சம்பள உயர்வு பற்றிய சந்தோஷச் செய்தியும், உத்தியோக உயர்வு பற்றிய உன்னதத் தகவலும் வந்து சேரப்போகின்றது. தொழில் செய்பவர்களுக்கு இதுவரை ஸ்தம்பித்திருந்த தொழில் இனிச் சிறப்பாக நடைபெறும்.

வெளியூர் செல்லலாமா? இல்லை




வீட்டை மாற்றலாமா? தொழில், பணியாளர்களால் தொல்லை ஏற்படுகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இனி வருமானம் பெருகி வளர்ச்சி காணப் போகின்றார்கள். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும்.

பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறப்போகின்றது. நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். கேதுவின் பாதசார பலமறிந்து இதுபோன்ற நேரங்களில் பரிகாரங்களைச் செய்தால் பிள்ளைகளின் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகளும் தீரும்.

வாரிசுகளால் நன்மையை ஏற்படுத்தும் 5 ஆம் இடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். பிள்ளைகளின் உத்தியோகம் சம்பந்தமாக தீவிர முயற்சி செய்து எதுவும் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் வந்துசேரும். வரன்கள் வாயில் தேடி வந்து வந்து திரும்புகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இனி உள்ளம் மகிழும் விதத்தில் நல்ல இடத்துச் சம்பந்தம் வந்து சேரப்போகின்றது.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

வருடத் தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குருபகவான் கன்னி ராசியில் சஞ்சரிக்கிறார். அவர் 7.2.2016 முதல் 1.8.2016 வரை மீண்டும் உங்கள் ராசிக்கு பதினோராமிடமான இலாப ஸ்தானத்தில் சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கு 17.5.2016 வரை வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார்.

18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை இலாப ஸ்தானத்திலேயே சஞ்சரிக் கப் போகின்றார்.

அதன் விளைவாக தொழில் வளம் சிறப்பாக இருக்கும. கேட்ட இடத்திலிருந்து தொகை கிடைக்கும்.

இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு தன் பார்வையை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிக்கின்றார். சகோதர வர்க்கத்தினரோடு ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மணமாலை சூடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. நீண்ட நாட்களாக மகப்பேறு இல்லாதவர்கள் இதுபோன்ற அனுகூலமான நேரங்களில் வழிபாடுகளை முறையாகச் செய்தால் எதிர்பார்த்த நற்பலன்கள் எளிதில் கிடைக்கும்.

**சனியின் சஞ்சார நிலை! 27.3.2016 முதல் 1.8.2016 வரை**

விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகின்றார். தொடர்ந்து ஆண்டு முழுவதும் விருச்சிகத்திலேயே சனி சஞ்சரிக்கின்றார்.

இரண்டெனும் தன
ஸ்தானத்தில்
ஈசனார் சனியும் நின்
றால்
திரண்டிடும் செல்வம்
நாளும்
தீமைகள் விலகி ஓடும்!
வறண்டதோர் வாழ்க்கை
மாறும்!
வளர்ச்சியால் மகிழ்ச்சி
கூடும்!
மிரண்டிடும் நிலையும் மாறி
மேன்மைகள் வந்து சேரும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் தன ஸ்தானத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது சகல பாக்கியமும் உங்களுக்கு வந்து சேர வேண்டுமானால் காக வாகனத்தானை கைகூப்பித் தொழவேண்டும். பாதச் சனியின் ஆதிக்கத்தால் பணவரவு திருப்தி தரும். சினத்தைக் குறைத்துக் கொண்டால் சிறப்பான வாழ்க்கை சேரும். பணப் பற்றாக்குறை அகலும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். சொந்த பந்தங்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர்.




**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்! 27.2.2016 முதல் 9.9.2016 வரை**

விருச்சிக ராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக் காலத்தில் மிகுந்த கவனம் தேவை. வாக் குறுதியைக் காப்பாற்ற இயலாது. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் சில ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும். பொறுமையுடன் செயறபட வேண்டிய நேரமிது.

அதே நேரத்தில் 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 25.10.2016 முதல் 6.12.2016 வரை உச்சம் பெறுகிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். கேட்கும் இடத்தில் உதவி கிடைக்கும். நாட்பட்ட நோய்கள் தீரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் என்பதால் சங்கடஹர சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெற விநாயர், முருகன, சுவாமி, அம்மன், மாபெரும் நந்தி, தட்சிணாமூர்த்தி, வராஹி ஆகிய அனைத்து தெய்வங்களையும் வழிபட்டால் தடைகள் அகலும்.

**துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு உங்களுக்கு யோகம் தரும் ஆண்டாகும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். மணியான வாழ்க்கையில் மக்கள் செல்வங்கள் இல்லையே என்ற கவலை மாறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைச் செல்வம் இருந்தும் அதனால் பிரச்சினைகள் ஏற்பட்டவர்களுக்கு அந்த நிலை மாறிக் குழந்தைகளின் ஆதரவு கிடைக்கும். ராகு- கேது பெயர்ச்சியின் விளைவாக சகோதரர்களின் ஒத்துழைப்புக் கூடுதலாக இருக்கும். தன்னிச்சையாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். பணி மாற்றம் வேண்டுமென்று முயற்சித்தவர்களுக்கு விரும்பிய இடம் கிடைககும். பொதுநலததில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். இலாப ஸ்தான ராகு பணப்பற்றாக்குறையை அகற்றும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சேமிப்பு உயரும். புத்திர ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் பிள்ளைகளால் பெருமை சேரவும், குடும்ப குழப்பங்கள் அகலவும் பரிகாரம் செய்து கொள்வது நல்லது. வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகையை வழிபட்டு வாருங்கள்.

**ஆடி பதினெட்டில் தேடி வரும் யோகம்!**

ஆடி 18 ஆம் திகதி (2.8.2016) முதல குருபகவான் பதினோராமிடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அதன் பார்வை உங்கள் ராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பயணத்தால் பலன் கிடைக்கும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள்.

ஆறாமிடத்தை குரு பார்ப்பதால் உத்தியோக ஸ்தானம் பலமடைகின்றது. புதிய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். எதிர்பார்த்த ஊருக்கும் இடமாற்றம் கிடைக்கும். அஷ்டம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வீர்கள். தொல்லை தந்த பங்குதாரர்கள் உங்களை விட்டு விலகுவர். ஆரோக்கியக் குறைபாடுகள் அகலும்.

## சுக்ர பலத்துடன் ஆண்டு பிறக்கிறது துணிந்தால் வெற்றி இருக்கிறது!

நாளை விருச்சிகம

வெட்கத்துக்குப் புரிவது
சட்டத்துக்குப் புரியாது

~ ஓர்அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பக்கத்திருப்பவர் துன்பத்தை பார்க்கப் பொறாதீர்கள்!

தீக்காயங்களுக்கு ஆளாகி பரிதாபமாக மரணித்துப்போன மூன்று பிள்ளைகளின் தாயின் சோகம்; அதனுடன் கூடிய வறுமை பற்றி செய்திகள் அறிந்து, ஆற்றாது அழுத உறவுகள்; உதவிக்கரம் நீட்டிய மனித நேயம் மிக்கவர்கள் என்ற பட்டியலைப் பார்த்தபோது நம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

அட, அந்த ஏழைக்குடும்பத்தின் வறுமைநிலை வெளிவராததன் காரணமாகவே உதவிகள் அந்தக் குடும்பத்துக்குச் சேரவில்லையோ! என்று எண்ணத் தோன்றுகிறது.

எதுவாயினும் உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற யேசுபிரானின் வார்த்தை பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

வீட்டுக்குத் திண்ணை கட்டி, வீதியால் போய்வருவோர் ஆறி அமர உதவி செய்த தமிழினம், வீதிகள் தோறும் அன்னசத்திரங்கள் அமைத்து அமுது ஊட்டியது.

யாரைக் கண்டாலும் எப்படிச் சுகம் என்று விசாரிக்கும் உயர் பண்பாடு நமக்குச் சொந்தமானது. வீட்டுக்கு வருவோரை வரவேற்று விருந்து கொடுத்து வருவிருந்து பார்த்திருந்த தமிழினத்தில் தனி ஒரு மனிதன் பசித்திருந்தாலும் அதனை பொறுமையுடன் பார்த்திருக்க முடியாதன்றோ!

இருந்தும் இன்று பல குடும்பங்கள் வறுமையால் ஒரு நேர உணவுக்குக்கூட ஏங்குகின்ற நிலைமை இருப்பதை அறியும்போது இதயம் கருகி விடுகிறது. இத்தகைய துன்பநிலைமையில் இருந்து மக்களைப் பாதுகாப்பது அவசியமும் அவசரமுமாகும்.

இத்தகைய பணியைச் செய்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் பொருத்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதிலும் குறிப்பாக ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர்களும் தத்தம் பிரிவுக்குள் அடங்கும் குடும்பங்களின் வாழ்வாதார நிலைமைகளை அறிவதன் மூலம், பசித்திருக்கும் குடும்பங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவி வழங்கி அந்த உயிர்களைக் காப்பாற்றமுடியும்.

இந்த உயரிய புண்ணியத்தை எங்கள் கிராம சேவை உத்தியோகத்தர்களால் நிச்சயம் செய்ய முடியும்.

இதன் பொருட்டு ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் வறுமை ஒழிப்புக்கு நிதியங்களை ஆரம்பித்து உதவி செய்ய முன்வரவேண்டும்.

இன்று எத்தனையோ பரோபகாரிகள் தாராளமாக உதவத் தயாராக உள்ளனர். இருந்தும் தமது உதவி உரியவர்களுக்குப் போய் சேருமா? என்ற நம்பிக்கையீனத்தால் உதவ முடியாதவர்களாக உள்ளனர்.

இத்தகைய நிலையில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பிரதேச செயலரை தலைவராகவும் கிராம உத்தியோகத்தர்கள், இதர அலுவலர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு வறுமையைப் போக்கும் நிதியத்தை ஆரம் பிப்பது அவசியம். இந்த நிதியத்துக்கு அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த-வெளிநாடுகளில் உள்ளவர்களிடம் இருந்து நிதியைப் பெற்று உத வும் திட்டத்தை அவசரமாக ஆரம்பிக்க வேண்டும்.

இதன் மூலம் பசி என்ற கொடுமையை இல்லாது செய்வதுடன், இனி வாழ முடியாது என்று மனம் சோர்ந்து தம் உயிரை மாய்க்க நினைப்போரையும் காப்பாற்ற முடியும்.

ஆகையால் அரச சட்டங்களுக்கு அப்பால், இத்தகையதோர் நிதியத்தை ஆரம்பிப்பது பற்றி அரச அதிபர்கள் அக்கறை கொண்டு, பிரதேச செயலர்கள் மூலம் நிதியத்தை நிறைவேற்றினால் பசியாற ஏதும் இல்லை என்ற துயர் நிச்சயம் நீங்கும். ஆவன செய்யுங்கள்.

# விமானக் கொள்வனவு இலங்கை கைச்சாத்து

## பாதுகாப்புச் செயலர் நிராகரிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிடம் இருந்து, எட்டு ஜே.எவ்-17 போர் விமானங்களை கொள்வனவு செய்யும் உடன்பாட்டில், இலங்கை கையெழுத்திட்டுள்ளதாக வெளியான செய்திகளை இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி நிராகரித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசாங்கத்துடனான பேச்சுக்களில் கூட இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடப்படவில்லை என்று அவர் த ஹிந்து நாளிதழிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது குறித்து தமது அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இதுபற்றிய செய்திகள் தவறானவை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

போர் விமானங்களை வாங்கும் தேவை எழுந்தால், இலங்கை அரசாங்கம் வெளிப்படைத்தன்மை கொள்கையை கடைப்பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்களுக்கு தைப் பொங்கலை முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதாகவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொழில் நிலையங்களை திறந்து மக்களுக்கு சேவையாற்றுமாறும் 15. ஆம் திகதி முதல் வழமை போன்று நேரக்கட்டுப்பாடு அமுலில் இருக்கும் எனவும் அனைத்து அங்கத்தவர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் மீறும் பட்சத்தில் ஒன்றிய கண்காணிப்பு குழுவினர் மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ)




### தர்மம் செய்யுங்கள்

★ கற்றுக் கொடுப்பவரும், கற்றுக் கொள்பவரும் நேர்வழியில் இருக்கின்றனர். இந்த நிலை அற்றவர்களிடம் எந்த நல்வழியுமில்லை.

★ அல்லாஹ்வின் சேவைக்கல்லாமல் உலக வாழ்வின் நோக்கத்திற்காக கல்வி கற்பவன் நரகத்தை இருப்பிடமாகக் கொள்ளட்டும்.

★ மனிதன் கல்விக்காக செய்கின்ற தர்மம் அவன் மரணித்த பிறகும் நன்மை பொழியும்.

★ தர்மம் செய்வதின் மூலம் உங்கள் பொருள்களைப் பாதுகாருங்கள். உங்கள் நோய்களைக் குணப்படுத்துங்கள்.

★ விருப்போடு தர்மம் செய்யுங்கள். வெறுப்போடு தர்மம் செய்யாதீர்கள்.

★ கஞ்சன் அல்லாஹ்வை விட்டும் தூரமாகி விடுவான்.

★ கருணை உள்ளம் கொண்டவன் தங்குமிடம் சொர்க்கமாகும். கஞ்சத்தனம் கொண்டவன் தங்குமிடம் நரகமாகும்.

★ கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் நம்மை நாசப்படுத்தி விடும்.

# நோர்வே அமைச்சருக்கு செங்கம்பள வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று (வியாழக்கிழமை) இலங்கை வந்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் போகே பிரன்டேவுக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

மங்கல வாத்தியங்கள் முழங்க, மலர்மாலை அணிவிக்கப்பட்டு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவால் வரவேற்கப்பட்ட நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர், அமைச்சிலுள்ள நினைவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

இதனையடுத்து, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்ததோடு, தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரிடம் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

சுமார் பதினொரு வருடங்களின் பின்னர் நோர்வேயின் அரச உயர்மட்ட அதிகாரியொருவர் இலங்கைக்கு மேற்கொண்டுள்ள முதலாவது விஜயம் இதுவாகும்.

யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் விடுதலை புலிகளுக்கு இடையிலான சமாதான பேச்சுவார்த்தையில் முக்கிய இடம் வகித்த நோர்வே, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் அரசாங்கம் குற்றஞ்சாட்டி வந்தது. குறிப்பாக சமாதான தூதுவராக செயற்பட்ட எரிக் சொல்ஹெய்முக்கு மகிநத அரசாங்கம் புலிச்சாயம் பூசியிருந்தது.

நாட்டில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், நல்லிணக்க முயற்சியில் ஈடுபடும் அரசாங்கம், சர்வதேசத்தின் ஆதரவை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# நுளம்பு, ஈக்களைக் கட்டுப்படுத்த வெள்ளநீருக்கு அபேட் மருந்து தெளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்தில் அண்மை நாட்களாக தொடர்ந்து பெய்து வருகின்ற மழையினால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகம் முழுவதும் மழைநீர் தேங்கி நிற்பதுடன் தேங்கி நிற்கும் நீரில் இருந்து நுளம்புகள், ஈக்கள் என்பன உருவாகுவதால் அத்னைக் கட்டுப்படுத்த கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிமனையினர், அபேட் என்ற மருந்தினை தெளித்து வருகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், நோயாளிகளுக்கு நுளம்புகள் கடிப்பதனாலும் சிற்றுண்டிச் சாலைகளில் இருக்கும் உணவுகளில் ஈக்கள் மொய்ப்பதனாலும் வைத்தியசாலையில் தங்கியிருப்பவர்களுக்கு தொற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனைக் கவனத்திற்கொண்ட சுகாதார பணியாளர்கள் இதனைக் கட்டுப்படுத்த தேங்கி நிற்கும் வெள்ளநீருக்கு அபேட் எனும் மருந்தை விசுறுகின்றனர்.

இதனை வீசுவதால் கிருமித் தொற்றுக்களில் இருந்தும் நுளம்புப் பெருக்கத்தில் இருந்தும் நோயாளர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-271)

# வாழ்வாதார உதவிக்கு உதவுக

வாழ்வாதார உதவித்திட்டத்திற்காக பாவித்த சேலைகளில் இருந்து புதிய வடிவ உடைகளை தயாரிப்பதற்காக சேலைகள் தேவைப்படுவதாக யாழ். பாசிக் நிறுவனம் அறிவித்துள்ளது.

கடற்றொழில் கிராமமக்களின் வாழ்வாதார உதவித்திட்டங்களை கடந்த பல ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் பாசிக் நிறுவனம் கிராமப் பெண்களின் முன்னேற்றத்தினை மையப்படுத்தி JICA நிறுவன நிதிப்பங்களிப்புடன் மூன்று ஆண்டு காலமாக நடை முறைப் படுத்தி வரும் இத்திட்டமானது இவ்வாண்டிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே பாவித்த சேலைகளை இவ்வருடமும் நன்கொடையாக வழங்கி இத்திட்டத்தில் இணைந்துள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற விரும்புபவர்கள் இல.28 கோவில் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள பாசிக் நிறுவன யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் அல்லது 021 222 1699 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் தொடர்பான விபரங்களை அலுவலகத்தில் பார்வையிட முடியும். (இ-5,60)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மரியாதை

நீங்கள் ஏன் ஒருவருக்கு மரியாதை கொடுக்கிறீர்கள்?

அவருடைய நல்ல குணங்களுக்காக அல்லவா? நல்ல குணங்கள் என்றால் நேர்மை, விவேகம், அன்பு திறமைகள், நடத்தைகள், பண்புகள். ஆனால், இந்தக் குணங்கள் எல்லாம் காலப்போக்கில் மாறுகின்றன. அப்படி மாறுகின்றபோது நீங்கள் அவர்களிடம் கொண்டுள்ள மரியாதையை இழக்கிறீர்கள். உயர்ந்த குணங்களுக்கு மாத்திரமே மரியாதையைத் தருகின்றீர்கள்.

ஒவ்வொருவர் மீதும் எனக்கு மிகுந்த மரியாதை உள்ளது. அவர்களிடம் இருக்கும் பெருமைகள் அல்லது திறமைகள் அல்லது விவேகம் இவற்றிற்காக அல்ல. அவர்களை அவர்களுக்காகவே மதிக்கிறேன். நான் ஒவ்வொருவரையும் முழுமையாக மதிக்கிறேன். நான் ஒவ்வொருவரையும் முழுமையாக மதிக்கிறேன். அவர்கள் எப்படி இருந்தாலும் அவர்கள் மீது நான் வைத்திருக்கும் மரியாதையை ஒருபோதும் இழக்க முடியாது.

ஒருவர் மதிக்கப்படவேண்டும் என்றால் அவர் உயர்ந்த மனிதராக இருக்கவேண்டும் என்பது அவசியமல்ல. ஓர் ஆத்மாவை மதிப்பது, உங்களைத்தான் உயர்ந்தவராக்குகிறது.

மற்றவர்களிடமிருந்து மரியாதையை எதிர்பார்க்காதீர்கள். அந்த எதிர்பார்ப்பு உங்களைப் பலவீனப்படுத்துகிறது.


உங்கள் ஆத்மாவின் மீது மரியாதை வையுங்கள்.

உங்கள் சுய மரியாதையை யாரும் உங்களிடமிருந்து பிரிக்கமுடியாது.

## பரபரப்பான இறுதி ஓவரில்

# இலங்கை அணியை வீழ்த்தி நியூசிலாந்து திரில் வெற்றி




இலங்கை அணிக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் நியூசிலாந்து 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்து - இலங்கை அணிகள் இடையே 2 இருபது- 20 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

மலிங்க காயம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளதால், சந்திமால் தலைவராக செயற்பட்டார். நாணயச் சுழற்சியில் வென்ற சந்திமால் முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி வழக்கமான அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தது.

தொடக்க வீரர் குப்தில் (58), அணித்தலைவர் வில்லியம்சன் (53) அரைசதம் கடந்தனர். முனரோ தன் பங்கிற்கு 26 பந்தில் 36 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனால் 20 ஓவர்கள் முடிவில் நியூசிலாந்து 4 விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டங்கள் எடுத்தது. குலசேகர 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

பின்னர் 183 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய இலங்கை அணிக்கு தொடக்க வீரர் குணதிலக அதிரடி தொடக்கம் கொடுத்தார். அவர் 29 பந்தில் 46 ஓட்டங்கள் எடுத்தார்.

டில்ஷான் (0), அணித்தலைவர் சந்திமால் (7), ஜெயசூரியா (4), மத்யூஸ் (4) என முன்கள துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த சிறிவர்த்தன 42 ஓட்டங்கள் எடுத்து நம்பிக்கை அளித்தார்.

ஆட்டத்தின் கடைசி ஓவரில் இலங்கை அணியின் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 3 விக்கெட்டுகள் மீதமிருந்தன.

கடைசி ஓவரில் அந்த அணியால் 9 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் பரபரப்பான இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து 3 ஓட்டங்கள் வத்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது. போல்ட், ஹென்றி தலா 3 விக்கெட் கைப்பற்றினார்கள். ஆட்டநாயகனாக போல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

ஏற்கனவே 2 டெஸ்ட் கொண்ட தொடரை 2:0 என்ற கணக்கிலும், 5 ஒருநாள் தொடரை 3:1 என்ற கணக்கிலும் நியூசிலாந்து கைப்பற்றியது.

தற்போது முதல் இருபது - 20 போட்டியிலும் வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலையில் உள்ளது.

2 இருபது -20 போட்டி கொண்ட தொடரின் 2 ஆவது மற்றும் கடைசி இருபது - 20 போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (க)

---

**வோனர் சதம்**

# சிட்னி டெஸ்ட் சமநிலை; தொடர் ஆஸி வசமானது



அவுஸ்தரேலியா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் கடந்த 3ஆம் திகதி தொடங்கியது. முதல் நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள 6 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

2 ஆவது நாள் ஆட்டத்தின் போது அந்த அணி 7 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்கள் எடுத்து இருந்த போது மழையால் பாதிக்கப்பட்டது. 3ஆவது நாள் ஆட்டம் மழையால் முழுமையாக இரத்து செய்யப்பட்டது. இதேபோல நேற்று முன்தின 4 ஆவது நாள் ஆட்டமும் பலத்த மழையால் இரத்து செய்யப்பட்டது. 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று நடந்தது. தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள 330 ஓட்டங்கள் குவித்து 'ஓல்அவுட்' ஆனது.

பின்னர் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சை விளையாடியது. தொடக்க வர்ர் பர்ன்ஸ் 26 ஓட்டங்களில ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான வோர்னர் அதிரடியான ஆடடத்தை வெளிப்படுத்தினார். அவர் 72 பந்தில் 10 பவுண்டரி, 2 சிக்சருடன 90 ஓட்டம் எடுத்து இருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அப்போது அவுஸ்திரேலியா 1 விக்கெட் இழப்புக்கு 126 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

மழை நின்ற பிறகு தொடர்ந்து ஆடிய வோனர் சதம் அடித்தார். 82 பந்தில் 10 பவுண்டரி, 2 சிக்சருடன் இந்த இலக்கை எட்டினார். அணியின் ஸ்கோர் 154ஓட்டங்களாக இருந்தபோது மார்ஷ் (21) தனது விக்கெட்டை இழந்தார். அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டம் முடிந்தது. இதனால் இந்தப்போட்டி சமநிலையானது. வோனர் 122 ஓட்டங்கள் குவித்து களத்தில் இருந்தார்.

ஏற்கனவே முதல் இரண்டு டெஸ்டிலும் வெற்றி பெற்று இருந்ததால் அவுஸ்திரேலியா 2:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. (க)

---

# தென்னாபிரிக்காவின் தொடர் தோல்வி; தலைவர் பதவியில் இருந்து விலகினார் அம்லா



தென்னாபிரிக்கா டெஸ்ட் அணியின் தலைவர் பதவியில் இருந்து ஹசிம் அம்லா விலகியுள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடை பெற்று வருகிறது.

4 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் முதல் டெஸ்டில் இங்கிலாந்து 241 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. முன்னதாக இந்தியாவுக்கு எதிரான தொடரையும் தென்னாபிரிக்க அணி இழந்தது.

இதனால் தென்னாபிரிக்க அணியின் தலைவராக செயற்பட்டு வந்த அம்லா மீது விமர்சனங்கள் எழுந்தது.

இந்த நிலையில் கேப் டவுனில் நடந்த 2 ஆவது டெஸ்டில் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 629 ஓட்டங்கள் குவித்து மிரட்டியது.

இதனால் தென்னாபிரிக்கா அணி இந்த போட்டியிலும் தோல்வி அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் பின்னர் அம்லா அபாரமாக விளையாடி இரட்டை சதம் அடித்தார்.

இதனால் அந்த அணி 627 ஓட்டங்கள் குவித்து தோல்வியில் இருந்து தப்பியது. இதனால் 2வது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

போட்டி சமநிலையில் முடிந்த உடனே தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ஹசிம் அம்லா அறிவித்துள்ளார்.

ஸமித் தலைவர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து 2014ஆம் ஆண்டில இருந்து அம்லா அந்த பொறுப் பில இருந்து வந்தார்.

டிவில்லியர்ஸ் மீதமுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கு தலைவராக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (க)

## விடுவிக்கப்பட்ட பகுதிக்கு யாழ்.அரசாங்க அதிபர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தேவைகள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கடந்த 29-ம் திகதி வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து 468 ஏக்கர் பொதுமக்களின் நிலம் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் மாவட்டச் செயலரின் பணிப்பிற்கமைய வீதிகள் துப்புரவு செய்யும் பணிகள் மற்றும் காணிகளை அடையாளம் காணும் பணிகள், மீள்குடியேறும் மக்களுக்கான குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இவற்றை மாவட்டச் செயலர் பார்வையிட்டுள்ளதுடன் மீள்குடியேற்றத்திற்கு வந்துள்ள மக்களின் தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். (எ-11)

# தமிழ் மக்கள் பேரவைக்கு திருகோணமலை ஆயர் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ்மக்களின் உரிமைகளையும் நலன்களையும் வலியுறுத்தும் வகையில் மதத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகள் இணைந்து ஆரம்பித்துள்ள தமிழ்மக்கள் பேரவைக்கு தனது ஆதரவும் ஆசியும் என்றும் இருக்குமென திருகோணமலை மாவட்ட ஆயர்மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் ஏற்பாட்டுக்குழு உறுப்பினர் அலன் சத்தியதாஸ் மற்றும் பேரவை உறுப்பினர் திருமதி மேரிதயாளினி உதயராஜ் ஆகியோர் திருகோணமலை மாவட்ட ஆயர் மேதகு நோயல் இமானுவேல் ஆண்டகையைச் சந்தித்து தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள் பற்றி விளக்கிக் கூறினர்.

இதன்போது தமிழ்மக்கள் பேரவை என்ற அமைப்பு தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியமானது எனக் கூறிய ஆயர், பேரவைக்கு தனது ஆதரவும் ஆசியும் என்றும் இருக்குமெனக் குறிப்பிட்டதுடன் திருகோணமலை மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்கள் பேரவையில் அதிகரிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

ஆயரின் கோரிக்கை உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என பேரவையின் பிரதிநிதிகள் ஆயரிடம் உறுதியளித்தனர்.

இதேவேளை மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப், மட்டக்களப்பு மாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆகியோரும் தமிழ் மக்கள பேர வையை வரவேற்று தமது ஆதரவைத் தெரிவித்திருந் தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ)



## ஓராண்டு...

யில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இவ்விழாவின் பிரதான சொற்பொழிவு இந்திய சுதந்திர போராட்டத்தின் முன்னோடிகளுள் ஒருவரான மகாத்மா காந்தியின் பேரர் கோபால்கிருஷ்ண காந்தியினால் நிகழ்த்தப்படுவதுடன், பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் மறறும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், அழைக்கப்பட்ட அதிதிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொள்ள உள்ளனர்.

அத்துடன் "ஒரே நாடு - மாபெரும் பலம்" எனும் நூல் வெளியீடும் இங்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன அவர்கள் தலைமையிலான அரசுக்கும் ஒட்டு மொத்த நாட்டு மக்களுக்கும் நல்லாசி வேண்டி நிகழ்த்தப்படும் விசேட மதவழிபாடு நாளை காலை 7.00 மணிக்கு களுத்துறை விகாரை அருகே ஜனா திபதி அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன், களுத்துறை வரலாற்று சிறப்பு வாய்ந்த போதி மகான் வீற்றிருக்கும் பூமியை களுத்துறை விகாரையின் நம்பிக்கைச் சபையிடம் ஒப்படைக்கும் நிகழ்வும் நடைபெறவுளளது. (எ-11)

## அச்சுறுத்தல் ஏற்படாதவாறு...

நல்லிணக்கம் மற்றும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் யுத்தத்தின் போது உள்ளக இடம்பெயர்விற்கு உள்ளான மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவது முக்கியமானது என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக் குழுவும் அதனைப் பரிந்துரை செய்துள்ளதாக நேற்று வெளியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானங்கள்உள்ளடங்கிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது சொந்தக் காணிகள் இதுவரை விடுவிக்கப்படாமையின் காரணமாக யாழ். மாவட்டத்தில் பல குடும்பங்கள் நலன்புரி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்துவருவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம், சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அமைச்சரவைக்கு தாக்கல் செய்திருந்த அமைச்சரவைப் பத்திரத்தைக கருத்திற்கொண்டு மக்களை மீள் குடியேற்றுவதற்காக தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் காணிகளை விடுவிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (எ-11)

## பணம் பெற்ற...

களை சேர்ப்பதற்காக பணம் பெற்றுக்கொண்டதாக அதிபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் நிபந்தனைகளை மீறிச் செயற்பட்டதாகத் தெரிவித்து இவ்வாறு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதேபோன்று நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகளில்ல் இலஞ்சம் பெற்ற அதிபர்களின் விபரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர்கள மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும்கல்வியமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன. (எ-11)

## நோர்வே...

இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரின் மிதமான அரசியல் நகர்விற்கு தனது பாராட்டுதலை தெரிவித்ததோடு, மிதமான அரசியல் கொள்கை மூலம் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், தமிழ் மக்கள் ஒன்றாக செயற்படுவதன்மூலமே ஒரு சரியான தீர்வை எட்டமுடியும் எனவும தெரிவித்தார். (எ-11)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா.கொக்குவில் இந்துக் கல்லூரியில்

கல்வி பயின்று 2015ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பிரிவில் 3A பெறுபேற்றை பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த கீழ்வரும் மாணவர்களையும் ஏனைய நல்ல பெறுபேற்றை பெற்ற மாணவர் களையும் இம் மாணவர்களை ஊக்குவித்த அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**கணிதப்பிரிவு - 3A**

1. S.தனுசன் 3A மா.நிலை 2
2. K.சதுர்சன் 3A மா.நிலை 3
3. S.சாருஜன் 3A மா.நிலை 13
4. M.மிரோசன் 3A மா.நிலை 41

**வர்த்தகப்பிரிவு - 3A**

1. M.லஜீவன் 3A மா.நிலை 1
2. T.துஸ்யந்தன் 3A மா.நிலை 35
3. M.சாரங்கன் 3A மா.நிலை 41
4. R.கிருஷானி 3A மா.நிலை 57
5. N.செந்தூரன் 3A மா.நிலை 64
6. K.மதீசன் 3A மா.நிலை 66
7. N.அபிராமி 3A மா.நிலை 70
8. K.உஷாந்தி 3A மா.நிலை 77

**கலைப்பிரிவு - 3A**

1. B.விஸ்னுஜன் 3A மா.நிலை 57

மேற்படி மாணவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அடுத்தடுத்த வருடங்களில் கூடுதலான மாணவர்கள் மேலும் நல்ல பெறுபேறுகளை பெறுவதற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் முயற்சிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்

(3108)

வாழ்த்துபவர்கள் :-

என் . ஈஸ்வரராஜா தாவடி தெற்கு பிரம்படி லேன் } கொக்குவில்

என் . சிவானந்தராஜா இலண்டன்


## விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு...

ச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று மாலை நேரில சென்று பார்வையிட்டார். இதன் போது இராணுவத்தினரால் மீண்டும் புதிதாக அமைக கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலய எல்லையை சென்று பார்வையிட்டதுடன் அங்குள்ள தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் விடுவிக்கப்பட வேண்டிய பிரதேசங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்த 700 ஏக்கர் நிலப்பரப்பு அண்மையில் விடுவிக்கப்பட்டது. இதற்கமைய இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த வலிகாமம் கிழக்குப் பிரதேசம் முழுமையாக விடுவிக்கப்பட்டிருக்கின்ற அதே வேளையில் வலிகாமம் வடக்கில் இன்னும் பல ஆயிரம் ஏக்கர் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிக்கு முதலமைச்சர் நேற்று திடீரென விஜயம் மொன்றை மேற்கொண்டார்.

இதன் போது வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறிமோகன் மற்றும் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுக்குழுவின் சஜீவன் ஆகியோரும் அங்கிருந்தனர்.

இதன்போது விடுவிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றையும் சென்றுபார்வையிட்டார். அத்தோடு விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருக்கின்ற பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பன குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இதில் குறிப்பாக விடுவிக்கப்பட்ட பகுதிகளின் காணி எல்லைகள் மற்றும் கிணறுகள், வீடுகள், மலசல கூடங்கள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் என்பன தொடர்பிலும் வீதிகள் புனரமைப்புத் தொடர்பிலும் கேட்டறிந்தார்.

அத்தோடு இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு அப்பால் புதிதாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தின் உயர்பாதுகாப்பு எல்லைப் பகுதிக்கும் சென்று பார்வையிட்டதுடன் இதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட வேண்டிய பகுதிகள் என்பன குறித்தும் கலந்துரையாடினார்.

இதேவேளை தங்களுடைய காணிகள் எல்லாம் பற்றைக்காடுகளாக எல்லைகளே தெரியாமல் இருப்பதாகவும் வீடுகள் முற்றாக இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றதாகவும் மலசலகூடங்கள் கிணறுகள் என்பவற்றைக் காணவிலலை என்றும் அப்பகுதி மக்கள் முதலமைச்சரிடம் தெரிவித்தனர்.

மேலும் கடந்த 1987 ஆம் ஆண்டு இங்கிருந்த வரைபுகளின் அடிப்படையிலேயே தங்களுடைய காணிகளிலும் அப் பிரதேசத்திலும் என்ன என்ன எங்கு எங்கு இருந்தது என்பது குறித்து தாம் தேடி வருவதாகவும் இதன்போதே தங்களுடைய காணிகள் வீடுகளுக்கான சில அடையாளங்கள் மட்டுமே காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினர். (எ-4)

## கோத்தபாய...

சுதந்திர முன்னணியின் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் கூட்டு எதிர்க்கட்சியின் ஒரு தரப்பினர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரை அரசியலுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டு எதிர்க்கட்சி என்ற தமது அரசியல் அமைப்பை முன்நோக்கி கொண்டு செல்வதற்காக அந்த தரப்பினர் கோத்தபாயவை அரசியலுக்கு கொண்டு வருவதற்காக அவருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. (எ-11)

# அரசியல்...

தமிழ் முற்போக்கு கூட்டணி பரிசீலித்து ஏற்றுக்கொள்ளும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் கலந்து பேச தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அழைப்பு விடுக்குமானால், அந்த அழைப்பை தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்றுக்கொள்ளுமா என்ற கேள்விக்கு பதிலளித்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

முழு பாராளுமன்றத்தையும், அரசியலமைப்பு சபையாக மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்கும் கொள்கையை முன்னெடுக்க இன்று அரசாங்கம் கொள்கையளவில் தீர்மானித்துள்ளது. இந்த புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் தேசிய செயற்பாட்டில் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாடு முழுக்க வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் உள்வாங்கப்படுவது காலத்தின் கட்டாயம் ஆகும். இச்சூழ்நிலையில், தமிழ் மற்றும் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக பிரதிநிதிகள் கலந்து பேசி, கருத்துகளை பரிமாற்றி பொது நிலைப்பாடுகளை உருவாக்க முனைவது நியாயமானதே.

ஒரே நாடு என்ற அடையாளத்துக்கு உள்ளே, வடக்கு-கிழக்கு மற்றும் தென்னிலங்கை என்ற இரண்டு பிராந்தியங்களுக்கும் வெவ்வேறு அரசியல் தேவைகள் உள்ளன. இது வரலாற்றுரீதியாக இயல்பானதே. அதேபோல ஒவ்வொரு பிராந்தியங்களிலும் வாழும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், அவ்வந்த பிராந்தியங்களின் அரசியல் களநிலைவரங்களின் அடிப்படையில் தமது அரசியல் கோரிக்கைகளை வடிவமைப்பதும் இயல்பானதாகும்.

இந்நிலையில் உரிமைக்கு குரல் கொடுப்போம், உறவுக்கு கை கொடுப்போம் என்ற எமது நீண்டகால கொள்கையின் அடிப்படையில் நாம் ஒருவருக்கொருவர் துணை இருப்பதை நாம் எப்போதும் வலியுறுத்திதான் வந்துள்ளோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே மத்திய, மேல், ஊவா, சப்ரகமுவ, வடமேல், தென் மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தொகுத்து ஒரு வரைபை உருவாக்கும் பணியின் நிமித்தம் ஒரு நிபுணர் குழுவை தமிழ் முற்போக்கு கூட்டணி தற்போது நியமித்துள்ளது. இவ்வார இறுதியில் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு பேரவை தொடர்பான பிரேரணை சமர்பிக்கப்பட்டதன் பின்னர், இந்த நிபுணத்துவ குழுவில் உள்ளடங்கியுள்ள நிபுணர்களின் பெயர் விபரப்பட்டியல் அறிவிக்கப்படும். இந்நிலையில் பொது நிலைப்பாடுகள் தொடர்பில், தமிழ் தேசிய கூட்டமைப்பு எமக்கு அதிகாரப்பூர்வமாக அழைப்பு விடுக்குமானால் நாம் நிச்சயமாக கலந்துபேச தயாராக உள்ளோம். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்றார். (எ-11)

# உள்நாட்டுப்...

தொடர்பிலான உள்நாட்டு பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வியாழக்கிழமை அதிகாரபூர்வமாக விஜயம் செய்துள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் போர்கே பிரென்டயுடனான சந்திப்பையடுத்து, இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இச் சந்திப்பில் அபிவிருத்தி உதவிகள் மற்றும் முதலீடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றுவது குறித்து நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள முதலாவது நாடாளுமன்ற அமர்வில் தெரிவிக்கப்படவுள்ளதை நோர்வே அமைச்சருக்கு கூறினேன்.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய, அவர்களது அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரசியல் யாப்பை உருவாக்க எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதாரம் மற்றும் சமூக அபி விருத்தி என்பனவே அரசாங்கத்தின் முதன்மை குறிக்கோளாக உள்ளது.

இலங்கையின் மீன்பிடித்துறை மற்றும் சூரிய சக்தி உற்பத்தி ஆகியவற்றில் நோர்வேயின் தொழில்நுட்ப உதவியை பெற்றுக் கொள்வது தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

நோர்வேயின் முதலீடுகளை இலங்கையில் செயற்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர், நாட்டில் காணப்படும் பல்லினக் கலாசாரமே நாட்டிற்கு பலமெனவும், அரசாங்கம் ஆரம்பித்துள்ள நல்லிணக்க செயற்பாட்டிற்கு போதிய ஆதரவை வழங்குவோம் எனக் கூறினார்.

அத்துடன், நாட்டின் நல்லிணக்கத்திற்கு வெவ்வேறு பிரிவினர் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதை பார்க்கும் போது அதன் சாத்தியத் தன்மையை காணக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

# சட்டி, முட்டி...

ருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மின்சாரத்தில் இயங்கும் சமையல் அறை மற்றும் கழிப்பறை உபகரணங்கள் பற்றி தன்னிடம் தற்போது விசாரணை நடத்தி வருவதால், இவ்வாறு தான் அவற்றை எண்ணிக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். கண்டி தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டில் இருந்து சாப்பிட்டதையும், பருகியதை பற்றியும் கேட்கின்றனர். இன்னும் ஒரு வருடம் அவர்கள் இது குறித்து தேட வேண்டியேற்படும் எனவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

முன்னைய அரசாங்கத்தின் சில முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட உள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளமை சம்பந்தமாக ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ.

அவர்களின் அரசாங்கம் என்பதால், எவரையும் கைது செய்ய முடியும் எனக் கூறியுள்ளார். எனினும் இவற்றால் தான் தளர்ந்து விட போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளியில் அரசாங்கத்தை விமர்சிக்கும் நீங்கள் நாடாளுமன்றத்தில் ஏன் விமர்சிப்பதில்லை ஏன்ற கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், அவசியமான நேரத்தில் கதைப்பேன் என்றார். எனினும் போராட்டத்தை முன்னெடுக்க புதியவர்கள் நாடாளுமன்றத்தில் உள்ளனர். நான் அவர்களுக்கு இடமளித்துள்ளேன்.

ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியில் இரு ந்து என்னை விரட்ட சிலர் திட்டமிட்டுள் ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான கொள்கை பண்டார நாயக்கவின் கொள்கை.

அனுர பண்டார நாயக்க கூட கட்சியில் இருந்து வெளியேறிய போதும் நான் அந்த கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டேன். எனினும் கலப்படமாகி போனவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியுடன்இணைந்து கொண்டு எமது கட் சியை எதிரியாக அடையாளப்படுத்துகின்றனர்.

நிலைமை இவ்விதமாக சென்றால், எதிர்க்கட்சியின் பணியை நிறைவேற்ற புதிய கட்சி ஒன்று உருவாகும். தற்போதைய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஒன்றில்லை. எதிர்க்கட்சித் தலைவர் கூட இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த உதவியவர்.

எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவியை வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் கூட அரசாங்கத்தை பதவிக்கு கொண்டு வர உதவியதுடன் தேவையான நேரத்தில் அரசாங்கத்தை பாதுகாக்கும் நபர் எனவும் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (எ-11)

# யாழ்.பல்கலையில்...

தற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் தற்போது பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வரும் நிலையில், இத்தொழில்நுட்பவியல் பீடம் அங்கு மேலதிகமாக அமைக்கப்படவுள்ளது. இப்புதியபீடம் பொறியியல் தொழில்நுட்ப துறை உயிர்த்தொகுதி தொழில நுட்பத்துறை மற்றும் பல்துறை கற்கைகள் துறை ஆகியன ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படும் இம்மூன்று துறைகளிற்கு பின்னர் ஏனைய துறைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படவுள்ளன இக்கற்கை நெறிகளுக்கான மாணவர் சேர்க்கை எதிர்வரும் கல்வியாண்டில் நடைபெறும் என யாழ்.பலகலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையில் இப்புதிய பீடத்தின் வரவானது பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் பௌதிகவியல் துறை சார்ந்த வளர்ச்சியில் முன்னேற்றமாக கருதப்படுகின்றது. இதேவேளை தற்போது வெளியாகியுள்ள க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளில் முதல் முறையாக அறிமுகப்படுத்திய தொழில் நுட்ப துறையில் வடகது மாகாண மாணவர்கள் சிறந்த பெறு பேறுகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (எ-4)


வேலைவாய்ப்பு

யாழ், கிளிநொச்சி, சாவகச்சேரி நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office தெரிந்த இருபாலாரிடமிருந்தும் கணினிப்போதனாசிரியர் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தொடர்புகளுக்கு - 0773614572 (சி-3408)

பணியாட்கள் தேவை

தொலைத்தொடர்பு மற்றும் இணைந்த சேவைகளில் பணி புரிவதற்கு கணனி, ஆங்கில அறிவுள்ள பெண் பணியாட்கள் தேவை. நேரில் வரவும் (2.00 மணிக்குப் பின்பு)

செல்வா தொலைத்தொடர்பு நிறுவனம்

124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(பொஸ்கோ பாடசாலை சந்தி (3118)

A/L இல் எதிர்பார்த்த பெறுபேறு இல்லையா

அதனாலென்ன? Still You Can

O/L உடன்

3 - 6 மாத Entry Level கற்கைநெறியுடன் உள்நாட்டு - வெளிநாட்டு கல்வி தொழில் - விசா ஏற்பாடு!

Business / IT / Hotel Management / Media

பிரித்தானிய, அவுஸ்ரேலிய, கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள்

University of Sunderland UK · UNIVERSITY OF WOLLONGONG Australia · UNIVERSITY OF TORONTO Canada

Conditions apply (சி-3412)

கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு · வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு VISA · உத்தரவாதம்*

SIKARAM Edu Solutions

Call or SMS 0773 616 798

மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்

(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய பட்டப்படிப்புகள்

NEW INTAKE 2016

BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA

Hotline 077 710 2131 (சி-3299)

NIRU KONDAVIL

■கலை ■வர்த்தகம் ■தொழில்நுட்பம்

A/L 2018

ஆரம்பம்:-10.01.2016 (சனி 8 மணி)

T.P:-0777960138 (3098)

புவியியல்

| P.S குமரன் | | சனி,ஞாயிறு |
|---|---|---|
| 2016 | Paper class | 8-9 |
| 2016 | கைத்தொழில்கள் | 9-10 |
| 2017 | பிரிவு I | 10-11 |
| 2018 | புதிய பிரிவு | 11-12 |
| 2017 | பாடம் மாறியவர்களுக்கான புதியபிரிவு | 12-1 |

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம். (C-3410)

NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்

A/L 2018

கலை

வர்த்தகம்

தொழில்நுட்பம்

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

T.P-0774696695 (C-3406)

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?

உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737

2மணித்தியாலத்தில் கணினி திருத்தம் Computer Repair

கணினி திருத்தக் கட்டணம் 500/- மட்டுமே!

லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்

கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்

GUNA BEST PC

50/12, Hospital Road, Vairavar Kovil Lane Jaffna.

கணினிபயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம். (சி-3402)

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்...

உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி

பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 11.01 @ 4pm.

கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 13.01 @ 4pm

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre (சி-3317)

ஒவ்வொரு வருடமும் பரீட்சை பெறுபேற்றில் சாதனை படைத்துவரும்

ஞானோதய அக்கடமி

(முருகன் கோவில் அருகாமை) (சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருகாமை)

(இரு இடங்களிலும்)

சங்கத்தானை சாவகச்சேரி

இம்முறை 7 மாணவர்கள் 3A பெறுபேற்றையும் 25இற்கும் மேற்பட்டோர் பல்கலைக்கழக அனுமதி பெற்றதையும் மனதார வாழ்த்துகின்றோம்.

A/L 2018 A/L Day Class

● கலை ● வர்த்தகம் ● தொழில்நுட்பம்

● கணிதம் ● உயிரியல்

ஆரம்பம்:-09.01.2016 சனி-காலை 10 மணி

■ஆண்டு 06 தொடக்கம் ஆண்டு 11 வரையான வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

யாழ்.மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.

(3122) -நிர்வாகம்.

DCM யாழ்நகர் 9 am

A/L கலை, வர்த்தகம் தொழில்நுட்பம்

2018

← ஆரம்பம் →

DCM சுன்னாகம் 3 pm (C-3407)

பொருளியல்

A/L 2018

S.ஜெயக்குமார்

பிரிவு II - நாளை 1.pm

DCM யாழ்நகர் (C-3407)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.